செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

... வள்ளுவர் ஆண்டு ௨00௯, ஐப்பசி (Nov'78) [பரல் ...

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு உ००ச, ஐப்பசி	பரல்
சஅ	நவம்பர் 1973	கூ

திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் எகூ ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருக்குறள் டாக்டர் ஜி. யு. போப் ஆங்கில மொழிபெயர்ப்பு:

இதன் முதற் பதிப்பு ஆக்சு போர்டில் 1886ஆம் ஆண்டில் $22 \times 13\frac{1}{2}$ செ. மீ. அளவில் . அச்சிட்டு வெளியிடப்பெற்றது. அதன்கண் முகவுரையும் பொது முன்னுரையும் 34 பக்கங்களில் உள்ளன. தமிழிலுள்ள 1330 திருக்குறள் பாக்களும் செய்யுள் வடிவில் எழுதப்பெற்ற ஆங்கில மொழி பெயர்ப்பும் 182 பக்கங்களிலும் பின் இணைப்புக்களாக விளக்கக் குறிப்புகள் (Notes) 146 பக்கங்களிலும், திருக்குறளிலும் நாலடியாரிலும் எடுத்தாளப் பெற்ற சொற்களை அகரவரிசையில் தொகுத்துச் சொற்பொருள் விளக்கம் (Lexicon and Concordance) 76 பக்கங்களிலும் அமைந்திருக்கின்றன.

திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பினை இந்தியப் பழம் பொருள் ஆய்விதழில் (Indian Antiquary) வெளியிட்டுள்ளதாக டாக்டர் போப் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளனர். திருக்குறளை மொழி பெயர்ப்பதற்கு முன் $14 \times 7\frac{1}{2}$ செ. மீ. அளவில் அச்சிடப்பெற்ற திருக்குறள் மூலப்படி ஒன்றை வாங்கித் தம் கைப்பட அதிகாரத் தலைப்புகளுக்கு ஆங்கிலம் அமைத்தும் பாக்களின் சீர்களைப் பிரித்துக் காட்டுதற்குக் கோடுகள் இட்டும் வைத்துள்ளனர். அந் நூல் மறைமலை யடிகள் நூல்

நிலையத்திலே அரிய நூல்களுடன் காட்சியாக வைக்கப் பெற்றுள்ளது. இதனைப் பெயர்த்துத் திருத்தமாக எழுதிக் கொண்டே ஆங்கிலமொழி பெயர்ப்பைச் சேர்த்து அச்சிடக் கொடுத்தனர் எனக் கருதுவதில் தவறில்லை.

திருக்குறள் முழுமையினையும் முதன்முதல் ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த பெருமை நம் பெருமதிப்புக்கும் பேரன்புக்கு முரிய டாக்டர் போப் அவர்கட்கே உண்டு. இதற்கு முன் ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப் புகுந்தவர்களெல்லாரும் ஒரு சில அதிகாரங்கட்கும் ஒரு சில பாக்களுக்குமே மொழி பெயர்ப்புச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நூலைச் சென்னையிலுள்ள ஆக்சுபோர்டு பல்கலைக் கழக அச்சகம் (Oxford University Press) என்னும் புத்தக விற்பனைக் கிளை நிலையத்திலிருந்து யான் வாங்கிக் கழகவழி விற்று வந்தேன். நூற்படிகள் யாவும் விற்றுத் தீர்ந்தபின் அந்த நூலின் உரிமை யாரிடம் உள்ளது என்று மேற்படி நிலையத் தார்க்கு எழுதிக் கேட்டேன். அது தமக்கில்லை என்றும், இங்கிலாந்திலிருக்கும் ஆசிரியரின் பேரன் ஜெ. வி. எசு. போப் (J. V. S. Pope) முகவரியைக் குறிப்பிட்டு அவர்க்கெழுதுமாறும் தெரிவித்தனர். அங்ஙனமே அவருக்கு யான் எழுதிய கடிதம் பெற்றுக்கொள்ளப்படாமல் திரும்பி வந்துவிட்டது. போப் திருக்குறளை அச்சிட வேண்டுமென்று 1936இல் முயலத் தொடங்கினேன். பின் 1952இல் சென்னையிலுள்ள பிரிட்டிசு கவுன்சில் (British Council) மேலாளர் ஆசிரியரின் மற்றொரு பெயரன் மேஜர் ஜெனரல் சிட்னி பி. போப் அவர் களின் முகவரியினைக் குறிப்பிட்டு எழுதவே அவருக்குக் கடிதம் என்னால் எழுதப்பெற்றது. அதுவும் திரும்பி வந்துவிட்டது. எங்ஙனமும் போப் குறளை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டு மென்ற எண்ணமட்டும் என் உள்ளத்தில் அகலாதிருந்தது.

ஆசிரியர் 1908இல் காலமானதால் அதிலிருந்து 50 ஆண்டுகட்குப் பின் அச்சிடும் உரிமை அவர் தம் கால் வழிக்கு மட்டுமில்லை என்பதறிந்து கழகவழி அதனை வெளியிடுவான் கருதினேன்.

ஆசிரியரின் முதற்பதிப்பில் பின் இணைப்பாகச் சேர்க்கப் பட்டுள்ள விளக்கக் குறிப்புக (Notes)ளில் அறம், பொருள் ஆகிய இரண்டு அதிகாரங்களை மட்டும் பெஸ்கி என்னும் வீரமா முனிவர் இலத்தின் மொழியில் பெயர்த்துள்ளதும், எல்லிசு துரை 120 குறட்பாக்களை மட்டும் பொறுக்கி எடுத்து எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்பும், மேற்கோளாக இடையிடையே

தாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நாலடியாரிலிருந்து சிற் சில பாக்களும் காணப்படுகின்றன.

எல்லிசு மொழிபெயர்த்த 120 குறட்பாக்களில் மறைமலை யடிகள் நூல்நிலையத்திலுள்ள 1812இல் வெளியிடப் பெற்ற அச்சுப் புத்தகத்திலும் சென்னைப் பல்கலைக் கழகம் 1955இல் வெளியிட்ட பதிப்பிலும் 69 குறட்பாக்களே காணப்படுகின்றன. ஆனால் போப் திருக்குறளின் பின் இணைப்பில் 120 குறட்பாக்கள் காணப்பெறுகின்றன. எல்லிசு ஒவ்வொரு குறளுக்கும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளதன்கீழ் அதன் கருத்தை விரித்து விளக்கிப் பல நூல்களிலிருந்து மேற்கோள்களாகப் பாடல்களை எடுத்து அமைத்து அவற்றிற்கும் ஆங்கிலத்திலே விளக்கம் கொடுத்துள்ளார். அவர் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமற்கிருதம் ஆகிய மொழிகளிலும் புலமையுடையவ ரானமையால் தெலுங்கு, சமற்கிருதம் ஆகிய நூல்களிலிருந்தும் அவ்வம்மொழி எழுத்துக்களிலேயே மேற்கோள்களை எழுதி அமைத்து ஆங்கிலத்திலே விளக்கம் எழுதியுள்ளனர். திராவிட மொழிகள் சமற்கிருதத்திலிருந்து கடன் பெறவில்லை என்பதும், அவை தனிப்பட்ட சீரிய திருந்திய மொழிகள் என்பதும் அவருடைய கருத்துகளாகும்.

டாக்டர் போப் அவர்கட்குக் கிடைக்கப் பெற்ற 120 குறட் பாக்களில் 69 குறட்பாக்கள் போக எஞ்சிய 51 பாட்டுக்கள் எங்ஙனமோ எல்லிசு குறள் நூற்பதிப்பில் இடம் பெறுமல் ஒழிந்து போயுள்ளனவெனக் கருதவேண்டியதாகிறது.

போப் திருக்குறள் கழகப் பதிப்பு

இது 1958 மே திங்களில் $18\frac{1}{2} \times 12\frac{1}{2}$ செ. மீ. அளவில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. டாக்டர் போப் குறளுக்குச் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பு செய்யுள் வடிவில் அமைந் திருப்பதால் சில சொற்கள் பொருட்செறிவுமிக்கனவாயிருத் தலின் ஆங்கிலங் கற்றவர்கள் எவரும் எளிதிலே புரிந்து கொள்ள முடியாதாகலான் உரைநடை (Prose) யில் தவத்திரு துரு பாதிரியார் முதல் 63 அதிகாரங்கட்கு எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பையும், தவத்திரு லாசரசு பாதிரியார் ஏனைய 70 அதிகாரங்கட்கு எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பையும் சேர்த்து அச்சிடக் கருதினேன். எனவே ஒவ்வொரு குறளுக்கும் போப் எழுதிய செய்யுள் மொழிபெயர்ப்பினை அமைத்தும் அடுத்து உரைநடை மொழிபெயர்ப்பினை அமைத்தும் அச்சிடலானேன். பின் இணைப்பில் எல்லிசு துரை (F. W. Ellis) 120 குறட்பாக் களுக்குச் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பு சேர்க்கப்பெற்

றுள்ளது. திருக்குறளில் அமைந்துள்ள சொற்களை அகர வரிசைப்படுத்தி அவற்றிற்கு நேரான ஆங்கிலச் சொற்களை அமைத்துத் தமிழ் ஆங்கில அகர வரிசை (glossary) அச்சிடப் பெற்றிருக்கிறது. டாக்டர் போப் எழுதிய முகவுரையும் முன்னுரையும் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. சென்னை உயர் நீதிமன்ற நடுவராகவிருந்த மாட்சிமைமிகு வி. சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய 'அணிந்துரை' நூலுக்கு அணிசெய்கிற தென்று சொன்னால் அது மிகையாகாது.

இந்நூல் இரண்டுவகைக் கட்டடங்களைக் கொண்டது. அவற்றில் ஒன்று பஞ்சு பொதிந்து உயர்ந்த ரெக்சைன் கட்டடம் செய்யப்பெற்ற பரிசுப் பதிப்பாகும். இப்பரிசுப் பதிப்பினை வெளி நாடுகளுக்குச் செல்லும் அறிஞர்கள் தம் நண்பர்களுக்கும் பெரு மக்களுக்கும் பரிசளிப்பதற்கு வாங்குகின்றனர்.

இங்கிலாந்து அரசி எலிசபெத் அம்மையார் 19-2-1961இல் சென்னை மாநகரில் பவனி வந்து அரச மாளிகை(Raja Bhavanam) யில் தங்கியிருந்தனர். 20-2-1961இல் டாக்டர் போப் திருக் குறளை உயர்ந்த சிவப்பு ரெக்சைனில் பஞ்சு வைத்துக் கட்டடஞ் செய்தபின் அந்நூல் அமைப்பதற்கேற்ற புத்தக வடிவிலுள்ள மரப்பெட்டகம் (Casket) ஒன்று வாங்கப்பெற்றது. உள் பக்கம் வெல்வட் பட்டுத்துணி ஒட்டி அதன்கண் பரிசு நூலும், திருக்குறளைப் பற்றியும் டாக்டர் போப்பையரைப் பற்றியும் அச்சிடப் பெற்ற இரண்டு குறிப்பேடுகளும் உள்ளே அழகுற வைக்கப்பெற்றன. பரிசளிப்பு பற்றிய குறிப்பு பொறிக்கப் பெற்ற அழகிய வெள்ளித் தகடு பெட்டகத்தின் முதுகில் பதிக்கப் பெற்றது. கழகம் வழங்கிய உலகப் பொதுமறைப் பரிசு 20-2-1961 மாலை அரச மாளிகையில் மாட்சிமை நிறைந்த எலிசபெத் அரசியார்க்கு அரசு வழங்கிய கவர்ச்சிமிக்க பல்வகைப் பரிசுப் பொருள்களுள் தனியிடம் பெற்றுள்ளது.

சாகித்திய அக்காடமி செயலர் திரு கே. ஆர். கிருபாளனி அவர்கள் 17—6—58இல் எழுதிய கடிதத்தில் "தாங்கள் அனுப்பிய போப் திருக்குறள் 6 படிகளும் கிடைத்தன. அவை மிகவும் மனத்தைக் கவர்கின்றன. உலக நாடுகள் கல்வி—அறிவியல்—பண்பாட்டுக் கழகத் (Unesco)துக்கு அதனை அனுப்பிவைக்க விரும்புவதால் அன்பு கூர்ந்து இன்னொரு படி அனுப்புமாறு விரும்புகிறேன்" என்று எழுதியுள்ளனர்.

(தொடரும்)

வ. சு.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

(முன் பரல் எகூஆம் பக்கத் தொடர்ச்சி)

நுல்[5] (நீட்சிக் கருத்து வேர்)

நீட்சிக் கருத்து நெகிழ்ச்சிக் கருத்தின் வழிநிலைக் கருத்தே. நிற்றற் கருத்தும் நடத்தற் கருத்தும் நீட்சிக் கருத்தினின்று தோன்றும்.

நுல்—நெல்—நெள்—நெகு—நெகிழ் (நெகிள்)—நீள்.

ஈயமும் மெழுகும் போல்வன உருகியும், களியும் களி மண்ணும் போல்வன நீர்கலந்தும், நெகிழும்போது நீளுதல் காண்க.

1. நீடல் நீளுதல் = 1. நீளமாதல். 2. பெருமை யுறுதல் ''நீள்கழற் கன்பு செய்வாம்'' (கந்தபு. கடவுள் வா. 2) 3. ஓடு தல். (திவா). ம. நீளுக. க. நீள்.

ஓடுதலாவது இயக்கத்தால் (செலவால்) விரைந்து நீளு தல். ஒ. நோ: படர்தல் = பரவுதல், செல்லுதல். ''கம்பியை நீட்டி விட்டான்'' என்னும் உலக வழக்கையும் நோக்குக.

நீள் = 1. நீளம். 2. நெடுங்காலம் (காலநீட்சி). ''நீடுங் காய்'' (கலித். 131). 3. உயரம் (மேனோக்கிய நீட்சி). 4. ஆழம் (கீழ் நோக்கிய நீட்சி). ''நீணிலைக்கூவல்'' (கல்லா. 12). 5. ஒழுங்கு (நேர்வரிசை நீட்சி).

நீள = 1. நெடுந்தொலைவாக. 2. நெடுங்காலமாக. ''நீள நினைந்தடியே னுமைநித்தலுங் கைதொழுதேன்'' (தேவா. 825:1). நீள—நீளக்க (உ. வ.) 1. நெடிதாக 2. நெடுந் தொலைவாக. 3. நெடுங்காலமாக. நீள்—நீளம் = 1. நெடுமை. ''நீளம்பெறுங் கண்களே'' (திருக்கோ. 109). 2. தொலைவு. (பிங்.) ''கையானீளமாப் புடைப்ப'' (சீவக. 2248). 3. காலத் தாழ்ப்பு.

நீளங்கடை = நாட்செல்லுகை. (யாழ். அக.) ம. நீளம், க. நீள.

நீள்—நீளி. நீளித்தல் = 1. நீளுதல். 2. நெடுங்கால மிருத்தல். 3. காலந்தாழ்த்தல்.

நீளி = 1. நெடியவன். 2. நெடியது. நீள்—நீளை = காற்று (நீண்டு இயங்குவது). (பிங்.)

நீள்—நீளல்—நிழல்=காற்று. (திவா).

நீள்—நீட்சி—நீட்சிமை=நீட்டம்.

நீள்—நீட்பு—நீட்பம்=நீளம்.

நீள்—நீண்டவன்=திருமால் (குறள் தோற்றரவில் வானளாவ வுயர்ந்தவன்). "நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனின்" (கம்பரா. குகப். 41). நீண்டாயம்=நீளம். (யாழ். அக).

நீள்—நீண்மை=பழைமை. "நீண்மைக்கணின்று வந்த நிதியெலாந் தருவல்" (சீவக. 1119).

நீள் — நீண். நீணுதல் = நெடுந்தொலை செல்லுதல். "தண்டாமரையானு நீணுதல் செய்தொழிய நிமிர்ந்தான்" (தேவா. 62:9).

நீள் — நீட்டு (பி. வி.) நீட்டுதல்=1. நீளச்செய்தல். நாக்கை நீட்டு. (உ. வ.) 2. பக்கவாட்டில் நீளக்காட்டுதல். கையை நீட்டு. (உ. வ.) 3, கை நீட்டிக் கொடுத்தல். 4. பரிசிலளித்தல். "பாடிய புலவர்க்குப் பரிசினீட்டினின்று" (பு. வெ. 3 : 16, கொளு). 5. காணிக்கை படைத்தல் "தளிகை நீட்டினதெல்லாம்" (திருவிருத், 33, பக். 204). 6. நீண்ட பொருளைச் செருகுதல். "குருதிவாள் ..... புண்ணுணீட்டி" (சீவக. 2293). 7. நீளப் பேசுதல். 8. நீள இசைத்தல். 9. காலந்தாழ்த்தல்.

நீட்டு—நீட்டல்=1. நீளச்செய்தல். 2. குறிலை நெடிலாக இசைத்தல். "நீட்டும்வழி நீட்டலும்" (தொல். எச்ச. 7) 3. நீட்டி யளத்தல். "முகத்த னீட்டல்" (நன். 368). 4. தலைமயிரைச் சடையாக வளர்த்தல். "மழித்தலு நீட்டலும் வேண்டா" (குறள். 280). பெருங்கொடை. (பிங்).

நீட்டு—நீட்டம்=1. நீட்டுகை. "வெள்ளத் தனைய மலர் நீட்டம்" (குறள். 595). 2. ஓசை நீட்சி. "நீட்டம் வேண்டின்...... கூட்டி யெழூஉதல்" (தொல். எழுத். 6). 3. காலந்தாழ்ப்பு. "நிலைமை யறிய நீட்டமின்றி" (பெருங். மகத. 23 : 51).

நீட்டு=1. நீளவாட்டு. ஆவணம் நீட்டில் மடித்திருந்தது. (உ. வ.) 2. நீட்டோலை. "நீட்டோலை வாசியா நின்றான்" (மூதுரை, 13). 3. தொலைவு. "மதுரை நீட்டைந்து கூப்பிடு" (திருவாலவா. 26 : 8), நெடுநீட்டு=பெருந்தொலைவு.

நீட்டு— நீட்டி. நீட்டித்தல்=1. நீளச் செய்தல். கம்பியை நீட்டிக்க வேண்டும். (உ. வ.) 2. நீட்டிப் பேசுதல், பேச்சை

நீட்டிக்கிருன். (உ. வ.) 3. காலந்தாழ்த்தல். "தீம்பால் பெருகு மள வெல்லா நீட்டித்த காரணமென்" (கலித். 83). 4. நெடுங் காலம் நிலைத்தல். "இவ்வுடம்பு நீட்டித்து நிற்குமெனின்" (நாலடி, 40).

நீள்—நீடு. நீடுதல்=1. நீளுதல். 2. ஒலி நீளுதல். "ஒற்றிசை நீடலும்" (தொல், எழுத். 33). 3. பெருகுதல். நீடிய செல்வம். (w). 4. மேம்படுதல். "நிலைமை நீடுத றலைமையோ வன்றே" (ஞானபாயி. 3). 5. காலந்தாழ்த்தல். "நீடன்மின்வாரு மென்பவர் சொற்போன்றனவே" (பரிபா. 14 : 9). 6. நீண்ட நேரம் அல்லது காலம் தங்குதல். "அளி நீடளகம்" (திருக்கோ. 122). 7. நிலைத்தல். ம. நீடுக, க. நீடு, தெ. நெகெடு (g) நீடு=1. நெடுங்காலம். "நீடுவாழ்கென் பாக் கறிந்து" (குறள். 1312). 2. நிலைத்திருக்கை, "நிலமிசை நீடுவாழ்வார்" (குறள். 3).

நீடு—நீடி. நீடித்தல்=1. நீளுதல். வாழ்நாள் நீடிக்கும். (உ. வ.) 2. நிலை நிற்றல்.

நெள்—நெடு=1. நீண்ட. "வேனெடுங் கண்கள்" (சீவக. 1951). 2. பெரிய "புரவலனெடுங்கடை குறுகிய வென்னிலை" (பு. வெ. 9 : 2, கொளு). 3. பெருமை பெற்ற. "நீங்கிய தாங்கு நெடுந் தெய்வந் தானென்" (மணி. 10 : 93). 4. ஆழ மான. "நெடும்புனலுள் வெல்லும் முதலை" (குறள். 495). 5. உயரமான "நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ் சுவரே" (கம்பர் தனிப்பாடல்). 6. மிகுந்த. "நெடுமிடல் சாய" (பதிற்றுப். 32 : 10). 7. நீண்டகால. நெடும்பகை. (உ. வ.). 8. காலந்தாழ்க்கும். "நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்" (குறள். 605). 9. புகழ்ச்சியான "மாராயம் பெற்ற நெடு மொழி யானும்" (தொல். புறத். 8).

நெடுமை=1. நீளம். குறுமையு நெடுமையு மளவிற் கோடலின் (தொல். மொழி 17). 2. உயரம். "நெடுமையா லுலகேழு மளந்தாய்" (திவ். பெரியாழ். 5 : 1 : 4.

நெடு—நெடுமன்=1. நீண்டது. 2. பாம்பு. (யாழ். அக).

நெடு—நெடுவல்=நெடிய ஆள். (யாழ். அக.) நெடுமி= 1. நெடியவள். (யாழ்ப்). 2. ஓங்கி யுயர்ந்த மரம். (யாழ்ப்).

நெடு — நெடுகு. நெடுகுதல்=1. நீளுதல். 2. ஓங்கி வளர்தல். 3. நீடித்தல். 4. கடந்துபோதல். 5. சாதல். (w).

நெடுகு—நெடுக (வி. எ.)=1. நீளமாக. 2. நேராகத் தொடர்ந்து. நெடுகப்போ. (உ. வ.) 3. முழுத் தொலைவும். வழி நெடுக மழை பெய்தது. (உ. வ.).

நெடுக—நெடுகல்—நெடுகலும்=காலம் முழுதும். நெடுகலும் களவாடியே வந்திருக்கின்ருன். (உ. வ.)

நெடுகு—நெடுக்கு=1. நீட்சி. 2. நீளவாட்டு. நெடுக்குச்சுவர். (உ. வ.)

நெடுக்கு—நெடுக்கம்=நெடுமை. ம. நெடுக்கம். நெடுக்கு—நெடுங்கு=நீட்சி.

நெடு—நெடுப்பு — நெடுப்பம்=நீட்சி. (W) ம நெடுப்பு, தெ. நிடுப்பு.

நெடுந்தகை=1. பெரிய மேம்பாடு. (பு. வெ. 46). 2. பெரிய மேம்பாட்டாளன். (பு. வெ. 27). 3. பெரிய நிலையையுடையவன். (பு. வெ. 79. கொளு). 4. அளத்தற்கரிய தன்மையை யுடையவன். (பு. வெ. 191).

நெடு நெடுத்தல்=மிக நீண்டிருத்தல். (யாழ். அக.) நெடு நெடுகுதல்=மிக நீண்டிருத்தல். (யாழ்ப்.) நெடு நெடெனல்=நெடு வளர்ச்சிக் குறிப்பு நெடு—நெடி. நெடித்தல்= 1. நீட்டித்தல். 2. காலந்தாழ்த்தல். “நெடியா தளிமின்” (சிலப். 16 : 21).

நெடி—நெடிப்பு = நெடுநேரம். “நெடிப்புறச் சானமுற்றிருந்து” (சேதுபு. பராவசு. 37).

நெடிது=காலந்தாழ்த்து. “நெடிது வந்தன்ரு னெடுந்தகை தேரே” (புறம். 296).

நெடியோன்=1. நெட்டையன். 2. குறள் தோற்றரவில் நெடிதாக வளர்ந்த திருமால். “செங்கணெடியோன் நின்ற வண்ணமும்” (சிலப். 11 : 51). 3. பெரியோன். “முந்நீர் விழவி னெடியோன்” (புறம். 9). நெடியன்—க. திடியன்.

நெடு—நெடில்=1. நீளம். (திவா). 2. நீளமானது. 3. நெட்டெழுத்து. “குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்” (தொல். செய். 3). 4. பதினைந்து முதல் பதினேழெழுத்து வரை கொண்ட கட்டளை நெடிலடி.

> “மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
> ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.”
>
> (தொல். செய். 38).

5. ஐஞ்சீரடி, "அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்" (யாப்பருங். 24). 6. மூங்கில், "நெடில் படுத்த வெங்கானம்" (வில்லி. பா. வேத். 10).

நெடு – நெட்டு = 1. நெடுமை. 2. நெடுந்தொலைவு. "நெட்டிலே யலையாமல்" (தாயு. மலைவளர். 2). 3. ஓரிடத்திற்குப் போய்த் திரும்பும் தடவை. (W.). 4. உப்பு மேடை. (C. G). 5. செருக்கு. "நெட்டது செய்யலாகாது காணும்" (இராமநா. உயுத். 23). 6. குலை. (W.). 7. ஒட்டாரம். ஒரு நெட்டிற்கு நிற்கிறான். (உ. வ.) 8. காம்பு. (யாழ்ப்.).

நெட்டு—நெட்டம் = 1. நெடுமை. 2. செங்குத்து.

நெட்டு—நெட்டங்கம் = 1. செருக்கு. அவனை நெட்டங்கமுடைக்கிறான். (உ. வ.). 2. பழித்துரை. "பொட்டான தேவர்களும் நெட்டங்கம் படிப்பாரே" (இராமநா. உயுத். 82).

நெட்டு—நெட்டாங்கு = 1. நீளவாட்டு. 2. செருக்கு. 3. பழித்துக் காட்டுகை.

நெட்டு—நெட்டில் = மூங்கில் (மலை.).

நெடு—நெட்டை = 1. நெடுமை. "நெட்டைக் குயவற்கு" (திருப்பு. 1038). 2. ஒருவகைப் படைக்கலம். (பதிற்றுப். 42 : 3, உரை). 3. முழுவெலும்புக் கூடு. (சது.).

க. நெட்டனெ, தெ. நிட்ர.

நெட்டோலை = திருமுகம். "அமணர் தங்கள்பாற் செல்ல விட்டான் கட்டி நெட்டோலை" (திருவாலவா. 26 : 2).

நெட்ட நெடுமை = மிகு நீளம். "அட்டம் வளராது நெட்ட நெடுமை கொண்டன" (தக்கயாகப். 406, உரை)

நெடு—நடு. நடுதல் = 1. மேனோக்கிய நீளவாட்டில் ஊன்றுதல். "நடவந்த வுழவரிது" (தேவா. 133: 8). 2. அழுந்தவைத்தல். "திருவடியென் றலைமே னட்டமையால்" (திருவாச. 40 : 8). 3. நிலைநிறுத்துதல்.

ம. நடுக, க. நடு, து. நட்பினி, தெ. நாட்டு.

நடு—நடவு = 1. நாற்றைப் பிடுங்கி நடுகை. "பேர்த்து நடவு செய்குநரும்" (திருவிளை. நாட்டுப். 20). 2. நட்டபயிர். தண்ணீரில்லாமல் நடவு காய்கிறது. (உ. வ.) 3. நடவு கணக்கு. (R. T.)

நடு—நட்டு. நட்டுதல்=கல் கம்பு தூண் முதலியவற்றை ஊன்றுதல். "நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பஞ் சாத்தியே" (சிவவாக்கியர் பாடல்).

இச் சொல் சென்னைப் ப. க. க. த. அகர முதலியில் இல்லை.

நட்டு—நாட்டு. நாட்டுதல்=1. நிறுவுதல். "கற்பசு நாட்டி" (திருவாச. 9 : 3). 2. நிலைநிறுத்துதல். "சிலப்பதி கார மென்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" (சிலப். பதி. 60). 3. நீடு வாழவைத்தல். 4. படைத்தல். "மண்ணாட்டுநர் காக்குநர் வீட்டுநர் வந்த போதும்" (கம்பரா. நகர்நீ. 122). 5. எழுதுதல். "இவன் நம்முடையான் என்று அங்கே நாட்டு என்று" (ஈடு, 4 : 5 : 2).

கை நாட்டுதல்=1. கையெழுத்திடுதல். 2. தற்குறி கீறுதல்.

நெட்டுக் குத்து—நட்டுக் குத்து.

நெட்டு—நட்டு=உப்புக் கொட்டி வைக்கும் மேடை. (C. G.). தெ. நட்டு.

ஒரு கிளைக் கருத்துத் தொடர்

நீள்—நீர்=நீண்டு செல்லும் புனல். ம. நீர், நீரு, க. நீர், தெ. நீர்லு.

நீர்—நீரம்=புனல். (பிங்.). நீரம்—வ. நீர.

நீர்—ஈர்=ஈரம். "ஈர்நறுங் கமழ்கடாஅத்து" (கலித். 21). 2. பசுமை. "இருவெதி ரீர்ங்கழை" (மலைபடு. 207). 3. நெய்ப்பு. "ஈர்பெய்யுந் தளிரொடு" (கலித். 32). 4. இனிமை. "ஈர்ங்கொடிக்கே" (திருக்கோ. 28), 5. கரும்பு. (மலை.).

நீரம்—ஈரம்=1. நீர்ப்பற்று. "ஈரம் புலராக் கரத் தோருக்கு" (வில்லி. பா. திரௌபதி. 97). 2. குளிர்ச்சி. (சூடா.). 3. பசுமை. 4. அருள். "மலைநாட னீரத்தூள்" (கலித். 41). 5. நயனுடைமை. "எதிர்பெய்து மறுத்த வீரத்து மருங்கினும்" (தொல். கற்பியல், 6). 6. அன்பு. "ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு" (மூதுரை. 2).

ம. ஈரம், க. ஈர, தெ. ஈமிரி.

நீர்=1. புனல். ''நிலந்தீ நீர்வளி'' (தொல். மர. 90). 2. சாறு. ''கரும்பினை......யிடித்துநீர் கொள்ளினும்'' (நாலடி. 156). 3. சிறுநீர். ''இவ்வெல்லையி னீர்பெய்து யான் வருகாறும்'' (பிரமோத். 2: 50). 4. கடல். ''நீரொலித்தன்ன'' (மதுரைக். 369). 5. ஈரம். (W). 6. குளிர்ந்த தன்மை. 7. தன்மை. ''அன்ன நீரார்க்கே யுள'' (குறள். 527). 8. நீர்ப் பொருள்.

நீர்—நீர்மை=1. நீரின் தன்மை. (குறள். 195, உரை). 2. சிறந்த தன்மை. ''நீர்மையுடையார் சொலின்'' (குறள். 195). 3. தன்மை. ''நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்'' (குறள். 17). 4. அழகு. ''மெய்ந்நீர்மை தேற்றாயே'' (திவ். திருவாய். 2 : 1 : 6). 5. நிலைமை. ''என்னீர்மை கண்டிரங்கி'' (திவ். திருவாய். 1 : 4 : 4).

நீர் நிறம் = நீல்நிறம். ''கானக் கோழியும் நீர் நிறக் காக்கையும்'' (சிலப். 10 : 116).

நீர்—நீல்=1. நீலம். ''நீனிற மஞ்ஞையும்'' (சிலப். 12 : 34). 2. கருமை. (சூடா.). 3. கருங்குவளை. ''நீலித முண்கண்ணாய்'' (கலித். 33 : 28). 4. அவுரி.

நீல்—நீலம்=1. நீலநிறம். (திவா.). ''நீலத் திரைக்கடலோரத்திலே'' (பாரதியார் பாடல்). 2. நீலச்சாயம். 3. தொண் (நவ) மணிகளுள் ஒன்று. (பிங்.). (திருவாலவா. 25 : 18). 4. கருங்குவளை. (திவா.). ''நீலமொடு நெய்தனிகர்க்குந் தண்டுறை யூரன்'' (ஐங்குறு. 2). 5. நீலமலை. (பிங்). 6. நீல ஆடை. ''பூங்கரை நீலந் தழீஇ'' (கலித் 115). 7. கருமை. (திவா.). ''செங்கை நீலக் குஞ்சி நீங்காதாகலின்'' (மணி. 22 : 154). 8. கண்ணிலிடும் மை. ''நீலமிட்ட கண் மடவியர் மயக்கால்'' (அருட்பா, ii, கருணைபெருதிரங். 7). 9. இருள். (திவா.). 10. துரிசு. (மூ. அ.). 11. நஞ்சு. ''நீறேறு மேனியார் நீலமுண்டார்'' (தேவா. 226 : 9).

நீலம்—வ. நீல.

நீலம் — நீலன் =1. காரி (சனி). (திவா.). 2. கொடியவன். ''நிவர்த்தியவை வேண்டு மிந்த நீலனுக்கே'' (தாயு. பன்மாலை. 6). 3. ஒருவகைச் சம்பா. 4. ஒருவகை மாங்கனி. 5. ஒருவகைக் குதிரை.

நீலா =அவுரி. (சங். அக.).

நீலி=1. காளி. (பிங்.). 2. மலைமகள். (பிங்.). "நீலி யோடுனை நாடொறு மருச்சித்து" (சிவப். பிரபந். சோண. 55). 3. கொடியவள். 4. பழையனூர் நீலி. "மாறுகொடு பழைய னூர் நீலிசெய்த வஞ்சனையால்" (சேக். பு. 15). 5. நீலப் பூ வகை. 6. அவுரி. 7. அவுரி. 8. கருநொச்சி. 9. துரிசு.

நீலர்=அரக்கர். (நாமதீப. 73).

2. நிற்றல்

நீள்—நிள்=நில்.

ஒ. நோ: நெருநாள்—நெருநல்—நெருநற்று—நேற்று.

நெருநல் — நென்னல் — நென்னற்று — நென்னேற்று. நிற்றல்=1. உடம்பு முழுதும் நெடிதாக நிமிர்ந்திருத்தல். "நின்று னிருந்தான் கிடந்தான்" (நாலடி. 29). 2. மேற் செல்லாதிருத்தல். "நில்லடா" (கம்பரா. நாகபாச. 73). 3. ஒழுக்கத்தில் உறுதியாயிருத்தல். "வீடுபெற நில்" (ஆத்தி சூடி). 4. நிலைத்திருத்தல். "என்வலத்தில் மாறிலாய் நிற்க" (பெரியபு. கண்ணன். 185). 5. இடங் கொண்டிருத்தல். "குற்றிய லிகர நிற்றல் வேண்டும்" (தொல். எழுத் 34). 6. வேலை யொழிதல். வேலை நின்றுவிட்டது. (உ. வ.). 7. அடங்கி யமைதல். "சாயவென் கிளவிபோற் செவ்வழியா ழிசைநிற்ப" (கலித். 143 : 38). 8. எஞ்சியிருத்தல். "நின்ற திற் பதினையாண்டு" (திவ். திருமாலை. 3.). 9. காலந்தாழ்த் தல். "அரசன் அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும்." 10. நீடித்தல். (பழ.).

ம. நில்க, க. நில்.

நில் (ஏவல் வினை)=1. பொறுத்து நிற்றல். "நில், வரு கிறேன்" (உ. வ.). 2. வினைசெய்யாது விடுதல். "நில்லு கண்ணப்ப!" (பெரிய பு. ஆறுமுக. உரைநடை. பக். 97). "கண்ணப்ப நிற்க" (பெரியபு. கண்ணப்ப. 183).

(தொடரும்)

எண்ணும் எழுத்தும்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. குறள்—392

குருதி அமுத்தம்

[சோதிடக் கலையிலும், சித்த ஆயுர்வேத மருத்துவக் கலையிலும் வல்ல
இலங்கை முருகவேள் பாலசுந்தரம், பி. ஒ. எல். (ஆனர்சு)]

நம் சித்த மருத்துவர்களிடையே குருதி அமுத்தம் பற்றி மாறுபட்ட பல கருத்துகள் ஏற்பட்டிருப்பதைக் காண்கின்றோம். சிலர் இதைக் குருதிப் பித்தமென்றும் சிலர் இதைக் குருதி வாதமென்றும் வேறுசிலர் இதைக் கடைசி நாளைக் குறிக்கும் மரண வாதம் என்றும் கூறுகின்றனர். இதிலிருந்து இன்றையவரை குருதி அமுத்தம் எதுவென்று திட்டமாய் அறியாது தவிக்கின்றனர் என்றே கூறவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இஃது இவ்வாறு இருக்கப் பொதுமக்களிடையேயும் ஓர் பிழையான கருத்து இருப்பதையுங் காண்கிறோம். தமிழ் மருத்துவர்களுக்குக் 'குருதி அமுத்தம்' என்ற பிணி பற்றித் தெரியாது என்றும், அது மிகவும் அண்மைக் காலத்திலேதான் அறிவியலறிஞர்களாற் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டது என்றும் கருதும் கருத்தொன்று நிலவிக் குலவியுள்ளது.

குருதி அமுத்தத்தின் பழைய தோற்றம் இறைவனாற் படைக்கப்பட்ட மனித உடற்கருவியின் அரச கருவிகளான நெஞ்சப்பை (இரத்தாசயம்), மூச்சுப்பை (சுவாசாசயம்) என்னுமிரு உறுப்புக்களையும் தழுவியே குருதி அமுத்தம் உண்டாகிறது.

முன்பு கூறியுள்ள இரு உறுப்புக்களும் தொடர்புபட்ட நோயே குருதி அமுத்தம் என்ப. உடற்கூற்றியலில் கூறியபடி மனித உடலிலுள்ள நிலையான குருதி (86) எண்பத்தாறு பலம். அஃதாவது (14) பதினான்கு இராத்தல் (பவுண்டு) அல்லது (3) போத்தல். அப்படியிருந்தும் நெஞ்சப்பையோ வென்றால் நாளொன்றுக்குப் பதினெட்டு (18) தொன் (டன்) பழைய குருதியை நெஞ்சப்பைக்குத் தூய்மை செய்வதற்கு அனுப்பிக்கொண்டே இருக்கிறது. அதிற் கரியமும் (கரியமிலமும் - Carbon) சேருமானால் அஃது எப்படி வேலை நிறுத்தம் செய்யாதிருக்கமுடியும்? அது காரணமாகவே அது தன் வேலையைச் சரிவரச் செய்யமுடியாத நிலையேற்படுகிறது. அப்போது இயல்பான அளவிலுங் குறைந்த அளவு துடிப்பிருக்குமாயின் அதுவே குறைந்த குருதி அமுத்தம் (Low Blood Pressure) எனப்படும். கூடுதலாயிருப்பின் கூடிய குருதி அமுத்தம் (High Blood Pressure) எனப்படும். ஆகையால், குருதியிலுள்ள கரியம் (Carbon) அஃதாவது கரியத்தின் கூடுதல் காரணமாகவே குருதி அமுத்தம் (Blood Pressure) ஏற்படுகிறது. ஆகையால், கரியத் (கரியமில வாயு)தை நமது உடம்பிலதிகரிக்காது பாதுகாக்க வேண்டும். பாதுகாக்கும் வழிவகைகளை நம் அறிவர்கள் (சித்தர்கள்) நமக்கு அறிவித்துப் போந்தனர்.

நாமுண்ணும் உணவுகளில் எண்ணெய் அஃதாவது கொழுப்புச் சத்தில் நிறையக் கரியம் இருப்பதை அறிவோம். உப்பு குருதி நரம்புகளில் அரிப்பை யுண்டாக்கி விடுகிற தென்பதுந் தெரிந்ததே! ஆதலாலதற்கு எண்ணெய்ச் சத்து அதிகமில்லாமல் உப்பைக் குறைத்துக் கொள்வதால் குருதியில் ஏற்படும் அழுக்கு குறைவடைகிறது. அதனுல் நெஞ்சப்பைக்கும், மூச்சுப்பைக்கும் தூய்மை செய்யும் தொழில் குறைந்து இலகுவா கின்றது. மேற்படி இரு உறுப்புக்களின் வேலையும் குறையக் குருதி அழுத்தத்தின் வேகங்களும் குறைந்து சமனடையும் அல்லவா? குருதி அழுத்தம் எல்லார்க்கும் உண்டு. அது இன்றேல் நாடித் துடிப்பே நின்றுவிடும். ஆனல், அஃது கொதிப்பதாகவும் அழுத்தமாகவும் (Pressure) குருதி அழுத்த மாகித் துன்புறுத்தும்போதுதான் மேற்படி நோயென்று தெளி வாகத் தெளிந்து அறியப்படுகிறது. இதை என்ன நோயென்று அறியாமையாலே சூல்கொண்டவர்களுக்குங்கூடக் குருதியோட்ட மதிகரிப்பதைக் கண்டு அதையும் குருதி அழுத்தம் என்று கூறி அச்சமுண்டாக்கிவிடுவது மனவருத்தப்படத்தக்கதே. ஆனல் இதையிட்டு நம் சித்த மருத்துவ அறிஞர்கள் செய்துள்ள ஆராய்ச்சி மிகவும் எளிதாகவும் தெளிவாகவும் விரிவாக வும் இருப்பதைக் காண்கிரும். அவர்கள் அதைக் குருதிப் பித்தம், குருதிவாதம் என இருவகைகளாகப் பிரித்துக் குருதிப் பித்தம் (High Blood Pressure) கூடிய வேகக் குருதி அழுத்தம் எனவும், குருதிவாதம் (Low Blood Pressure) குறைந்த வேகக் குருதி அழுத்தமெனவும் ஆய்ந்து அறிந்து அதனைத் தணிக்கும் வகைகளுங் கூறியிருப்பதை அவர்கள் எழுதி வைத்த செப்பேடு களின் வாயிலாகக் காணக்கூடியதாக இருப்பது பெருமிதத் தோடு பெரிதும் பாராட்டற்குரியதே.

குருதிப்பித்தம்	குருதிவாதம்	(Blood Pressure)
குருதிப் பித்தம் } குருதிக் கொதி }	கூடிய வேகக் குருதி அழுத்தம்	High Blood Pressure
குருதி வாதம் } குருதி அழுத்தம் }	குறைந்த வேகக் குருதி அழுத்தம்	Low Blood Pressure

ஆகவே குருதிக்கொதி, குருதி அழுத்தமென இரு வகைகள் உண்டென்பது புலனுகின்றதல்லவா? இத்தகைய கொடிய நோய் உண்டாவதற்குரிய தேவையான பெரும் கார ணங்களை அறிவர்கள் ஆகிய சித்தர்கள் அறிவித்துப் போயினர்.

குருதி அழுத்தம் உண்டாகக் காரணம் :

தூக்கங் கெடுதல், பசி இருத்தல், போதியவளவு உறக்க மில்லாமை, குறித்த நேரத்திற் சாப்பிடாமை, உணவு

உண்ணுமை, பித்தவாதம் கூடுதல், ஈரல் சரிவர வேலை செய்யாமை, செரிமானமின்மை, சினம், அச்சம் முதலிய காரணங்களாலும் குருதிக் குறைவு, குருதியின் அமைப்பில் ஏற்படும் மாறுதல்கள்.

குருதி அழுத்தத்தில் ஏற்படும் மாறுதல்கள் முதலிய காரணங்களாலேயும் குருதி அழுத்தம் ஏற்படுவதாய் அறியக் கிடக்கிறது.

குருதிப்பித்தம் (High Blood Pressure):

பித்தம் மிஞ்சிப் பித்த வாயுவும் அதிகரித்துக் குருதிக்குழாய் களில் துடிப்பும் அதிகரிப்பதால் இது ஏற்படுகிறது. இவ் வதிர்ச்சி காரணமாகக் குண்டிக்காய்களி லுண்டாகுஞ் சூட்டினுல் குருதி நொய்மை (இலேசு) யுற்று வலிவடைந்து குருதி ஓட்டம் விரைவு அடைகிறது. இதுவே (High Blood Pressure) கூடிய வேகக் குருதி அழுத்தம்.

இதனுல் தலை சுழற்றல், தலைக் கனம், மயக்கம், தலைவலி, வாந்தி முதலிய குணங்கள் ஏற்படுகின்றன. இது பித்தக்கொதி, குருதிக்கொதி யெனவும் கூறப்படுகிறது. இதைப் பித்தத் தணி வுக்குச் செய்யும் மருத்துவ முறைகளிலேயே நிறுத்தி விடலாம். இது தற்காலிகமானதே! அது குருதிக்கொதியானுல் குருதி யாகவே சத்திக்கவுஞ் செய்யும். அஃது உடனடியாக நிறுத்தப் படவேண்டும்.

"இன்பூறலிருப்பதை அறியாமல்
இரத்தம் கக்கிச் செத்தானும்"

என்பது முதியோர் வாக்கு. இன்பூற லென்னும் மூலிகை ஒரு சிறந்த மூலிகை என்ப. இம் மூலிகையின் உதவியினுல் குருதியைக் கக்காமல் தடுக்கலாம். இதை அரைத்துப் பாணிக் குரிய துணை மூலிகைகளையும் சேர்த்து வடித்துப் பருகலாம். பிழிந்த சாற்றில் உடல்நிலை கண்டு வேறு மருந்துகளையும் சேர்த்துரைத்துக் கொடுப்பதால் குருதி வாந்தியை நிறுத்தி விடலாம். இதன் சாற்றைப் பசுப்பாலில் சர்க்கரையுங் கூட்டிக் காய்ச்சிப் பருகவும். நாளும் மூன்று தடவைகள் கொடுக்கவும். இலங்கைத் தீவிலுள்ள யாழ்ப்பாணம் என்னும் பட்டினத்தை ஆண்ட பரராசசேகரன் என்னும் மன்னன் பல புலவர் பெருமக்களைத் தன் அவைக் களத்திலே வைத்து அரிய பல நூல்களை எழுதித் தமிழ் உலகுக்கு அளித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அவற்றுள் மருத்துவக் கலையை நன்கு ஆராய்ந்து பல நோய்களுக்கு நன் மருந்துகளையும் அவற்றைப் பயன் படுத்தும் முறைகளையும் எழுதிப் போந்தனன். இந் நூலுக்குப் பரராசசேகரனின் பெயரையே புலவர் பெருந்

தகைகள் வைத்தனர். இந் நூலின்கண் குருதி அழுத்தத் துக்கு நல்ல முறைகள் உண்டென்பதை இங்குக் குறிப்பிட்டு இந் நூலில் சொல்லப்பட்ட மருந்துகளைச் செய்துண்டு வந்தால் ''குணமாகும் கொடிய வல்வினை நோயே'' என்று குணவாக டத்துக்குப் பலபடப் புனைந்து பாடிய பதிகப்பா வொன்றில் கூறப்பட்டிருப்பது காண்பார்க்குப் புலனாகும். பரராசசேகரம் மாமன்னர்களுக்கும் மருத்துவ நூலாக இருந்திருக்கிறதென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குருதி வாதம் (Low Blood Pressure) :

இதுவே குருதி அழுத்த மென்பது. இதில் குருதிவாத குளிரினாற் சிறிது சுருங்கித் தடித்துக் குருதி ஓட்டஞ் சிறிது வலிமை (கெதி) குறைந்து நாடித் துடிப்புஞ் சிறிது மந்தகதி அடைவதால் குருதி அழுத்தம் ஏற்படுகிறது. இதில் குருதி கூடுதலாய்த் தடிக்கநேரிட்டால் மாரடைப்பு நோய் உண்டாக லாம். இக் கொடிய நோய் வராமல் தடுக்கப் பல வழிகள் உண்டு என்பதை நம் சித்தர்கள் கூறிப் போந்தனர். இக் கொடிய பேய் நோயின் குணங் குறிகளைக் காண்க. நோய் களுக்கு அக் காலத்தில் பேய் என்றும் ஒரு பெயர் இருந்த தாகப் பழந்தமிழ் ஏடுகளில் இருந்து அறியக்கிடக்கிறது. கடிய சுரத்தினால் தாக்கப்பட்டவரைப் பார்த்துப் பேய் பிடித்தவன் போல இருக்கிறாய் என்றும் கடிய வேகக் காய்ச்சலைப் பேய்க் காய்ச்சல் என்றும் சொல்லுகின்றோம் அல்லவா ?

இதன் குணங் குறிகள் வருமாறு :

தலைச் சுழற்றல், மயக்கம், தலைவலி, நெஞ்சுவலி, தூக்க மின்மை, சோர்வு, நடை தள்ளாடல், வாய், மூக்கு முதலாம் உறுப்புக்களிலிருந்தும் குருதி வருதல் முதலிய குணங்களுடன் நாடித் துடிப்பும் மந்தகதி அடைந்து அதில் அழுத்தமும் தோன்றும். இதுவே குருதிக் கொதிப்பென அறியக் கிடக்கிறது. அதுவன்றி மூளை நரம்புகளில் குருதி தடித்துக் குருதி யோட்டம் தடைப்பட்டு நரம்புகளில் வெடிப்பு ஏற்படுமாயின் பாரிசவாதம், முகவாதம், மரணவாதம் முதலியனவும் ஏற்படலாம். இத்துடன் குளிருஞ் சேர்ந்து முப்பிணிக (வாதம், பித்தம், சிலேட்டுமம்) ளால் பீடிக்கப்பட்டுக் குருதி தடித்துக் குருதி யோட்டமும் தடைப்படுமாயின் திடீர் மரணம் என்று சொல்லப்படும் (உடன்) சடுதி மரணமும் ஏற்படலாம் என்று நம் சித்த மருத்துவ அறிஞர்கள் இருபதாம் நூற்றாண்டில் வாழும் அறிவியலறிஞர் களிலும் மேலாக முன்பே அறிந்து கூறிப் போந்தனர்.

அனிச்ச அடி—நாடகம்

ஆய்வுரை

['தமிழண்ணல்' டாக்டர் இராம. பெரியகருப்பன்,
தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.]

(சிலம்பு ௬௪, பரல்-௨, ௯௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

"பெண்கொலை புரிந்த பெரும்பழி யொன்றே
மண்படு காறும் மறையா திருப்பது" (ப. 170)

என்று, தன் பழிக்கு நாணுகின்றான். எப்பொழுது ஒருவன் தன் குற்றத்தை உணர்ந்து வருந்துகின்றானோ, அப்பொழுதே அவன் மன்னித்தற்கு உரியவனாகின்றான். "வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்" (நற்: 270) என்று ஒருகாற் பாராட்டப் பெற்றவன். பின்பு நார்முடிச்சேரலால் வெல்லப்பட்டான். (அகம்; 199; பதிற்றுப்: 40) என்று சங்க இலக்கியங் கூறும். இத்துணைப் பேராற்றலுடையான் ஒருவன் அழிவுற்றமைக்கு, இப் பெண்பாவமே காரணமாயிற்று. நார்முடிச் சேரலின் படைத்தலைமை ஏற்று வந்த குட்டுவனால் நன்னன் இறந்தான்; அருளாழியால் மிஞிலி கொலையுண்டான் என்று இக் காப்பியம் எடுத்துக்காட்டும். காப்பியப் பிற்பகுதி நன்னன் — மிஞிலி வீழ்ச்சியைப் புனைகின்றது. செய்த பழிக்கு நாணும் 'அகப்' பகையே நன்னனுக்குப் பெரும்பகையாயிற்று. மிஞிலி எத்துணையோ அதனை மாற்ற முயன்றும் இயலவில்லை. இறுதி வரை செய்த பிழைக்காக நைந்து உருகி மாள்கின்றான். அருளாழி தான் கொண்ட வஞ்சினத்தாலும், நார்முடிச் சேரல் தான் இழந்த பூழி நாட்டை மீட்பதற்காகவும் பெருந் திட்டமிட்டுச் செய்த புறப்பகையைக் கூட, அவர்களுக்கு இணையாக விளங்கிய நன்னன் வென்றிருக்கக் கூடும் என்று கருதுமளவு அவனுடைய படைவலிமையும் போர்ச் சூழ்ச்சியும் விரித்துரைக்கப்படுகின்றன. எனினும், மனச்சான்று என்னும் அகப்பகையாலேயே அவன் வீழ்ச்சி யுறுகின்றான். அகத்தே தோன்றும் 'குற்றவுணர்ச்சி' ஒருவனை அழித்துவிடும் என்பது நன்னனால் புலனாகின்றது.

அவலக் காப்பியத் தலைவர்கள், பொதுவாக எல்லா வகையாலும் சிறப்புடையவர்களாகவே படைக்கப்படுவர். ஏதேனும் ஒரு குறை அவர்கள்பாலமைந்து அவர்களின் அழிவுக்கு வழி வகுத்துவிடும். இராவணனிடம் பிறன்மனை நயத்தலும்; கோவலனிடம் 'பரத்தமை'யும் குற்றங்களாயின. சிலப்பதிகாரத்தில் இடம்பெற்ற நெடுஞ்செழியன், ஆராயாமல் கோவ

லனைக் கொன்றதற்காக அக் குற்றத்தை உணர்ந்ததும் உயிர் நீத்தான். கருக்கொண்ட பெண் என்றும் கருதாமல், குற்றம் ஒன்றையே கருதி, கொலைத்தண்டம் விதித்த நன்னனது குற்றம் கடும் பிழையாயிற்று. அக்குற்றவுணர்வுதான், வேந்தரும் புகழ வாழ்ந்த ஏந்துவேல் நன்னனை, அடியோடு தீர்த்தொழித்தது. தன் குற்றத்தை உணர்ந்து வருந்திய பிறகு வீழ்ந்துபடும் நன்னனை இக்காப்பியம் படைத்துக் காட்டுவதால் நமக்கு அவன்மீது இரக்கவுணர்வு பிறக்கின்றது. தமிழ் மன்னர்கள் சூழ்நிலை வயப்பட்டுப் பிழைபுரியினும் பிறகு அதற்காக வருந்துவர் என்ற மரபுவழிப் பண்பு நிலைபெறுகிறது. தமிழ்க்குடியின் அறவுணர்வை நினைந்து நம் நெஞ்சம் பூரிக்கின்றது. இங்ஙனம் தமிழ் மன்னர் வரலாற்றில் 'சிறுகளங்கம்' எனக் கருதப்பட்டதையும் துடைத்துத் தூய்மைப்படுத்த இக் காப்பியம் பயன்படுகிறது. இக் காப்பியம் இன்றேல் நன்னனது உண்மையான பண்புநலம் உலகிற்கு விளங்காமற் போகும் என்னுமளவு இது பயன்படுவதாக உளது. இவ்வகையில் 'அனிச்சவடி' ஆசிரியர் தமிழினத்தின் போற்றுதலுக்குரியவராகின்றார்.

6. அனிச்சவடியின் காதல் அவலம் :

வானநூற் புலவரும் இயற்கையில் ஈடுபாடு மிக்கவருமாகிய கணியன் கீரனாரின் திருமகளாய்த் தோன்றியமையால் 'அனிச்சவடி'க்கு நற்பண்புகளனைத்தும் இயல்பாக வாய்த்தனபோலும்.

சுரும்பார் குழலியைப் பறிகொடுத்த ஏக்கத்தில் அருளாழி தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளவும் துணிகின்றான். அப்போது, கணியன்கீரனார்,

> "சாவதில் உனக்குள ஆவல் சற்றும்
> ஆவதில் இலையே ஐயா !" (ப—55)

என்று, ஆறுதல் கூறுகிறார். அவன் "மாமரம் முதலொடும் அழிவதைக் காண்கிலாது தன் ஊர்க்குச் செல்வதில்லை என்றும் மிஞிலியைக் கொன்று அவன் தசையை நாய்நரிக்கு இடுவனென்றும், சூளுரை பகர்கின்றான். சூளுரையின் முற்பாதியைக் கீரனாரின் சூழ்ச்சித் திறத்தால் முடித்தவன். அம் மகிழ்ச்சிப் பெருக்கால் யானை முன் சென்று, அதனால் தூக்கி எறியப்பட்டுக் காயமுற்று அவரின் இல்லத்தில் மருத்துவம் பெற்று வருகின்றான். அவனுக்கு உற்ற துணையாக அருகிருந்து உதவி வருகின்ற அனிச்சவடியையே நாம் முதன்முதலாகக் காண்கின்றோம். அப்போதே அவள் அருளாழியிடம் காதல் கொண்

டிருந்தாளாயினும் அதனை வெளிப்படுத்தவில்லை. அவனது சூளுரை வெற்றியாக முடியவேண்டும் என்பதையே வாய்விட்டுப் பேசுகின்றாள். அவனுக்குக் கார்கால இயற்கைக் காட்சிகளைக் காட்டி, ஆறுதலுரைக்குமிடத்தும், அனிச்சவடி 'காதற் பேச்சு'ப் பகர்ந்தாளல்லள். 'எனக்கேன் இத்துணை உதவி புரிகின்றாய்?' என்று அவன் கேட்டவிடத்து, 'அழிபவர்க்கு உதவுதல் அன்றோ மானிடர் கடன்' என்று உலகப் பொது அறம் பேசுகிறாள். மேலும் அவன் "என்பொருட்டுத் துன்பமும் தாங்குகின்றனையே, ஏன்?" என்று கேட்கிறான். காதலை வெளியிட வாய்ப்பு வளர்கிறது. எனினும், அனிச்சவடி அதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் 'குடிப்பழி துடைக்கவே' முன்னிற்பதாகக் கூறுகிறாள்.

> *"நின்னுறு துயரை என்னுறு துயரா*
> *எண்ணினென் ஆதலின் இவ்வணம் புரிந்தேன்"* (ப—102)

என்று அவள் கூறி, மேலே பேசாது நிறுத்தி விடுகிறாள்.

இங்ஙனம் அருளாழியிடம் நேரே தன் காதலைக் கூறத் தயங்கிய அனிச்சவடி, தன் தோழி மான்விழியிடம் அதனை வெளிப்படுத்துகிறாள். ஒருநாள் மாலைப்பொழுதில் காதல் நோயால் அவள் கையற்று வருந்துகிறாள்.

> *"அருளன் பண்டு*
> *வாரா திருப்பின் வருத்தஞ் சிறிதும்*
> *சாரா திருத்தலும் சாலும்"* (ப—112)

என எண்ணுகிறாள். அப்போது மான்விழியிடம் தன் உள்ளம் முழுதும் புலப்படுமாறு பேசுகிறாள். அத்தோழி, 'ஏன் காதலை அவனிடத்து வெளிப்படக் கூறவில்லை?' என்று கேட்கிறாள்:

> *"மொழியால் உரைக்க நாணம் முட்டினும்*
> *விழியாற் சிறிது விளக்குதற் கென்தடை?"* (ப—115)

அப்போதும் அனிச்சவடி 'தன் காதலை வெளிப்படக் கூறாதது தக்கதே' என்றுதான் வாதிடுகின்றாள். "மனைவியைப் பறிகொடுத்து, அதற்காகச் சூளுரைத்து வாடுபவனிடம், வருத்தம் மாறுநிலையில் காதலை வெளிப்படுத்தலாமா? இதை அறிந்து அருளாழி தங்கள் இல்லத்திலேயே தங்கிவிடின் மினியால் ஏதம் நேரலாமல்லவா? சேர நாட்டிற்கு இவன் செல்லாதிருப்பின் சூளுரை வெல்லாது போகக் கூடுமல்லவா? அங்ஙனம் வெல்லாது போயின் கோசர் குலமகனின் குறிக்கோள் பிழைக்குமல்லவா?" என்றெல்லாம் அனிச்சவடி சிந்திப்பதை நாம் அறிகிறோம்.

எந்த ஒரு பெண்ணும் தான் காதலித்தவனையே மணந்து, அவனுக்கு மனைவி என்று கூறப்படுவதையே பெரிதும் விரும்பு வாள். ஆனால் அனிச்சவடியோ அதனினும் தன் அன்புக்குரி யான் 'சூளுரையை வென்றான்' என்று சொல்லப்படுவதையே விரும்புகிறாள். அதற்காகத் தன் காதலைத் துறக்கவும் துணி கின்றாள்.

"காதலே முதலெனக் கழறுஞ் சொல்லினும்
சாதலே புகழினைத் தருஉந் தேமொழி!
என்னலக் கேள்வன் இவனென்று ஊரவர்
பன்னலின் குலக்குறு பழியினைத் துடைத்ததன்
இன்னலம் பேணிய இசையினன் எனச்சொலும்
கன்னலின் இனியசொற் காதிற் கேட்டலே
விரும்பினென் என்றன் விருப்பிதற் கெல்லாம்
பெருந்தடை யாமேல் பிழையிலாய்! அதனைத்
தீர்த்துக் கொள்ளும் திறம்எனக்கு உண்டு
வாய்ப்பது வாய்க்க" (ப—116)

என்று, அனிச்சவடி மிகத் தெளிவாகத் தன் மனநிலையை வெளிப்படுத்துகிறாள். சான்றோர்கள் தம் வாழ்வையும் முடி வையும் முன்னமேயே கணித்து அறிந்து விடுகின்றனர் என்ப தற்கு அரியதோர் எடுத்துக்காட்டாகின்றாள்.

மீண்டும் அனிச்சவடி தன் இல்லத்திலேயே அருளாழியைச் சந்திக்கின்ற வாய்ப்பு நேர்கிறது. சேரர்குடியும் சோழர்குடியும் உறவுடையனவாயினும் அரசியலால் ஒன்றாமை பற்றி அவன் பேசுகிறான். மனைவியை இழந்த ஏக்கம் இன்னும் அவன் பேச்சில் ஒலிக்கின்றது.

"உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பமே
இறவினால் பெறுவது எண்ணிலா வின்பமே." (ப—128)

என்று அவன் பேச்சு அமைகிறது. அனிச்சவடியோ 'கிளையால் எய்தும் நன்மையைக் கிளத்துகிறாள்'.

"என் வீட்டிற்கு வந்ததேன்? உறவுபோல் இங்கேயே தங்கினையே, ஏன்?" என்று அனிச்சவடி கேட்கின்றாள். அப்போதும்,

"அறிவெனும் தோட்டிக்கு அடங்காது என்னுளம்
செறியிழை இவள்பாற் சேறுதல் என்னை"

என்று தனக்குள் கூறிக்கொள்ளும் அருளாழி,

"குழலி இருந்த கோயிலிற் பின்னெரு
எழிலியைக் கொணர எண்ணுதல் தகுமோ?" (ப—129)

என்று தன் மனத்தொடு போராடுகின்ருன். எனவே, காதலால் என்று கூருமல் தனக்கு அவர்கள் உறுதுணை புரிவதால் 'நன்றி' பாராட்ட வந்துள்ளதாகக் கூறி முடிக்கின்ருன். இங்ஙனம் இருவரும் ஒருவர் உள்ளத்தை ஒருவருக்கு ஒளித்துக் காதற் கண்ணும்பூச்சியாட்டம் ஆடுகின்றனர்

சிறைப்பட்டிருக்கும் வேளையில் அருளாழி தன் காதலை இங்ஙனம் மறைத்ததற்கு வருந்துகின்ருன். நறவுப்பட்டினச் சாலையில் அருளாழியை எதிர்பார்த்து நிற்கும் அனிச்சவடி, அவன் காதலை வெளிப்படுத்தாது 'நன்றி'யுணர்வால் அன்பு கொண்டதாகக் கூறியும் தன் நெஞ்சம் அவன் பின்னே சுழல்வதற்காக வருந்துகிருள்.

இருவரும் தொண்டிக்குப் புறப்படும் வேளையில், அலவன் ஒன்று கடற்கரை ஓரத்தே அஞ்சி ஓடும் காட்சி எதிர்ப்படுகிறது. அதைக்கண்ட அருளாழி 'இஃது உன் வளையொலிக்கு அஞ்சி ஓடுகிறதெ'ன்ருன்.

அவளோ 'நண்டும் கண்டு ஓடும் வாழ்வு பெற்றேனே' என்று நைகின்ருள்.

'இங்கோர் அலவன் நின் எழில்முகம் நோக்கியதால், தன் கிளை கண்டும் மீண்டிலது' என்று மீண்டும் அருளாழி கூறினுன்.

அவளோ சட்டென்று, "அன்று. அதன் நாயகன் 'உறவினுல் உறுவது ஒழிகலாத் துன்பமே, இறவினுல் பெறுவது எண்ணிலா இன்பமே' என்று கருதித் தொடர்ப்பாடு வேண்டாம் என ஓடியிருக்கும். அதனுல் இது தனித்து நிற்கிறது", எனக் கழறுகின்ருள்.

மேலும் அவள் அலவனைத் தன்னெடு ஒப்பிட்டுக் கூறும் கருத்துகள் உள்ளத்தை நெகிழ்விப்பன :

"நிலம்வாழ் எனக்கும் நீர்வாழ் நினக்கும்
புலங்கொடு நோக்கின் பொருத்தமிக் குளதால்
ஆழித் திரையான் அலைவுறு கின்ருய் !
ஊழின் கையால் உலமரு கின்றேன் !
மீளினும் மீள்குவை, மேலலை இலையேல்
வீழினும் வீழ்குவை, விதிக்கைச் சுழல்வேன்.
நின்னிலை என்னிலை நீள்கடற் பேரலை
ஒன்றிவண் வருமென் றோர்ந்துவா ராமையால்

உணங்கல் எனப்பிறர் உரைக்கக் கிடக்குமநம்
கணங்கள் வாழ்க்கையும் கண்டுளே மன்றே!
முடிவைக் கண்டு முணகுதல் வேண்டா!
விடிவுக் காவன விடாஅ தியற்றுவம்!
நின்னை அழைக்கவோர் நீளலை வருமால்
என்னை அழைக்கவோர் இரும்பணி உண்டால்!
பணிசெயப் பிறந்துளோம்! பயன்பெறப் பிறந்திலம்!
அணியலைச் சேறி அலவ!'' (ப—140)

என முன்னிலைப் புறமொழியாக அலவனை நோக்கிப் பேசுகின் றனள். கலத்தில் செல்லும்போதும் 'சினத்தோடுங் கூட நீ உதவுவதேன்?' என்று அருளாழி கேட்டதற்குத் 'தந்தையின் ஆணையை நிறுவேற்றுவதாக' அவள் கூறுகிருள். 'வேறொன்று மிலேயோ?' என அவன் மீட்டும் கேட்டதற்கு, ''என்மனை தேடிவந்து 'நன்றி' என ஒருசொல் கூறுவாய் அல்லவா? அதற்குத்தான்'' என்று பளீரென விடை யிறுத்துவிட்டுத் திரும்பிப் பாராமலே கலத்தைச் செலுத்திக் கொண்டு போய் விடுகின்ருள்.

பின்னர்ப் பவளத்தீவிற்குச் சிறைப்பிடித்துக் கொண்டு அனிச்சவடியைக் கோட்புலி என்பான் காதல் கொண்டு தனக்கு மாலையிட வேண்டுகிருன். அதைஅவள் மறுக்கவும்அவன்அவளை வலிந்து பற்றுகின்ற வேளையில், அருளாழி வந்து காப்பாற்று கிருன். ஆயினும் அக் கொடியோன் எய்துவிட்ட குறுவாளால், அனிச்சவடியின் கழுத்தில் காய மேற்பட்டுக் குருதி வடிகிறது. அதனேடு அவளைத் தூக்கிக் கலம் சேர்த்துத் தொண்டிக்குக் கொணர்ந்து, பரணர் வீட்டில் மருத்துவம் பார்க்க ஏற்பாடுகள் செய்து, போருக்குப் புறப்படுகிருன் அருளாழி. அனிச்சவடி 'களத்தில் நீபெறும் வெற்றிக் கணக்கே, என் நலத்தை விளைக் கும் நல்லதோர் மருந்து' என வாழ்த்தி அனுப்புகிருள்.

அப்போதும் அருளாழி அவள் இது நாள்வரை சொல்லத் தயங்கியதை — அவளது உட்கிடையை, அவளே வாய்விட்டுக் கூறுமாறு மீண்டும் மீண்டும் வினவுகின்ருன். அவள் தன் காதலைக் கூறினுல், அவனது போர்வெறி குறையுமோ? என அஞ்சிக் கூற மறுக்கின்ருள். புலவர்கள் ஏத்துமாறு வெற்றிப் புகழோடு வரும்போது எஞ்சிய செய்தியை, 'தெம்முரண் கடந்த அவனுடைய திருவடிமலர்களில் வைத்து வணங்குவதாகக் கூறி', வழியனுப்புகின்ருள். ஆனுல், நடைபெற்றது என்ன? அரு ளாழியின் வெற்றிச் செய்தியைக் கேட்டதுமே, களிபேருவகை யால் கூவிய அனிச்சவடி, வாய்வழியாய்க் குருதி பெருகி இறப்

புலகம் எய்துகிருள். கடைசிவரை தன் காதலே வெளிப்படக் கூருமலே மறைகின்ருள். கோட்புலி குறுவாள் வீச்சிற்கே இரையாகி இருக்க வேண்டியவள், இவ் வெற்றிச் செய்தியைக் கேட்பதற்கே குற்றுயிராய்க் கிடந்தாள் போலும்! பொதுவாக அருளாழியும் அனிச்சவடியும் உணர்ச்சி வசப்பட்டவர்களாய், மென்மை மிக்கவர்களாய்க் காணப்படுகின்றனர். இவ் விருவரது காதலும் அடைகரை வரை ஓடிவந்து மீளும் கடலலே போலவும், அளே மேற்பகுதிவரை வந்து உள்ளே ஓடிவிடும் நண்டுபோலவும் ஓடி மறைவதாயிற்று; நின்று பயன்தரவில்லே. ஆராக்காதல் அடிமனத்திருந்தும், தலேமகனின் சீரார் வென்றி சிறப்புறவென்று இறுதிவரை காதலே வெளிப்படக் கூருமல் மறைத்தமையால்தான், மலர்களிலே இவள் அனிச்சமாயினுள்!

அருளாழி தன் வஞ்சினத்தின்படி 'நறு மா கொன்று, மிஞிலியை வென்று' வாகை சூடிய பிற்பாடு நறவுப்பட்டினப் புறங்காட்டில் சென்று, தன் மனேவி சுரும்பார் குழலி எரிந்து சாம்பரான இடத்தில் நின்று "யாவும் மீட்டும் உன்னே மீட்டிலேனே" என வருந்துகிருன்.

நீண்ட நாள்களுக்கு முன்பு அவன் அதே இடத்தில் அவளே இழந்து அழுது புலம்பினுன் :—

"தொட்டிலில் சேயுறங்கத் தொடங்குமுனே, கால்கழித்த
கட்டிலில் நீயுறங்கும் காலம் வரலறியேன்!
கட்டிலில் நீயுறங்கும் காலம் வரலறியின்
கொட்டியின் மலர்வாயாய் பகைநாடு குறுகேனுல்" (ப—52)

"இருவராப் புக்கவரில் எதிர்பாரா வண்ணம்
ஒருவரே மீள உறுமென்ப தறியேனே
ஒருவரே மீள உறுமென்ப தறிவேனேல்
கருவினுல் பொலிந்தாயைக் கையிழந்து நில்லேனுல்"
(ப—51)

இப்போதும் அதே புறங்காட்டில் அவன் நிற்கும்போது, அனிச்சவடி மறைந்த செய்தி வருகின்றது. அதைக் கேட்டு அவன் புலம்புகின்ருன் :—

"மீனுணங்கல் போலியதாம் மெல்லியலார் வாழ்க்கையெனத்
தானுணங்கிக் கூறியசொல் தன்மை உணரேனுல்
தானுணங்கிக் கூறியசொல் தன்மை உணர்வேனேல்
யானுணங்கி உள்நலியும் எவ்வம் அடையேனுல்"

"வென்று வருவாய்முன் உள்ளம் வெளிப்படுத்தி
ஒன்றுவேன் என்ருேர் உறுதிமொழி நல்கினேயே
ஒன்றுவேன் என்ற உறுதிமொழி கொண்டேனேத்
தின்று துயரங்கள் தீர்க்கவென்று ஏகினேயே" (ப—179)

இங்ஙனம் அருளாழியின் அழுகையினை இரண்டிடங்களில் கேட்டு ஒப்பிட்டுப் பார்க்கின்றோம். முதல் அங்கத்தின் முடிவில், மனைவியைப் பறி கொடுத்துப் புலம்புகின்றான்; நாடக இறுதியில் நிறைவேறும் என நினைத்த காதல் நிறைவேறாமலே போனதை நினைந்து அழுகின்றான். இங்ஙனம் முதலிலிருந்து முடிவுவரை 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' எனத்தக்க பேரவலம் தோன்றி நம் நெஞ்சை நெகிழ்விக்கின்றது.

அனிச்சவடியிடம் 'உறவினால் தோன்றும் ஒழியாத் துன்பத்தையும், அதனை விடுத்து இறப்பதனால் (நீங்குவதனால்) தோன்றும் எண்ணிலா இன்பத்தையும் அருளாழி கூறினான். ''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்'' என்று திருவள்ளுவரும் கூறினாரன்றோ? மனைவியைப் பறிகொடுத்து வெறுப்புற்ற மனநிலையில் 'உறவை வளர்த்துப் பயனென்ன ?' என்றும், 'இவ்வுறவுகளை விடுத்தே ஓடிவிடின் நலமே!' என்றும் அவன் நெஞ்சம் கருதியது.

ஆனால், காதல் அரும்பும் மனநிலையினளாகிய அனிச்சவடிக்கோ, 'தன் உறவு உருப்பெறுவதை விரும்பாமல்தான் அவன் இங்ஙனம் உதறிப் பேசினானோ' என்று வருத்தமேற்படுகிறது. அத்தொடர் அவள் அடிமனத்தைத் தாக்கிவிடுகிறது. அதனால்தான், பிறிதோரிடத்தில், அலவன் தனித்து நிற்பதற்கு அவள் காரணம் கற்பித்துக் கூறுகிறபொழுது, 'உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பம்' என்று அதன் துணை கைவிட்டு ஓடியிருக்கும் என்று கூறுகிறாள்.

இறுதியாக அருளாழி பரணரிடம் 'ஆவி பிரிவதன் முன்னர் அவள் ஏதும் உரைத்தனளோ?' என்று கேட்க, அதற்கவர் அவள் இதே தொடரினையே திரும்பத் திரும்பக் கூறி உயிர்விட்டதாக விடையிறுக்கின்றார். இங்ஙனம்,

> ''உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பமே
> இறவினால் பெறுவது எண்ணிலா இன்பமே''

என்ற இத்தொடர் முதலில் அருளாழியிடமிருந்து, மனத்தின் அடியில் உறைந்து கிடந்த வருத்தத்தின் விளைவாக ஒலித்தது. இரண்டாவதாக, அதனால் தாக்குண்ட அனிச்சவடியிடம், 'தன் உறவை விரும்பிலனோ' என்ற வருத்தத்துடன் கூடிய கடிந்துரையாக எதிரொலித்தது.

முடிவில் அவளே அத்தொடரின் பொருளை முற்றிலும் உணர்ந்தாள்போல, உறவினல் உறுவது ஒழிகலாத் துன்பமே எனக் கூறிக்கொண்டே உயிர்நீத்தாள். இதைப் பரணர் வாயிலாகக் கேட்ட அருளாழிக்கு அதிர்ச்சி தோன்றியது. 'இறவினல் பெறுவது எண்ணிலா இன்பமே' என்ற தொடருக்குத் தானே பொருளாகிப் போயினன்.

இவ்வாறு இத்தொடர் அனிச்சவடியின் காதல் அவலத்தின் 'தொடுப்பிசை' போலாயிற்று. ''விண்படர்ந்தாள்பால் இத்தொடர்க்கு விளக்கம் கேட்கப் பின்படர்ந்தான்போல்'' அருளாழியும் உயிர் நீத்ததாகக் கூறுமிடத்தில் காப்பியம் நிறைவுறுகின்றது. இவ்வாறு உறவும், நீங்கலுமாகிய வாழ்க்கைச் சிக்கல் ஒன்றை நம் முன்னர் வைத்து, அதனைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளைச் சிந்திக்க வைப்பதுபோல் நாடகம் முடிவுறுவது, 'அவாய் நிலையாய்' நின்று நம் மன ஆர்வத்திற்கு விருந்தாகின்றது.

சுரும்பார் குழலி அறநெறிக்கு மாருகக் கொலைப்பட்டாள். 'பெண் கொலை' என்ற பெரும்பழி ஒன்று விளைந்தது. இப் பெரும்பழியை அப்படியே விட்டு விடலாமா? பழி துடைக்கப் பட வேண்டாவா? பழி செய்தவர் தண்டிக்கப்பட வேண்டாவா? அதற்குத்தான் அருளாழியின் வஞ்சினம் என்ற எதிராற்றல் முகிழ்த்தது. அதனை வளர்த்து, வெற்றி பெறச் செய்யவே அனிச்சவடியின் காதல் பயன்படுவதாயிற்று. சுருக்கமாகக் கூறினல் இப் 'பெண் கொலையாம்' பழி துடைக்கும் பணிக்காகத் தோன்றி, அப் பணியைச் செயற்படுத்துவதற்காக வளர்ந்து, அது நிறைவேறியவுடன் நீங்கியதுதான் அனிச்சவடியின் காதலாகும். அதைத் தவிர்த்து அக் காதலுக்கென்று பிறிதொரு தனிப்பட்ட பயன் எதுவும் இல்லை. பெண்ணுக்கிழைத்த தீங்கினைத் தண்டிக்கப் பிறிதொரு பெண் துணை நின்ருள். சுரும்பார் குழலியே உயிர்பெற்று வந்து, தன்னைக் கொன்றவர்களைப் பழிதீர்த்துக் கொண்டாளோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இதனல்தான் இக் காதல் புலனின்ப வேட்கையால் நின்று பிற உலகக் காதல்களுக்கு இணையாகாமல், புலன் அழுக்கற்ற அகத்துணர்வாய் நின்று, 'சூளுரை வெல்லத் துணைபுரிகின்றது.

"தேன்படு நின்சொல்என் செவிப்படச் செவிப்பட
வான்படு பகையும் வணக்கும் ஆற்றலைப்
பெற்றுளேன்" (ப—163)

என்று அருளாழி கூறுவதனாலும் இதை அறியலாம்.

எயினன் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவலம் மிஞிலியின் கறுவுகொள் செற்றத்தாலும் அவன் சொல்லை நம்பிய நன்னனின் பிழைபடு செயலாலும் விளைந்தது.

இவ் வவலத்திற்குக் காரணமான பழிக்குக் கழுவாயாகவே நன்னனும் மிஞிலியும் அழிவுற்றனர்.

இப் பழியைத் துடைக்க முன்னின்று தன்னைப் பலியிட்டுக் கொண்டதுதான், அனிச்சவடியின் காதல் அவலம்.

எனவே, இந்த மூன்று அவலங்களையும் திறனாய்வுக் கட்டத்தில் கூட்டிக் கழித்தால், அனிச்சவடியின் காதல் நிறைவேறா தொழிந்த பேரவலமே நம் நெஞ்சில் எஞ்சி நிற்கிறது. இந் நிறைவேறாக் காதலை 'மோப்பக் குழையும் அனிச்சத்திற்கு' ஒப்பிடுவார் போல, இந்நாடக ஆசிரியர், காப்பியத் தலைவிக்கு 'அனிச்சவடி' என்றே பெயர் சூட்டியுள்ளமை அறிந்தின்புறத்தக்கதாகும்.

இக் காப்பியத்தை முடித்த பிறகு நமக்கு ஒன்று தோன்றுகிறது; கடமைக்காகக் காதலைப் பலியிட்டுக் கொள்ளத் தயங்காத — எவ்வளவு நெருங்கிப் பழகினாலும் புலனின்பத்திற்கு ஆட்பட்டு விடாத—மென்மைமிக்க மனவுணர்வுடைய பெண்மையினை இனிமேல் 'அனிச்சம்' என்றே அழைக்கலாம் போலும்! அந்த அளவு கதைப் போக்காலும் காப்பிய வளர்ச்சியாலும் பெண்மையைச் சுட்டும் 'அனிச்சப் படிமம்' இந்நூற்கண் உருவாயுளது. அனிச்சத்தைப் பெண்மையோடு ஒப்பிட்ட திருக்குறளுக்குக் காப்பிய வடிவத்தில் ஒரு விளக்கவுரை கிடைத்திருக்கிறது என்றே கூறலாம்.

உலகக் காப்பியங்கள் பலவும் வரலாற்றை ஒட்டிய பழம் மரபுக் கதைகளையே தம் அடிக்கருத்தாகக் கொண்டு விளங்குகின்றன. இப் பழம் மரபுக்கதைகளே இலக்கியத்திற்கு அடிக்

கருத்துகளை நல்கும் மூலப்பொருளாகும் என்பர் அறிஞர்*. இந் நாடகக் கதையும் தமிழ் மன்னர்களுள் ஒருவனாகிய நன்னனைப் பற்றிய செய்திகளை வைத்துப் பின்னப்பட்டதாகும். தமிழ் நாட்டில் நிகழ்ந்ததொரு வரலாற்றுச் செய்தியையே தன் அடிக்கருத்தாகக் கொண்டு கற்பனை செய்யப் பெற்றுள்ளமையும், சங்ககாலச் சாயலைப் பெரும்பகுதி அப்படியேகொண்டு விளங்குகின்றமையும் போற்றுதற்குரியனவாகும். இதனால் இக் காப்பியம் தமிழ் மண்ணில் வேரூன்றி நிற்கும் எனலாம். நன்னனைத் தீயூழுக்கு இரையாகியவனே அன்றி, முற்றிலும் தீயவனல்லன் எனப் புனைந்து தமிழ்ப் பண்பையும் காக்கின்றது.

அவலத்தைத் தன் உயிர்ப்பாகக் கொண்ட இலக்கியங்கள் எளிதில் மறைவுற்றனவாக இலக்கிய வரலாறு கிடையாது. அவலத்தையே தன் உயிரோட்டமாகக் கொண்டு பெண்மைக்குப் பெருமை நல்க எழுந்த இந் நாடகக் காப்பியம் தமிழ் இலக்கிய வரிசையில் இடம் பெறும் என்பதுறுதி. மேலும் நாடகவுத்தியாலும் காப்பியக் கட்டமைப்பாலும் கவிதைத் திறனாலும் இவ்வனிச்சப் படிமம் தாங்கிய நாடகக் காப்பியம் சிறந்திலங்குகிறதெனில் அது மிகையாகாது.

---

*"Myth, at all events, is raw material, which can be the stuff of literature," Harry Levin, Refractions, p. 27.

பேராசிரியர் பெரும்பிரிவு

[டாக்டர் சி இலக்குவனர்]

புலவர் இரா. இளங்குமரன்

(சிலம்பு சஅ, பரல் உ, ககடுஆம் பக்கத் தொடர்ச்சி)

''தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழகம் வாழும்'' என்னும் உயிர்ப்போடு எழுந்தது தமிழ்க் காப்புக் கழகம். 'தமிழில் பேசுக; தமிழில் எழுதுக; தமிழில் பெயரிடுக; தமிழில் பயில்க' என்னும் நான் மணிகளைச் செயற்படுத்தும் செம்மாப்புடன் எழுந்தது தமிழ்க் காப்புக் கழகம். 6-8-62இல் அருள்மிகு அங்கயற்கண்ணி திருக்கோயிலில் தமிழ்க் காப்புக் கழகத் தொடக்கவிழா நிகழ்ந்தது. கருமுத்து தி. சுந்தரனர் தலைமை தாங்கினர். டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் தொடக்க விழாப் பேருரையாற்றினர். டாக்டர் இராதா தியாகராசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

பேரறிஞர் அண்ணு அவர்கள், முதல்வர் கலைஞரவர்கள், செந்தமிழ் ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள், டாக்டர் வ. சுப. மாணிக்கனர் அவர்கள் முதலாகிய தமிழ் நலம் நாடும் பெருமக்கள் அவ்வப்போது பங்கேற்றுச் சிறப்பித்தனர். இலக்கியம், இலக்கணம், வரலாறு இவற்றில் தேர்ச்சியும் பயிற்றுதலில் திறமும், தனித்தமிழ் நாட்டமும் உடைய பேரா சிரியர்கள் பதினறுவர் எத்தகு சிறிய ஊதியமும் எதிர்பாராமல், தம் கைச் செலவும் செய்து கொண்டு வந்து தமிழ் வகுப்பு நடாத்தினர். இஃதவர்கள் தொண்டுள்ளத்தையும், பேரா சிரியர் அவர்களின் அரவணைக்கும் திறத்தையும் வெளிப்படுப் பனவாம்.

மொழி விழாக்கள் முனைப்புடன் நடாத்தப் பெற்றன; புலவர் விழாக்கள் போற்றிச் செய்யப் பெற்றன; அவ் வப்போது துண்டறிக்கைகளும், சுவரொட்டிகளும், வேண்டு கோள்களும் வெளியிடப் பெற்றன ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நிகழ்த்தப் பெற்றன. தமிழகத்தின் பல்வேறு பெரு நகரங்களிலும், தமிழகங் கடந்து தமிழர் வாழும் பகுதி களிலும் தமிழ்க் காப்புக் கழகக் கிளைகள் தோன்றி நற்பணி யாற்றின. தமிழ்க் காப்புக் கழகம் இந்தி எதிர்ப்புப் பாசறை யாக வேண்டிய கட்டாயத்தை 1965இல் அரசு உண்டாக்கிற்று. தமிழ்க் காவலராகத் திகழ்ந்த பேராசிரியர் அவர்கள் இந்தி எதிர்ப்புப் படைக்குத் தளபதியானர். அவர் தம் முழக்கத்தை வெளியிடும் போர்ப்பறையாகக் கிளர்ந்தது 'குறள் நெறி' இதழ். அந்நாள் ஆட்சியாளர் அஞ்சும் அளவுக்கு நிமிர்ந்து

நின்றார் பேராசிரியர். அவரும் அவரைச் சார்ந்து நின்றவர்களும் அரசினர் அலைக்கழிப்புக்கு ஆட்பட்டனர். ஒற்றர் கண்காணிப்பிற்கு உட்பட்டு இயங்கும் ஒரு நிலை உருவாயிற்று.

பேராசிரியரின் மேல், 'அமைச்சர்களைக் கொல்லுதற்கு முயற்சி' முதலாகப் பதினான்கு குற்றங்கள் சாட்டப்பெற்றன. உறையுளையும், குறள்நெறி அச்சகத்தையும் புலனாய்வு செய்து சில தடயங்கள் உள்ளனவாகக் கூறிச் சில அச்சுப்படிவங்கள், நூல்கள் முதலியவற்றைக் கொண்டு சென்றனர்.

உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டினை உறுதியாக எதிர்த்தல் தம் கடன் என்று ஊதியம் எதனையும் கருதாமல் எவரும் தம்மை வேண்டிக் கொள்ளாமல் திருமிகு தருமராசு சந்தோசம், திருமிகு பி. எசு. இராம சுப்பிரமணியம் முதலிய வழக்கறிஞர்கள முப்பத்தாறு பேர் பேராசிரியர்க்காக வழக்காட முன் வந்தனர். எங்கும் காண்டற்கரிய காட்சியாயிற்று. ஒவ்வொரு கெடுவிற்கும் ஒன்பதின்மரோ பதின்மரோ தத்தம் ஊர்திகளில் வந்து வழக்காடினர். "திருநகரை விடுத்து வெளிச் செல்லக் கூடாது" என்னும் ஆணையால் பணிக்களம் முதலிய எதற்கும் செல்லா வண்ணம் அரசினர் தகைந்தனர். ஒரு திங்களும் ஒரு கிழமையும் சென்றன. அதன் பின்னர், "எப்பொழுதும் சிறைப்படுத்தப் படலாம்" என்னும் ஆணையுடன் விடுதலை வழங்கினர். சிறைக் கோட்டைத்தை அறக் கோட்டமாக்கிய மணிமேகலையார் மாண்பு எங்கே! அறக்கோட்டத்தைச் சிறைக்கோட்டம் ஆக்கிய முனைப்பு எங்கே!

'தலைநகரை நோக்கிய தமிழ் உரிமைப் பெரு நடைத்திட்டம்' ஒன்றை உருவாக்கிக் கோடை விடுமுறையில் செல்வதெனத் திட்டமிட்டார் பேராசிரியர். கல்வித்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை, கலைத்துறை ஆகிய அனைத்துத் துறைகளிலும் தமிழ் உரிமையை நிலை நாட்டும் நன்னோக்குடன் தொடங்கப் பெற்றது தமிழ் உரிமைப் பெருநடை. தென்னன் மதுரை தொடங்கிச் சென்னையில் முடியும் பெருநடைத் திட்டமாக உருப் பெற்றது. உயர்நிலைப் பள்ளிகளில் ஒரே காலத்தில் தமிழைப் பாடமொழியாக ஆக்கியது போல் கல்லூரிகளிலும் ஒரே சமயத்தில் எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் தமிழைப் பாடமொழியாக்க வேண்டுமென்று அரசினரையும், துணை வேந்தரையும் வலியுறுத்துதற்குக் கிளர்ந்த உணர்வை, வெளிப்பட விடாமல் ஒடுக்க முந்து நின்றது மும்மொழியை மூச்செனக் கொண்ட அரசு. பெருநடை தொடங்குவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னரே அஃதாவது 1-5-65 இல் பேராசிரியரைப் பாது

காப்புக் கைதியாக்கி இரவோடு இரவாக வேலூர்ச் சிறைக்கண் சேர்த்து வெற்றிக்கொடி நாட்டியதாக விம்மித முற்றது. தாய்த் தமிழைக் கட்டிக் காக்கத் துணிந்த ஒரு மகனை, அத் தாய்த் தமிழ் மகனே சிறைப்படுத்திய வன்கொடுமை ஒரு 'வரலாற்றுப் புரட்சியே'யாம்!

'தமிழ்த்தாய் சிறையில்' என்று பேராசிரியர் சிறைக்குள் சிக்கிக் கிடக்கும் நிலையை நாளெண்ணிக் காட்டிப் பெருமை பெற்றன முரசொலி முதலிய நாளிதழ்கள். எத்தகைய வழக்குப் பதிவும் இல்லாமலே மூன்றரைத் திங்கள் காலம் சிறைக்கண் வைத்தது அரசு. வெளியேறுங்கால் பேராசிரியரின் வேலையைப் பறித்துக் கொள்ளுதற்குரிய ஏற்பாடுகளையும் முனைப்புடன் தீட்டி வைத்திருந்தது! தன்னைக் காத்துக்கொள்ள விரும்பிய நிருவாகம், தமிழைப் பழிவாங்கிக் கொண்டது. ஆம்! தந்நலங் கருதாத் தமிழ்த் தொண்டுக்குத் தகவான பரிசுகள் அடுக்கடுக்காய் வந்தன!

இந் நிலையில், 'அல்லல்பட்டு மக்கள் அழும் நிலையில் வைத்துள்ள ஆட்சியை மாற்ற வேண்டியது மக்கள் நலனில் கருத்துடையோர் கடன் என்று பேராசிரியர் துணிந்தார். தேர்தலில் எதிர்ப்பு அணி உருவாதற்கு ஒல்லும் வகையால் உழைத்தார். பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர் ஆகியவர்களுடன் கலந்துரையாடினார். குறள் நெறி இதழை எதிர்ப்பு அணிப் போர்ப் பறையாக்கி எழுச்சி நடையிட்டார். 1967 பொதுத் தேர்தல் அறிஞர் அண்ணாவைத் தமிழக முதல்வர் ஆக்கிற்று. அம் முதன்மை, பணி இழந்து நின்ற பேராரியர்க்குப் பணி நல்கிற்று.

சென்னை, மாநிலக் கல்லூரியில் பேராசிரியர் தலைமைப் பேராசிரியராக அமர்ந்தார். ஓராண்டு அவண் பணி செய்து, ஐதராபாத்து உசுமானியா பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக ஈராண்டுகள் பணி புரிந்தார். அதன் பின்னை நாகர் கோயில் இந்துக் கல்லூரி முதல்வராக ஆறு திங்கள் பணி செய்து ஓய்வு பெற்றார்.

நெஞ்சிற் பட்டதை நேரே கூறும் அஞ்சா இயல்பினர்க்குத் தகுதிக்குத்தக்க பதவி வாய்ப்புக்கள் கிட்டுவது இல்லை. அவ்வாறு கிட்டாமையால், தகுதி வாய்ந்த ஒருவரின் திறமான செயற்பயனை நாடு இழந்து விட்டது. இது தனிப்பட்ட இழப்பன்று. நாட்டுக்கும் மொழிக்கும் ஏற்பட்ட பேரிழப்பு என்பதை எண்ணிப் பார்க்கும் எவரும் எளிதில் அறிவர்.

உலகத் தமிழ் மாநாட்டுக்குச் செல்லவும் உரையாற்றவும் எல்லாத் தகுதிகளும் இருந்தும் புறக்கணிக்கப்பட்ட பேராசிரியர்

தாமே வெளிநாட்டுச் செலவினை மேற்கொண்டார். 2-10-71இல் சென்னையில் இருந்து புறப்பட்டு, சிங்கப்பூர், மலேயா முதலிய கீழை நாடுகளுக்குச் சென்று தமிழ் மழை பொழிந்து 25-12-71இல் மீண்டார். தொடர்ந்து தமிழுலகுக்குத் தொண்டு செய்தார்.

ஓயாது உழைக்கப் பிறந்த அவ்வுள்ளம் வீட்டளவில் ஒடுங்கிக் கிடத்தல் ஒழியாத் துயராயிற்று. அத்துயர் படிப் படியே உடலை வாட்டாமல் விடுமோ? ஓடித் திரிந்த காலத்தில் தலை காட்டாமல் கிடந்த 'சருக்கரை நோய்' உருத்துத் தாக்கியது. காற்பெரு விரலில் குருதி கொட்டி ஆருப்புண்ணு யிற்று. அவ்விரலை எடுக்கும் கொடுமையும் நேர்ந்தது. மஞ்சள் காமாலை, கல்லீரல் அழற்சி, சிறு நீரகக்கேடு ஆகியனவும் தொடர்ந்தன. ஆயினும் அச்சம் எனும் ஒரு பொருள் அறியா அடலேறு, "எமக்கொன்றும் இல்லை; விரைவில் நலம் பெறு வேம்; நம் தொண்டுகள் தொடரும்" என்று ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார். ஆனால், அந்தோ! அன்பே உருவான மனைவியரும், அறிவறிந்த நன்மக்களும், அன்புக்குறையுளாம் நண்பர்களும் புலம்பி நைய 3-9-73 இரவு 10 மணியளவில் மதுரை அரசினர் மருத்துவ மனையில் பேராப் பெருநிலையுற்றார். வாய்மேட்டு வண்டமிழ்ச் செல்வர் திருவுடலம் திருநகர் இல்லத் தில் பொதுமக்கள் பார்வைக்கென வைக்கப்பெற்றது. பல்வேறு கல்லூரிகள், அமைப்புக்கள், அன்பர்கள் சார்பிலே மலர்மாலை சூட்டப் பெற்றது. மாண்புமிகு அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், மாநகராட்சித் தந்தை எசு. முத்து அவர்கள் முதலாய பெருமக்கள் பலர் வந்து மாலை சூட்டி, ஆறுதல் கூறிச் சென்றனர். இல்லத்தினர் இனிய நண்பர்கள் கண்ணீர், அரற்றல்களுக்கு இடையே 4-9-73 பகல் 11 மணியளவில் தமிழுக்கென வாழ்ந்த உடலம் எடுக்கப் பெற்றுத் திருப்பரங் குன்றம் சுடலைக் கானம் கொண்டு செல்லப்பெற்றது. டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் தலைமையில், நெக்குருகி நின்று நீர்வாரப் பலர் பேராசிரியர் பெருந்தகைமைகளைப் பாராட்டிப் பேசினர். பேராசிரியரின் மூத்த திருமகனார் திருவேலன் பேராசிரியர் உடலுக்கு எரியூட்டினார். தமிழ நன்னூல் "உய்த்துள காலமெல்லாம் புகழொடும் ஓங்க நிற்பார்" ஒளியுடலானார்.

தமிழ்வாழ வாழ்ந்த தவமகனார் தனிப்புகழ் என்றும் வாழ்க.

இணைப்பு

க. பேராசிரியர் இயற்றிய தமிழ் நூல்கள் :

கவிதை :

எழிலரசி, மாணவர் ஆற்றுப்படை, துரத்தப்பட்டேன், அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து.

ஆராய்ச்சி :

வள்ளுவர் வகுத்த அரசியல்
வள்ளுவர் கண்ட இல்லறம்
தொல்காப்பிய ஆராய்ச்சி
பழந்தமிழ், தமிழ் கற்பிக்கும்முறை
திருக்குறள் எளிய பொழிப்புரை
தொல்காப்பிய விளக்கம்.

வரலாறு :

இலக்கியம் கூறும் தமிழர்வாழ்வியல் (சங்க காலம்)
கருமவீரர் காமராசர்
என் வாழ்க்கைப் போர்.

ஆங்கிலம் :

The Making of Tamil Grammar
A Brief Study of Tamil Words.
Tamil Language
Semantemes and Morphemes in Tamil Language
Tholkappyam in Engish with Critical Studies.

உ. வெளியிட்ட இதழ்கள்

தமிழ் :

சங்க இலக்கியம்—கிழமை இதழ்
இலக்கியம்—திங்களிதழ்
திராவிடக் கூட்டரசு —திங்களிதழ்
குறள்நெறி—திங்களிதழ்
குறள்நெறி—நாளிதழ்

ஆங்கிலம் :

Dravidian Federation —திங்களிதழ்
Kural Neri—திங்களிதழ்

ரு. பொதுமக்களால் வழங்கப் பெற்ற பாராட்டுகள்

முத்தமிழ்க் காவலர்
செந்தமிழ் மாமணி
பயிற்சிமொழிக் காவலர்
தமிழர் தளபதி
தமிழ்காத்த தானைத் தலைவர்
இலக்கணச் செம்மல்.

———

'திருமுறைக'ளும் 'திருவருட்பா'வும்

[குருகுலம் அழகரடிகள்]

'திருவருட்பா' ஆறு பகுதிகளாகப் பிரித்துப் பதிக்கப்பட்டன; அண்மையில் 'திருவருட்'பாவில் மிகவும் உருக்கம் வாய்ந்தவர்களாய் விளங்கிய திரு. பாலகிருட்டிண பிள்ளையவர்கள் பி.ஏ. எம்.எல். திருவருட்பாவை மேலும் பல பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளின்மேல் அன்பர்களுக்கு இருந்த மதிப்பும் அன்பும், திருவருட்பாவையும் முதலில் திருமுறைப் பெயரால் பதிப்பிட உதவின. எனினும், அதனை வேறு பெயர்களால் பகுத்துப் பதித்தல் திருவருட்பாவுக்கே மேன்மை கூட்டும்.

திருமுறைகள் :

'வள்ளலார்' என்று சொன்னாலும், 'திருவருட்பா' என்று சொன்னாலும் அவை எப்படி இராமலிங்கப் பெருமானையும் அவர் அருளிச் செய்த அருட்பாக்களையும் குறிக்கின்றனவோ, அப்படியே 'திருமுறைகள்' 'திருமுறைவிழா' 'திருமுறைப் பாராயணம்' என்றெல்லாம் சொன்னவுடன் திருஞான சம்பந்தர் முதலிய அருட்குரவர் அருளிச் செய்த தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகளையே குறிப்பது நினைவுக்கு வரும்.

திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்கள் அருளிய அருட்பாக்களுக்கும் திருமந்திரம் முதலிய நூல்களுக்கும் 'திருமுறைகள்' என்னும் பெயர், நாட்டில் நிலைபெற்ற வழக்காய் விட்டது. அப்படியே இராமலிங்கர் அருளிய பாக்களுக்கும் நூல்களுக்கும் 'திருவருட்பா' என்னும் பெயரே இப்போது நிலைத்ததாய் வழங்கி வருகிறது.

பெயர் மரபு :

மரபுக்கு மதிப்புக் கொடுப்பது எங்குங் காணப்படுவதோர் இயல்பு! சொன்மரபின் வகை,

> "எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

எனப்படும்.

மரபுகளை நன்றாகக் காத்து வருங்கால், சொல்வழக்குகள் எளிமையும் இனிமையும் கொள்கின்றன. மொழி, ஒரு சுமை

யாகத் தோன்றுவதில்லை; அழியாமலும் நிலை பெறுகிறது. சொற்களிற் சிக்கலில்லாமல், கருத்துக்கள் வளர்ச்சி பெறு கின்றன. கருத்துகளின் பலவேறு நிலைகளைப் பொறுத்து வேறு வேறு புதுச்சொற்கள் தோன்றவும், மொழிக்கு வளங் கூடவும் வாய்ப்பமைகின்றது. திரிபுகள், கொச்சைகள், வடிவு வேறுபாடுகள் சொற்களில் மிகாமற் போதலின், உரை நூல்கள் உரைக்கு உரை நூல்கள் முதலியன வீணாகப் பெருகவும் இட மில்லை; சிறந்த முதல் நூல்கள் மிகுவதற்கும் வாய்ப்பு உண்டாகிறது.

மரபு காத்தலில் கருத்தில்லாமையோ, பிழையான உள்ளமோ கொள்ள நேர்ந்து விட்டால், அப் போக்கு, மேலெடுத்துக் காட்டிய பல நலங்களையும் இழப்பதோடு அமை திக்கும் நிலைப்புக்குங்கூட இழுக்காய் விடுகிறது; நாட்டின் நிலைகுலைவுக்கே இடஞ் செய்து விடுகிறது.

மேலும் நாட்டில் ஒரு பெயர், மரபு கொள்வதானால், ஏதேனும் சிறப்பு அதனில் இல்லாமலிராது. அச் சிறப்பினை இயன்ற அளவு ஆழ்ந்து கண்டு கொண்டால், அப் பெயர் மரபைக் குலைக்க மனம் வராது.

ஊறில்லை :

இராமலிங்க வள்ளலார் பாடல்களுக்குத் 'திருவருட்பா' என்று பெயரமைந்தது ஒரு திருவருட் செயலே! ஓதாதுணர்ந் தவர் வள்ளலார். ஆதலால், அவர் வழித் தோன்றிய பாக்கள் அருட்பாக்களே என்பதை யாரும் எப்போதும் உய்த்துணர்ந்து கொள்ளலாம். அருளையன்றிப் பிறவற்றை வேண்டாத பாக்க ளாகவும் அவை மிளிர்கின்றன.

மேலும், வள்ளலார்க்கு முன் விளங்கிய அருட்சான்றோர் அருளிய பாடல் தொகுதிகளுக்கு வேறு வேறு பெயர்கள் மரபு கொண்டிருக்கின்றனவே தவிரத், 'திருவருட்பா' என்னும் பெயர் அமைந்து வரவில்லை. முன் எழுந்த அருட்பாடல்களுக் கெல்லாம் வேறு வேறு காரணங்களால் வேறு வேறு சிறப்புப் பெயர்கள் அமைந்து மரபு கொண்டுள்ளன. 'திருவருட்பா' என்னும் புதுப்பெயரால், முன் பெயர் மரபுகளுக்கு ஏதும் ஊறில்லை.

காரணம் உண்டு :

'திருவருட்பா'வின் உட்பிரிவுக்குத் 'திருமுறைகள்' என்னும் பெயர் அமைவது அத்தகையதன்று. தேவாரம் திரு

வாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருமந்திரம் திருமுகப் பரசுரம் முதலியன திருத்தொண்டர் புராணம் என்பவை ஏதோ சிறப்புக் காரணத்தின் அடிப்படையில் 'திருமுறைகள்' என்று பெயர் பெற்றுள்ளன; 'திருமுறை' என்பது உட்பிரிவுப் பெயர் மட்டு மன்று; அருட்குரவர் பலர் அருளிய அருள் நூல்கள் பல வற்றின் தொகுப்பும் பெயருமாகும்! மரபு காக்கும் நல்லுள்ள மிக்க பெரியோர், அவ்வருள் நூல்களை மட்டுமே 'திருமுறைகள்' என்று வழங்கிவருங் கடமையுடையர்.

சால்பன்று :

மற்ற நூல் எதுவும் திருமுறையாகாதோ என்று வினுவுவது சால்பன்று. பெரியாழ்வார் அருளியவை 'திருமொழி' என்று பெயர் பெற்றிருக்கின்றன. மற்றவை யெல்லாம் 'வெறு மொழியோ' என்று கேட்கலாமா? நம்மாழ்வார் அருளியவை 'திருவாய் மொழி' என்று வழக்குற்றி நக்கின்றன. மற்றவர் அருளியவை யெல்லாம் திருவாய் மலர்ந்த மொழியல்லவோ, அல்லது வாய்மொழியல்லவோ என்று கேட்பது சால்பாகுமா? திருக்குறள் அதன் ஆசிரியர் காலத்திலேயே 'மறைநூல்' என்னும் பெயர் வழக்கைப் பெற்று விட்டது. திருக்குறளைத் தவிர மற்ற நூல்களையும் 'மறைகள்' என்று வழங்க முற்படுவது நன்ருகுமா? அதனுல் மற்ற நூல்களுக்கு மறைத்தகுதி இல்லை யென்பதுதான் கருத்தாகுமா? மற்ற நூல்களிலும் மறைத்தகுதி உள்ளன என்று மதிப்பதும் குறித்துரைப்பதும் வேறு, 'மறைநூல்' என்று வழக்கில் வருமாறு வழங்குவது வேறு.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் களில் அறம் முதலிய மூன்றை வெளிப்படையாகவும் வீடு என்பதை அம் மூன்றிலும் குறிப்பாகவும் விளக்கியருள்வது மறை நூலின் இயல்பு. அது திருக்குறளில் நிறைவாகவும் வகையாகவும் அழகாகவும் மறைவாகவும் அமைந்துவிட்டது. அறம் முதலிய பெயர்களே, நூலிற் பிரிவு தோன்றத் தலைப்ப மைந்து இனிமையாய்ப் பொருந்தியுள்ளன!

மற்றப் பெரு நூல்களும் சிறு நூல்களுங்கூட அறம் முதலிய நாற்பொருளையும் உள்ளுறையாகக் கொண்டவையே; ஆயினும் அவற்றிற்கெல்லாம் வேறு வேறு பெயர்கள் வழக்கில் உள்ளன. 'தமிழ் மறை' 'பொது மறை' முதலிய மறைப்பெயர்கள் பெரு வழக்காய் இடம் பெறவில்லை. நூலமைப்புகளும் பெயர்களும் இப்படிப் பற்பல வகைகளில் அமைந்து விளங்குதலும் மரபு கொள்ளுதலும் காணலாம்.

மறையும் முறையும் :

நூல்களில் மறை பொதுவியல்புடையது; 'முறை' சிறப்பியல்புடையது.

'மறை' என்பது, உண்மைகளை விசிறி விடாமல், ஓதுவோரை ஆழ்ந்து சிந்திக்க வைத்துப் பதப்படுத்தும். "வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக, நெஞ்சம் சிந்திக்க, கேட்க செவி" என்று திருக்குறளைப்பற்றி அதன் இயல்பு தெரித்து வரும் பாட்டு ஒன்று இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகிறது. திருக்குறள் மறை, அதனால் மிகவும் ஆழ்ந்து சிந்திப்பதற்குரிய குறள் யாப்பில், மறை மொழிக்கேற்ற சுருங்கிய வடிவில் அமைந்திருக்கிற்து. ஈது எத்துணை இயல்பான நலம் !

'மறை' யென்பது இங்ஙனம் பொது மக்களைச் சிந்திக்குந் திறத்திற் பழக்கிப் பக்குவப்படுத்தும் என்றால் 'முறை'யென்பது பதப்பட்டு உயர்ந்த அச் சிறப்பு மக்களை அம் மறைவழியில் உரிய நுகர்வுத் துறைக்கு நெறிகாட்டி முறை முறையே அழைத்துச் செல்லும் வகைமை வாய்ந்ததாய் இருக்கிறது. திருமுறைகளை அதனால், 'நெறிமுறைநூல்' அல்லது 'வழிமுறைநூல்' 'வழிபாட்டுநூல்' என்று சொல்லி விடலாம்.

> "சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி அறிவின்றித்
> தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை
> மாலுங் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக்
> கோலங் காட்டி யாண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே"

என்னும் மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் 'வழி' எனவும், 'நெறி' எனவும் வேறு வேறாக வந்த அழகு, மறை வழியையும், முறை நெறியையும் வகையுறப் பிரித்துக் காட்டி விளக்கி யருள்கின்றது !

நெறிவகை நான்கு :

படிப்படியாக, ஒன்றினால் ஒன்றை அடைந்து முன்னேறும் வழிபாட்டு நெறிவகை, நான்கு என்று முன்னோர் வகுத்திருக்கின்றனர். அந்த நான்கும் உறவு நெறிகள்; அவற்றை விளக்க எழுந்த பெரியோர்களே 'நால்வர்' என்னும் அப்பர், சம்பந்தர், ஆரூரர், வாதவூரர் என்பவர்கள் ! அவர்கள் விளக்கிய நெறிமுறை நான்கும், 'சீலம்' (சரியை), 'நோன்பு' (கிரியை), 'செறிவு' (யோகம்), 'அறிவு' (ஞானம்), என்னும் சிறப்பொழுக்கங்கள். இவை உறவு கூட்டுவன. முறையே அவ் வுறவுகளை 'ஏவலுறவு' (தாசமார்க்கம்), 'உரிமை யுறவு'

(புத்திரமார்க்கம்), 'நேயஉறவு' (சகமார்க்கம்), 'காதலுறவு' (சன்மார்க்கம்) என்று கொண்டு பழகி முன்னோர் உயர்ந்திருக்கின்றனர்.

நால்வரில் மாணிக்க வாசகப் பெருமான் காதலுறவினர்; (சன்மார்க்கப் பெரியார்; ஞானசன்மார்க்கச் சிறப்பினர்') அதனாலேதான், 'திருவாசகம்' என்னும் ஞான அருள் நூலை அருளிச் செய்ததுடன் ஞானம் என்பது எத்தகைய உறவு முறையைக் கூட்டுகிறது என்று விளக்கும் பொருட்டுக் காதலுறவு கனிவிக்கும் கோவை நூலையும் பாடி யருளினார்.

'சீலம்' என்பது, நல்லொழுக்கமாய் (ஆசாரமாய்) இருந்து உடம்பின் புறக்கருவிகளைச் சிறப்பாகப் பயன்படுத்தி, இறைவன் திருவுருவைத் தமக்கென ஒரு தனி விருப்பமுமில்லாமல் வழிபட்டு ஆளாதல்; இதனால் அடியராகலாம்.

'நோன்பு' என்பது, மெய் வாய் முதலிய புறக்கருவிகளோடு சிறப்பாக மனம் புத்தி முதலிய அகக்கருவிகளையும் பயன் கொண்டு இரண்டையும் ஒருமுகப்படுத்தி இறைவனது அருவுருவை மகன்மையுரிமை உறவுடன் வழிபாடாற்றுதல்; இதனால் இறைவனுக்குப் பிள்ளையாகலாம்.

'செறிவு' என்பது, கருவிகளின் தொடர்பேதுமில்லாமல் உயிருணர்வினால் இறைவனது அருவ நிலையை உணர்ந்து நேயங்கொண்டு, அந்த நேய ஆற்றலின் வண்ணமாகவே மாறியுயர்ந்து, தானும் அருள்நிலையேயாகி உருகி நிற்றல்; அதனால் இறைவனுக்கு நேயராகலாம்.

'அறிவு' என்பது உருவம், அருவுருவம், அருவம் என்னும் வடிவ வேறுபாடுகளுக் கெல்லாம் அப்பாற்பட்ட வகையில் இறைவனது இயற்கை நிலையை உள்ளது உள்ளபடியே, அப் பெருமானது திருவருள் ஞானமே கண்ணாகக் கண்டு உருகி நெகிழ்ந்து தம் முனைப்பு ஒரு சிறிதுமின்றி இயல்பாக ஈடுபடுதல் இதனால் அடிகளாகலாம்.

நான்காவது நிலையாகிய அறிவு நெறியில் 'அறிவு' என்பது, உயிரின் புறஅறிவன்று; உயிரின் புறஅறிவு என்பது புறக்கருவிகளோடு சேர்ந்து புறப்பொருள்களை அறியும் உயிரின் அறிவு. அது மூன்றாவதாகக் கூறிய செறிவு நிலையின் முதலிலேயே அற்று விடுவதோடு, அதன் மூன்றாவது நிலையில் உயிரறிவு தன்முனைப்பும் அற்றுவிடும். அந்த முனைப்பற்ற உயிரறிவு, தன்னில் நன்கு விரவிப் பதிந்து விளங்கும்; இறைவனது அறிவைக் காணும் பேறு பெறும். முனைப்பற்ற நிலையில்

உயிரறிவு உணரும்படி அதனை முற்றிலுங் கவர்ந்தெழுந் தோங்கும் இந்த அருளறிவினால், உயிரின் அறிவு, இறை யறிவின் வழியே நிகழ்ந்து இறை நிலையை உணரும் பெருமை பெறுகின்றது! 'மெய்யறிவு' என்றும் 'பதிஞானம்' என்றும் பெரியோர் இதனை வழங்கினர். திருக்குறளில் அறத்துப் பாலின் ஞானப்பகுதியில் 'மெய்யுணர்தல்' என்று ஓர் அதி காரம் அமைந்தமை, இப் பெருநெறியைக் குறித்தது!

'அடிகள்' என்றது திருவடிகளைக் குறித்து, அவற்றைக் காதலாக அணைந்தோர்க்கும் பெயராக வந்தது. முனைப்பற்ற உயிரறிவிற் பதிந்தெழுகின்ற மெய்யறிவைப் 'பாதம்' இறை வன் பாதம் அல்லது அடிகள் என்பது வழக்கு!

வள்ளற் பெருமான் இந்த நான்கு வகையான உறவு முறைகளிலும் வளர்ந்து சிறந்தார்!

> "அடிய னுக்கிப் பிள்ளை யாக்கி நேய னுக்கியே
> அடிக ளாக்கிக் கொண்டாய் என்னை அவலம் நீக்கியே"

என்று திருவருட்பாவின் இறுதிப் பகுதியில் வள்ளலார் விளக்கி யருளுதல் இங்கு நினைவுகூர்தற்குரியது!

ஞான சன்மார்க்கம்:

ஞானம் என்னும் நான்காவது நிலை 'காதலுற'வென்னும் சன்மார்க்கத் தன்மையது; இதைத் 'திருவடியுறவு' என்றுங் கூறலாம்.

சீலம், நோன்பு, செறிவு என்னும் மூன்றும் பொது மக்களின் வழிகள்; ஞானம் ஒன்றே பக்குவம் மேலிட்ட சிறப்பு மக்களின் நெறி; ஞானம் என்னும் இச் சன்மார்க்க நெறி யிலேயே சமய குரவர் நால்வரும் அதன் நான்கு வகையான படிமுறைகளில் ஒழுகினர்; ஞான சீலத்தில் அப்பரும், ஞான நோன்பில் சம்பந்தரும், ஞானச் செறிவில் சுந்தரரும், ஞான ஞானத்தில் மாணிக்க வாசகரும் நடந்துகொண்டனர். ஞான ஞானம் என்னும் மிக மேலான நிலையைத்தான் 'ஞான சன் மார்க்கம்' என்றும் பெரியோர் வழங்கினர்.

திருக்குறள் மறை, தொடக்க நிலையிலுள்ள பொது மக்க ளுக்கு, அவர்கள் பற்றக்கூடிய பொதுவான நிலையில், சீலம் நோன்பு செறிவு அறிவுகளாகிய நான்கு வழிகளை விளக்கி யுதவும். அவ் வழியில் ஒழுகிப் பக்குவம் மேலிட்ட சிறப்பு மக்க ளுக்கும், நான்காவது உயர்ந்த களமாகிய ஞான நிலையிலேயே

நான்கு படிமுறைகளை இலைமறைகாய்போல் சுருக்கமாக, ஆனால், உண்மைக்குச் சற்றும் மாறாகாமல் உணர்த்தி யருளும்.

தேவார திருவாசகங்களாகிய திருமுறைகளோ வென்றால், பொதுமக்களுக்குரிய பொதுச்சீலம் முதலியவற்றைச் சுருக்கி அறிவுறுத்துகொண்டு சிறப்புமக்களுக்குரிய ஞான சீலம் முதலியவற்றை விரிவாகவும் நுட்பமாகவும் விளக்கியருளும். திருக்குறள் மறையில் ஞானநெறி பாலில் நெய்போற் சற்று மறைவாய் உள்ளுறையாய் விரவி அமைந்திருக்கிறது; திருமுறைகளில் தயிரில் வெண்ணெய்போல் எளிதிற் கொள்ளத்தக்க படி திரண்டு திகழ்கிறது. இவை திருமறையும் திருமுறையுங் கொண்ட நூலமைப்பு வகைகள்!

திருக்குறளில் வரும் அறத்துப்பால் சீலத்தையும், பொருட்பால் நோன்பையும், இன்பப்பால் செறிவையும், பாயிரப்பகுதி வீட்டையும் பொதுமக்களுக்குணர்த்தும். சிறப்புமக்களுக்கு அறத்துப்பாலின் ஞானப்பகுதியில் வரும் 'நிலையாமை' யதிகாரம் ஞான சீலமாகிய அறத்தையும், 'துறவு' அதிகாரம் ஞான நோன்பாகிய பொருளாட்சியையும், 'மெய்யுணர்தல்' அதிகாரம் ஞானச் செறிவாகிய அருளின்பத்தையும், 'அவா அறுத்தல்' அதிகாரம் ஞான அறிவாகிய வீட்டு நிலையையும் மிகுநுட்பமாக விளக்கிப் பேராவியற்கையைத் தரும்.

திருமுறைகளும் திருவருட்பாவும் :

இவ்வாறெல்லாம் இயற்கைத் திறமாய் அமைந்த நால்வகை நெறியில், பக்குவச் சிறப்புடையோரை முறைமுறையே அழைத்துச் செல்வன தேவார திருவாசகத் திருமுறைகள்! ஆனால், இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா, இந்தப் படிமுறை அடிப்படையோடு மாறுபட வில்லையாயினும், சிறப்பாக நான்காவது ஞான நிலையிலும் ஞானஞான நிலையையே (ஞான சன்மார்க்கமே) பெரிதெடுத்து விளக்குகிறது; அவா அறுத்த பேரா இயற்கைப் பெரு நிலை அது! "ஞான சன்மார்க்கமே தெளிமின்" என்பது வள்ளலார் குரல்!

சீலம் முதலிய நான்கு வழிபாட்டு முறைகளை எல்லா மக்களும் எளிதில் அடைவது கூடாமையால் ஒவ்வொன்றையும் சீலத்திற் சீலம் முதலியன, நோன்பிற் சீலம் முதலியன என நன்னான்காகப் படிமுறைப்படுத்தி மொத்தம் பதினாறு படிகளாக்கி மக்களை மெல்ல மெல்ல நெறிகாட்டி அழைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் சமய குரவர்களாய் விளங்குவோருக்கு நேர்ந்து விடுகிறது.

வள்ளலாரோ என்ருல், பட்டினத்தார், தாயுமானர், குமர குருபரர் முதலிய பெரியவர்களைப் போன்ற அருட்சான்ரோர். சமயகுரவர்க்குரிய கடமைப் பொறுப்புகள் இப்பெரியவர்களுக்கும் உண்டென்ருலும், அம் முறைமைகளைக் கடைப்பிடித்தே தீர வேண்டுமென்னும் கட்டாயம் இவர்களுக்கு இல்லை. தமக்குச் சிறந்து விளங்கிய நுகர்வுகளையும் உண்மைகளையும் மற்ற மக்களும் அறிந்து உய்யும்படி அனைவர்க்கும் அருளுரை வழங்கிச் சென்றவர்கள்.

'திருவருட்பா'வில் வள்ளலார், நான்காவதில் நான்கு என்னும் பதினருவது பெருநிலையை, அஃதாவது அறிவில் அறிவாகிய ஞான நிலையை, சன்மார்க்கத்தில் சன்மார்க்கமாகிய ஞான சன்மார்க்கத்தைத் தாவிநின்று, அந்நிலையின் மாட்சியை மற்றவர்க்கும் பெரிதெடுத்துக் கூற விரும்பினர். மக்கள் படிமுறைகளின் நெறியே முன்னேறி வரவேண்டுமாயினும், அந் நெறிகளிலேயே பற்றுவைத்துத் தங்கிவிடாமல், அவை அத்தனையிலும் பற்றுவிட்டு அவா அற்றுச் சன்மார்க்கப் பெரு நிலைக்கு நேராய் ஓங்கிவர நோக்கங்கொள்ள வேண்டுமென்று தீவிரப்படுத்தினர். 'அனைவரையும் திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திடத்' தாம் இவ்வுலகத்தில் தோன்றியதாகத் தெரிவித்தார்.

வள்ளலாரின் மிகு பக்குவநிலை இயல்பாகவே இப் பெரு நிலையைத் தாவிவிட்டது. அதனலேதான் அப் பெருநெறி பிடித்தொழுகிய ஞானசன்மார்க்கச் செம்மலாகிய மாணிக்க வாசகப் பெருமானது திருவாசகத்தின்மேல் அவர்க்கு இயல் பாகவே நாட்டம் மிகுந்து சென்றது. அனைவரையும் அந்நிலைக்கு அழைத்துக்கொள்ள வேண்டுமென்று, இரக்கமே வடிவாம் வடலூரார் திருவுளங் கொண்டார்.

துறையும் நெறியும் :

அடையவேண்டிய முடிவான துறை எவ்வளவு முதன்மை யானதோ, அவ்வளவுக்கு அதனை அடைவிக்கும் நெறியும் கட்டாயமானது. நெறியிற் செல்லாதவர், துறையை அடைதல் இயலாது. மிகு தீவிரப் பக்குவநிலையில் உள்ளவர்களும் நெறி வழிச் சென்றுதான் துறையை அடையவேண்டும். மந்த நிலையி லுள்ளவர்கள், அந்நெறியில் மெதுவாகச் செல்லுவார்கள்; தீவிர நிலையிலுள்ளவர்கள் துரிதமாகச் சென்றுவிட முடியும்; மற்றப்படி இரு சாரார்க்கும் நெறிவழி இன்றியமையாததென்பதை யாரும் மறப்பதற்கில்லை. முற்பிறவியில் நலம் வாயாதவர்கள், நெறி தப்பி, நெறியல்லா நெறிகளில் உழன்று, துறை காண முடியாமல் அலைந்து கொண்டிருப்பதும் உண்டு.

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்"

என்பது சன்மார்க்கத்திற் சன்மார்க்கப் பெரியாராகிய மாணிக்க வாசகப் பெருமான் அருளிச்செய்தது; திருவாசகத்தின் இறுதிப் பதிகப்பாட்டு இது! கடைசி நிலையிலும் மாணிக்கவாசகர், ஒரு நெறியை நினைந்து பாடுதலும், தாம் செல்லும் நெறி திருவருள் சேர்க்கும் நெறி என அருளுதலும் இங்கே நினைவுகூரற் பாலன.

வள்ளற்பெருமான், 'ஞானசன்மார்க்கம்' என்னும் கடைசிப் படியை எட்டுந் துரிதத்தோடு சைவநெறியிற் சென்றவர்; வள்ளலார் வரலாறும் அவர் திருவருட்பாவும் முழுதும் இதனை மெய்ப்பிக்கும். சைவ நெறியில் அவர் மிகத் துரிதமாக முன்னேறியிருக்கிறார்.

தொடர் வண்டிகளில் துரிதமாகச் செல்வோர்க்கு நெறியின் பகுதிகளிற் சில நிலையங்கள் ஓரளவு புலப்படுகின்றன; பல புலப் பட்டும் புலப்படாமைபோற் கழிகின்றன. வண்டி துரிதமாகச் சென்றாலும் மெதுவாகச் சென்றாலும் நெறியின் ஒவ்வொரு பகுதியிலும் பொருந்தியே செல்லுகின்றதென்பதை மறப்பதற் கில்லை.

இராமலிங்க அடிகள், திருவெண்ணீறணிந்து திருவைந் தெழுத்தோதித் திருக்கோயில் சூழ்ந்து உருக்கமாகத் திருமுறைகளும் பாடி இறைவனுடைய உருவத் திருமேனிகளை வழிபட்டுச் 'சீலம்' சிறந்திருக்கிறார்.

இறைவன் பேரொளிப் பிழம்பாகத் தோன்றி இலிங் கோற்பவராக விளங்கிய அருவுருவத் திருமேனியையும், அது தோன்றிய சோதி வடிவிலேயே வடலூரில் இதய ஞானமன்றில் நிறுவி வழிபட்டு 'நோன்பு' நிலையிலும் வள்ளலார் மேம்பட்டிருக் கிறார்.

தில்லையிலும் வடலூரிலும் திருச்சிற்றம்பலங் கண்டு பெருமான் அடிக்கடி அருவத் திருமேனியிலும் உள்ளுணர்ந்து தோய்ந்து 'செறிவு' நலத்திலும் செழித்திருக்கிறார்.

மேலெடுத்துக் காட்டிய உருவத் திருமேனிகள் மூன்றையுங் கடந்த இயல்பான இறைவனது பெருநிலையை அவனருளே கண்ணாகக் கண்டு அவனே தானேயாகிய அந்நெறியில் ஒன்றிக், காண்பதும் காணப்படுவதும் காட்சியும் அற்று, மேட்டுக்குப்பத் திலும் வடலூரிலும் பிறவிடங்களிலும் அவ்வப்போதும் அருட் காதலாய் ஞானநிட்டையிற் குழைந்து திளைத்து 'அறிவுநல' மாகிய சன்மார்க்கத்திலும் வள்ளலார் திகழ்ந்திருக்கிறார்.

இந் நிகழ்ச்சிகள் பலவும் நுகர்வுகளும் வள்ளலார் வரலாற்றிலும் திருவருட்பாவிலும் எங்குங் கேட்கப்படுகின்றன.

வள்ளலார், இங்ஙனம் கடைசிவரையிற் சைவச் செந்நெறி கடைப்பிடித்து, அதனில் மிகத் துரிதமாக முன்னேறி இறுதிப் படிநிலையாகிய சன்மார்க்கத்தில் தாவி உயர்ந்து, அருளிரக்கம் மேலிடுதலால் அங்கிருந்து கீழ்நோக்கி அனைவரையும் அந் நிலைக்கு மிகுவிரைவில் வந்து சேரும்படி அழைக்கின்றார்.

"சென்று வாழ்த்துதி நன்று நெஞ்சமே
என்றும் நல்வளம் ஒன்றும் ஒற்றயே"

"அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் சோதி"

"செப்பாத மேல்நிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்"

"அடர்கடந்த திருவமுதுண் டருளொளியால் அனைத்தும்
அறிந்துதெளிந்து அறிவுருவாய் அழியாமை அடைந்தேன்"

"மருள் உளங் கொளும் வாதனை தவிர்ந்து அருள்வலத்தால்
தெருள் விளங்குவீர் ஞானசன் மார்க்கமே தெளிமின்"

என்று சிவநெறிப் படிகள் அனைத்திலும் பொருந்தி வள்ளலார் துரிதமாகச் சென்றுயர்ந்த உண்மையும், சிறப்பாகச் சிவசன் மார்க்கத்துக்கு அதன் மாட்சி தெரிவித்து மக்களை அழைக்கும் அழைப்பும் திருவருட்பாவில் அங்கங்கும் வருகின்றன.

தேவார திருவாசகங்களாகிய திருமுறைகள், சைவநெறியில் மக்களை அவரவர் தகுதிக்கேற்றபடி உரிய படிமுறைகளில் அமர்வித்து நுகர்வித்து மேன்மேல் தகுதிகள் நிலைகொள்ளப் பழக்கிப் பக்குவப்படுத்திக்கொண்டு, கடைசிப் படியாகிய சிவசன் மார்க்கத்துக்கு ஏற்றுகின்றன. முறையோடு இங்ஙனஞ் செல்லுதலால் தேவார திருவாசகங்களுக்குத் 'திருமுறைகள்' என்னும் பெயர் பொருந்தும். அவை மரபு கொண்டும் வழங்கி வருகின்றன.

ஆனால், வள்ளலார் திருவருட்பா, சைவநெறியைக் கடைப்பிடித்தாலும் மக்களை அதன் படிமுறைகளில் முறை முறையே அமர்வித்துப் படிவித்து ஒன்றின் உதவியினால் மற்றொன்றுக்கு அழைத்துச் செல்லுதலின்றி, நேராய்ச் சிவ சன்மார்க்கத்துக்கே துரிதமாய் முன்னேறி வருமாறு,

"இருளான மலம் அறுத்து இகபரம் கண்டே
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்க ளெல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போக!

தெருளான சுத்தசன் மார்க்கமதொன்றே
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருளான வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே''

எனப் பிழிந்து கூறுகின்றது மிகு பக்குவ நிலையினரான வள்ளற் பெருமானுக்கு இங்ஙனம் செல்லுதல் எளிதாயிற்று. 'மருளான பற்பல மார்க்கங்களெல்லாம்' என்று இங்கே வந்தவை, தாசமார்க்கம் முதலான நால்வகை மார்க்கங்கள் அல்ல; மணிவாசகப் பெருமான் குறித்தருளிய சிறு நெறிகளை, நெறியல்லா நெறிகளை உணர்த்தும். 'தாசமார்க்கம்' முதலானவை அருள் நெறிகள்; 'அருட் சிவநெறி' என்று வள்ளற் பெருமானே, அருட்பெருஞ்சோதி அகவலின் முகப் பிலேயே திருவாய்மலர்ந்தருளுதலும், இங்கும் ''அருளான வீதியில்'' என்று அருளுதலும் நினைவு கூரப்படும். நெறியல்லா நெறிகளை அவர் ''மருளான மார்க்கங்கள்'' என்று விதந்ததும் இவ் வேறுபாடுகளை இனிதெடுத்துக் காட்டும்.

வள்ளற் பெருமானது நெறி அருட் சிவநெறியே! அந் நெறிவழிப்பட்ட சிவசன்மார்க்கமே அவரது மார்க்கம்!

''துன்மார்க்க மெல்லாம் தொலைத்து விட்டேன், சுத்தசிவ
சன்மார்க்க சங்கம் தலைப்பட்டேன்''

என்பது அவர் வாய்மொழி! இங்கே மருளான மார்க்கங்களைத் துன்மார்க்கம் என்றதும் நினைவு கூர்தற்குரியது. தாசமார்க்கம் முதலியவற்றையா துன்மார்க்கங்கள் என்று வள்ளலார் கூறுவார்? வள்ளற் பெருமான் கருத்துகளை முன்பின் முரணுமற் கொள்வது அன்பர்கள் கடமை.

ஆதலால் ''சிவமே பொருளெனும் சன்மார்க்க முழு நெறி''யையே பெரிதெடுத்து விளக்கும் திருவருட்பாவைத் திருமுறைகளாகப் பிரிப்பதும் வழங்குவதும் அதன் தீவிரத்துக்கு ஒவ்வாமையாய் உள்ளன. பன்னிரு திருமுறைகளைத் தவிர முன் எழுந்த வேறு எந்நூல்களும் தம் பிரிவுகளைத் திருமுறைப் பெயரால் இப்படிப் பிரித்துக் கொள்ளவில்லை என்பதும் இங்கே நினைவு கூர்தற்குரியது. 'சந்நிதி முறை' என்பது நூலின் பெயர்; நூற்பிரிவின் பெயரன்று; 'முறை' என்பது நூலுக்கே ஒரு பெயராதலின் 'சந்நிதி முறை' என்னும் நூற்பெயரமைப்பு இதனின் வேறு!

சில இலக்கியக் கல்வெட்டுகளில் வழக்குகள்

[பி. எல். சாமி, பி.எஸ்ஸி.,]

பிற்காலக் கல்வெட்டுகள் சிலவற்றில் சங்ககால வழக்குகள் காணப்படுவது வியப்பைத் தருகின்றது. சங்க காலத்தை யொத்த பழைமையான கல்வெட்டுகள் நமக்கு நிறையக் கிடைத்தில. இருப்பினும் பிற்காலக் கல்வெட்டுகளில் சங்க இலக்கிய வழக்குகள், பிற இலக்கிய வழக்குகள் இருந்தால் அவை தொடர்ந்து வந்த மரபால் வந்திருக்கவேண்டுமெனக் கருத வேண்டும். பல்லவர்காலக் கல்வெட்டு ஒன்றில் 'தான் ஆராய்ந்த பண்டிதரில் மேந்தோன்றி' என்ற தொடர் காணப் படுகின்றது. இதில் வரும் மேந்தோன்றி என்ற வழக்கு சங்க காலத்திலிருந்து வருவதாகும்.

"இலமலர் அன்ன அஞ்செங் நாவிற்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்
நிறையருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற" —அகம். 142.

"இவண் விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே" —புறம். 158

"கட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க்குவை
பேருலகத்து மேஎந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்" —மதுரைக்காஞ்சி, 131-134.

கொடையில் மேம்பட்டு விளங்கும் தலைமையினையும், பெரிய நன்மக்களிடத்து மேலாய்த் தோன்றுகையினால் விளங்கும் தலைமையினையும் குறிக்கச் சங்கப் பாடல்கள் 'மேந்தோன்றி' என்ற சொல்வழக்கைப் பயன்படுத்துவதைக் காணலாம். இதே பொருளிலே பல்லவர்களின் கல்வெட்டிலும் இந்த வழக்குப் பயில் வதைக் காணலாம். ஆனால் இந்தச் சொல் மலையாள மொழி யில் பேச்சு வழக்கில் காந்தள் பூவைக் குறித்து இன்று வழங்கு கின்றது. காந்தள் பூவை மலையாளத்தில் 'மேந்தோன்னி' என்று அழைக்கின்றனர். காந்தள் ஒரு கொடியாகும். கார்த்திகை காலத்தில் திடீரெனச் செடிப்புதர்களின் மேல் ஏறித்

தோன்றித் தெரியும்படி பூப்பதால் காந்தளை மேல் தோன்றி (மேந்தோன்றி) என்றழைக்கின்றனர். இந்த மலையாளப் பெயரும் சங்ககால மரபைப் பின்பற்றியதாகும். சங்ககாலத்தில் காந்தளைத் 'தோன்றி' என்றழைத்தனர். மேலே பூத்துத் தோன்றுவதையே 'தோன்றி' என்றழைத்தனர். தானாக நிலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் இலிங்கத்தைத் 'தான் தோன்றி' என்று சொல்வர். தோன்றி என்ற சொல்வழக்கு இதிலிருந்து தெளிவு பெறுகின்றது.

பத்தாம் நூற்றுண்டின் துவக்கத்தில் வாழ்ந்த தாணுரவி என்ற சேர அரசனின் கல்வெட்டில் 'நாடுவாழ்தல்' என்ற சொல் வழக்கு அரசன் அல்லது குறுநிலத் தலைவனைக் குறித்து வழங்குகின்றது. இந்த வழக்கிலும் சங்க கால மரபைக் காணலாம். பெரியதிருமொழியில் 'குறையலூர் வாழி' என்பதற்கு 'திருக்குறையலூரை அவதார ஸ்தம்பலமாக உடையவரை அதுவோழும்படி அத்தை நோக்குகிற ராஜாவென்று' பெரியவாச்சான் பிள்ளை ஈட்டின் விளக்கத்தில் கூறியுள்ளார். குறுநில மன்னர்களுக்கு 'நாடுவாழ்தல்,' 'வாழி' என்ற பெயர்கள் வழங்கின. இன்றும் மலையாளப் பேச்சு வழக்கில் 'நாடுவாழி' என்ற வழக்கு குறுநிலமன்னனைக் குறித்து வழங்குவதைக் காணலாம். பதிற்றுப்பத்துப் பதிகம் கூறும் அரசர்களில் 'செல்வக் கடுங்கோவாழியாதன்' என்ற பெயருடைய அரசன் உள்ளான். இவன் இயற்பெயரால் செல்வக்கோ என்று 67ஆம் பாட்டில் அழைக்கப்படுகின்றான். பதிகத்தில் வரும் பெயரில் வாழி என்ற சொல் மன்னன் என்ற பொருளில் வருவது தெரிகின்றது. 56ஆம் பத்தில் வரும் வாழ்ச்சி என்ற சொல்லும் மன்னனைக் குறித்து வழங்கியதாகவே தெரிகின்றது. வாழ்ச்சி என்பதற்கு வாழ்வு என்று உரை கூறியுள்ளனர். வாழ்வு வெற்றிச் செல்வம் என்றும் விளக்கம் கூறப்பட்டுள்ளது. வாழ்ச்சி என்ற சொல்லே தாணுரவியின் கல்வெட்டில் வாழ்தல் என்று தொழிற்பெயராய் அரசனைக் குறித்து வந்தது என்று கொள்வதே பொருத்தமாகும். வாழ்வுடைய மன்னன், வாழும் செல்வத்தையுடைய மன்னன் என்று விளக்கம் கூறலாம். நாடு வாழ்தல், நாடுவாழி என்ற வழக்குகளில் வாழி என்ற சொல் மன்னனைக் குறிப்பதால் பதிற்றுப்பத்தில் வரும் வாழ்ச்சி என்ற சொல்லும், பதிகத்தில் வரும் 'வாழி' என்ற சொல்லும் அதே பொருளில் வழங்கின என்று கொள்வதே ஏற்புடைத்தாகும். பெருமன்னனைக் 'கோவாழி' என்றும் கூறினர் என்று கருதலாம். கோச்செய்தல், கோவாழி என்ற வழக்குகள் அதிகாரம் செய்தல் என்ற பொருளில் அப்பர் தேவாரத்தில் வருகின்றன. நாடுவாழ்தல், நாடு

வாழி என்ற சொல்வழக்குகளும் தொழிற்பெயராகத் தோன்றி நாட்டை வாழச் செய்யும் தலைவனைக் குறிக்கும் வழக்காக மாறிற்று.

திருச்செங்கோட்டிலிருந்து கிடைத்த இராசகேசரிவர்ம னுடைய பத்தாம் ஆண்டுச் செப்பேட்டுச் சாசனத்தில் கொல்லி மழவன் பிரதிகண்டனுயின சுந்தரச்சோழன் என்பான் ஈழத்துப் போரில் இறந்த அவனுடைய தந்தையின் தாகத்தைத் தணிக்க "எங்கள் ஆச்சர் ஈழத்துப்பட அவர் ஸ்ரீ மஹாதாஹத்துக்கு சிறுபாடு" தர்மம் செய்தது கூறப்பட்டுள்ளது. இங்கே சிறுபாடு என்ற வழக்கு தண்ணீர்ப் பந்தலைக் குறித்தது தெளிவாகும். இதே சிறுபாடு என்ற வழக்கு நற்றிணை 341ஆம் பாட்டில் தாகத்தைத் தணிக்கும் தண்ணீரைக் குறித்து வழங்கியிருப்ப தாகத் தெரிகின்றது.

"வங்கவரிப் பாறைச் சிறுபாடு முனையின்
செம்பொறி அரக்கின் வட்டுநா வடிக்கும்
விளையாடு இன்நகை அழுங்காப் பால்மடுத்து"

—*நற்றிணை 341.*

வெள்ளை வரிகளையுடைய கற்பாறையில் விழும் அருவி நீரைக் குடித்து வெறுப்படையின் கள்ளின் தெளிவைப் பருகி மகிழும் குறவர்களைப்பற்றி இந்த நற்றிணைப் பாடல் கூறியுள்ளது. சிறுபாடு என்பது தாகத்தைத் தணிக்கும் சிறிது நீரையே குறித்து வழங்கிற்று என்று கருதவேண்டும். பாறையில் விழும் தெளிந்த நீரைக் குடித்ததை வெறுப்பின் அரக்கின் வட்டால் செய்யப்பட்ட நாவின் வழியாக ஊற்றப்படும் பனங்கள்ளைக் குடிக்கும் குறவர்களைப்பற்றி நற்றிணைப் பாடல் பாடியுள்ளது. ஆச்சர் என்ற சொல் ஆசான் என்பதன் மறு உருவமாகும். 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியவாச்சான் பிள்ளையின் பெயரில் ஆச்சன் என்று இதே பெயர் வழங்குகின்றது.

தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியலில் உரையாசிரி யர்கள் "சாத்தன்ருயைக் காதலன், நாய் தேவனுயிற்று" என்ற தொடர்களை எடுத்துக்காட்டாகச் சொல்லியுள்ளனர். "நாய் தேவனுயிற்று" என்பதற்குத் தெளிவான பொருள் அண்மையில் சாத்தனூருக்கருகில் எடுத்தனூரில் கண்டுபிடித்த நடுகல்லில் காணப்பட்ட கல்வெட்டிலிருந்து தெளிவாகின்றது. முதலாம் மகேந்திரவர்மனின் 54ஆம் ஆட்சியாண்டில் நிகழ்ந்த ஒருபோரில் கருந்தேவகத்தி என்ற வீரன் ஆநிரை கவரும் போரில் இறந் தான். இந்த வீரனின் நாயான 'கோவிவன்' கொள்ளையடித்த வர்களைக் கடித்து மாண்டது. வீரன் தேவகத்தியின் உருவமும்

கோவிவன் என்ற நாயின் உருவமும் நடுகல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. நடுகல்லில் பொறிக்கப்பட்ட வீரனைத் தெய்வமாகக் கொண்டாடுவது தொன்று தொட்ட மரபாகும். நடுகல்லில் பொறிக்கப்பட்ட நாயும் தெய்வமாகத் தொழப்பட்டது. ''நாய் தேவனுயிற்று'' என்று உரையாசிரியர்கள் காட்டிய சொற்றொடர்க்கு அரிய விளக்கம் கல்வெட்டு வாயிலாகக் கிடைத்துள்ளது.

''கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே''

என்று ஆண்டாள் திருப்பாவையில் ஆனைச்சாத்தனைப் பற்றிப் பாடினுள். ஆனைச்சாத்தன் என்பது வலியன் என்று அழைக்கப்படும் கரிய குருவியாகும். ஆனைச்சாத்தன் என்ற பெயர் வழக்கு தமிழிலக்கியத்தில் ஆண்டாளின் திருப்பாவையில் மட்டுமே காணப்படுகின்றது. சோழப்பேரரசர் இராசராசன் காலத்தில் ஆனைச்சாத்தன் என்ற பெயரை மக்களும் சூடிக் கொண்டனர். வைணவர்களாகிய இடைக் குலமக்கள் ஆண்டாளின் திருப்பாவையில் வழங்கிய பெயரைப் போற்றித் தமக்கும் இட்டுக் கொண்டதாகத் தெரிகின்றது. ''நித்த விநோத வளநாட்டு நல்லூர் நாட்டுப் பெருங்கறை இருக்கும் இடையன் ஆனைச்சாத்தனுக்கு அடுத்த பசு நாற்பத்தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு'' என்று தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்வெட்டு கூறுகின்றது. இதே கல்வெட்டில் சாத்தன்காரி, காரிசாத்தன் என்ற பெயர்கள் பல இடங்களில் வருகின்றன. காரிசாத்தன் என்பதும் ஆனைச்சாத்தன் என்பதும் கரிக்குருவியின் பெயர்களேயாகும். இப்பெயர்களை அக்கால மக்கள் விரும்பித் தரித்தனர் என்று தெரிகின்றது. சங்ககால மன்னனுன காரியும் இப்பெயரைத் தரித்திருந்தான்.

கல்வெட்டுத் தமிழ் பேச்சுத் தமிழ்போலத் தோன்றினும் கல்வெட்டிலும் இலக்கிய வழக்குகள் பல உண்டென்பதை ஆராய்ந்து பார்க்கின் தெளிவுறலாம்.

தமிழ்த் தூய்மை

தமிழ் முன்னோர் தமது தமிழ் மொழியைப் பிறமொழிக் கலப்பின்றித் தூய்தாய் எல்லா வளனும் நிரம்ப வளர்த்து வழங்கி வந்தவாறு போல, இஞ்ஞான்றைத் தமிழரும் தமிழ் மொழியைத் தூயதாய் வளனுற வளர்த்து வருதல் வேண்டும்.

—மறைமலையடிகள்
'தமிழர் மதம்' பக். ௨௬௧

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(சிலம்பு-௪௮, பரல்-௨, ௬௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

8. சிவகுரு செய்த திருப்பணி

இப்போது என்னை வரவேற்று இந்த நாட்டைச் சுற்றித் தொண்டு செய்யத் துணைநின்ற சைவசித்தாந்த சங்கத்தைக் காண்போம். அதை நாட்டிய சிவசுப்பிரமணிய குருசுவாமிகள் ஓர் அரிய ஆன்மா, பெரிய அன்பர். இவர் 10-5-1910ஆம் ஆண்டு டர்பானுக்கு அருகே கடற்கரை ஊரான டோங்காட்டிற் பிறந்தார். இவர் வீரசைவர். கலைஞான தத்துவம் எழுதிய வீரபிரம்மு என்ற தெலுங்குப் புலவர் மரபினர். இவர் பெற்றோர் சிறந்த சிவத் தொண்டர். அவர்கள் நெசவு செய்து பிழைத்தனர். இரண்டு வயதுக் குழந்தையை டண்டி (Dundee) சிவசுப்பிரமணியர் கோவிலுக்கு எடுத்துச் சென்றனர். அங்கே குருக்கள் முருக னுக்குக் கற்பூரவொளி காட்டி மணியடித்தபோது, குழந்தை சிவசிவ என்று சிரித்துக் கைகொட்டித் துள்ளியது. குழந்தைக்குப் பெற்றோர் சிவசுப்பிரமணியன் என்றே பெயரிட்டு அருமையாக வளர்த்தனர். ஆனால் அன்னையும் அப்பனும் ஒருவர்பின் ஒருவர் சிவனடி சேரவே குழந்தை அனாதையானது. கடவுளே அதற்கு அம்மையும் அப்பனும் ஆனான். கம்பளி சமுக்காளம் நெய்யும் உறவினர் இக்குழந்தையை வளர்த்தனர். ஐந்து வயதிலேயே சிவகுரு கைத்தாளம் போட்டுச் சிவமந்திரங்களைப் பாடி யாடினான். வயிற்றுப் பாட்டிற்கு நெசவைக் கற்றான். சிவகுரு நெய்த சமுக்காளங்களும் கம்பளங்களும் இன்றும் உள்ளன. க. முத்துசாமிக் கவுண்டரிடம் சிவமணி தமிழும் ஆங்கிலமும் கற்றான். திருக்குறள், திருவாசகம், தேவாரம், திருஅருட்பா, திருப்புகழ் ஆகிய பதினூல்களைத் தக்க புலவரிடம் கற்று நாளெல்லாம் பாடிக்கொண்டே தனது நெசவுத் தொழிலை நடத்திக்கொண்டு பிழைத்தான். சிவ சிவ என்றே தறியை ஓட்டினான். சிவகுரு ஒரு நல்லாளைக் காதலித்து மணந்தான். மரபு வாழக் குழந்தைகளும் இரண்டு பிறந்தன. அவர்கள் பெரியவர்களாகி இன்று சிவத்தொண்டும், பிழைப்புக்குத் தொழிலும் செய்கின்றனர்.

சிவகுரு முதலில் ஒரு தரும பாடசாலை நாட்டி மக்களுக்கு ஔவையின் வெண்பாக்களுடன், திருக்குறளும் கற்பித்தார். பிறகு சமரச சன்மார்க்க சங்கம் கண்டு அருட்பாசுரங்களைக்

கொண்டு சைவசமயத்தைப் பரப்பினர். பழம் பாடல்களைப் பாடிய ஆர்வத்தில் அவர் உள்ளத்தில் புதுப்பாடல்கள் எழுந்தன. அவற்றைச் சிவகுரு தாளம் கொட்டிக் குரல் உயர்த்தி, உணர்ச்சி ததும்பப் பாடும்போது மக்கள் உள்ளம் குழைந்து நெகிழ்ந்து கண்ணீர் கசிந்து ஆவேசம் கொள்ளும். சிவனை நினைந்து நீராய்க் கசிந்துருகவே சற்று அயரும் அன்பரைக் கண்டு மக்கள் மனம் சிவசிவ என்று துள்ளும்.

"ஓங்கார மேடையிலே நடமாடும் மணியே
ஓம் நமச்சிவாய என்ற உடன் வாவா கடவுளே"

என்று அவர் பாடும்போது அன்பர் கூட்டம் உடன்பாடியாடும் காட்சி வியன்பெரும் காட்சியாகும்.

சிவகுரு சிலநாள் கடற்கரையிலோ, பூங்காவிலோ தனித்து உட்கார்ந்திருப்பது வழக்கம். ஒருநாள் அவர் சிவதரிசனம் பெற்றார். சிவலிங்கத்துள் சத்திக் கனலைக் கண்டார்.

அந்த நாட்டிலே கிறித்துவம் பரவி எங்கும் சர்ச்சுகள் எழில் பெற்றன. அதில் கிறித்தன்பர் பெட்டியாழுடன் குரலிணைத்துக் கூட்டமாகப் பாடுவது கேட்ட எவர் உள்ளமும் நெகிழும். அந்தக் காட்சியைக் கண்டு கண்டு நஞ் சிவகுருவும் சைவசமயத்திற்கு அதேபோலக் கோயிலும் வழிபாடும் அமைத்துக் கூட்டப் பாட்டு முழங்கச் செய்தார்.

இதற்கு நல்லன்பர் இசைந்தனர். உமாபதி சிவம் 37, டெர்பி தெருவில் ஒரு பெரிய கட்டிடத்தை விலைக்கு வாங்கியளித்தார். அங்கே சிவகுரு கருவறையமைத்துச் சிவலிங்கம், சத்தி, நடராசர், முருகன், கணபதி எல்லாம் படிப்படியாக நாட்டி மகர விளக்கு ஏற்றி, ஒளிவளர் சந்நிதியமைத்தார். இதற்குமுன் பெரிய கூடம் உண்டு; அதில் இருக்கைகள் அணியணியாகக் காணும். அதில் அன்பர் அமர்வர்; பக்கத்தில் பிடில், பெட்டியாழ், தாளம், தண்ணுமை ஆகிய இசைக் கருவிகள் முழங்கும். அன்பர் குரலுடன் இசைக் கருவிகளும் கூடிக் குழையும்போது இன்பச் சிலிர்ப்பெடுக்கும். இதே கூடத்தில் திருமணச் சடங்குகளும் நடக்கும். திருநாள் பெருநாட்களில் சிறப்பான வழிபாடு நடக்கும். கார்த்திகை, பொங்கல், தீபாவளி, குருபூசைகள், புத்தாண்டு நாட்களில் பெருங்கூட்டம், பெருவிருந்து, பெரும் இசையின்பம் நிகழும்.

சிவகுரு வுள்ளம் சிவமயமானது. நெசவு வேலை நின்றது; குடும்பப்பற்று குறைந்தது. சங்கமே நினைவு; சங்க வழிபாடே வாழ்வு; சைவமே மூச்சு; சிவமே பேச்சானது. இவரது உள்ள

மும், அன்பு வெள்ளமும், உருக்கமும், அருட்பெருக்கமும் அரிய தொண்டரை ஈர்த்தன. தமக்குப்பின் சைவம் நின்று நிலவ அந்தத் தொண்டரைப் பயிற்றினுர் சிவகுரு. அவருள் :

1. **கே. கவுண்டர் :** காவல்துறை ஊழியர்; பெருந்தன்மை யாளர். இங்கே யோக சமாசத்தில் மூன்று மாதம் தங்கியவர். இவர் சங்கத் தலைவர்.

2. **உமாபதி சிவம் :** வணிகர்; சிவநேசர்; சங்கக் கட்டிடம் விளக்கியவர்.

3. **சுவாமி சிவானந்த நாவலர் :** நல்ல அறிவாளி; பேச்சாளர்; இவரே இப்போது சங்க குரு; பரமாசாரியார். இவர் மனைவி **மங்கையர்க்கரசி** உமாபதியின் மகள்; சிவகுருவே இருவருக்கும் மணம் முடித்தவர். இருவரும் வள்ளுவரும் வாசுகியும்போல வாழ்கின்றனர்.

4. **கருணுனந்தர் :** இவர் கட்டிடத் தொழிலர்; சிறந்த சிவ பத்தர். உம்லாடுஃஜானுவில் சங்கத்திற்குப் புதிதாக மாபெருங் கோயில் அமைத்தவர். அந்தக் கோயிலில் பெரிய பேச்சகம் (Lecture Hall) உள்ளது. பள்ளிக்கூடம் உள்ளது. சைவப் பாதிரிகளைப் பயிற்ற சமயப் பள்ளியுள்ளது. அடியார்கள் வசதி யாக வாழ உறையுள் பல உள்ளன. எனக்கும் ஒரு நல்ல உறையுள் அமைத்துள்ளனர். இங்கே ஞாயிறுதோறும் சைவக் கூட்டம் நடந்து வருகிறது. தேவாரம் முழங்குகிறது.

5. **அருணுசலம் :** இவர் கருணுனந்தர் மகன்; சங்கச் செயலர்; அல்லும் பகலும் சங்கத்திற்கே பாடுபடுகிறவர். இவர் மனைவி மாரியம்மாள் சங்கத்திற்காக உழைப்பவர். வினைத் திட்பமும் மனத்திட்பமும் உடையவர்.

6. **பிரமானந்தர் :** வாழ்வுறுதி (Life Insurance) நிலைய அலுவலர். மாசற்ற உள்ளமும், அளவற்ற அன்பும், தொண் டூக்கமும், செயலாக்கமும் கொண்ட திறமையாளர். இவர் மனைவி **பார்வதியம்மையார்.** கணவனுக்கேற்ற கற்பரசி, சங்கத் தொண்டே, சலியாவுழைப்பே இவர் இன்பமாகும். இருவரும் சங்கத்தின் உள்ளத்துடிப்புப் போன்றவர்.

இவ்வாறு பல அரிய தொண்டர் சைவசித்தாந்த சங்கத்தை மாணுறப் பேணுகின்றனர். இந்தச் சங்கத்திற்கு நாடெங்கும் நூறு கிளைகள் உண்டு. நான் 75 கிளைகளைக் கண்டு தொண்டு பரவினேன். இத் தொண்டர் அனைவரும் ஈர அன் பினர்; ஒவ்வொரு தொழிலாலே குடும்பத்தைக் காத்து சங்கத்

திற்கு ஆக்கந்தேடும் அறிவாளிகள். இவர்கள் வழிபாட்டு முறைகளை நன்கு உணர்ந்தவர்கள். அனைவரும் பாதிரிமார் போலவே வெள்ளைக்குப்பாயம் போட்டு, இடையில் நீல நாடா கட்டி, அக்கமாலை பூண்டு, நெற்றியிலே திருநீறிட்டு விளங்குகிறார்கள். அனைவரும் சிவகுருவின் பாடல்களைச் சேர்ந்து பாடுவார்கள்.

சிவகுரு ஒருநாள் ஆழக்குழியில் இறங்கி அதை நன்றாக மூடச்செய்தார். மறுநாள் அதைத் தோண்டியதும் அப்படியே எழுந்து புன்னகைத்து ஓம் நம! சிவாய என்று வணங்கினார். அவர் உயிர்ப்பு அடக்கத்தால் அவ்வாறு செய்ததைக் கண்டு அனைவரும் வியந்தனர். அவர் 5—5—1953இல் ஓம் நம: சி...வா...ய...என்று உடலை நீத்தார். அவருக்குப் பாமாலை சூட்டுவோம்.

சிவசுப்பிரம் மணியம் வாழ்க - குரு சுப்பிரம் மணியம்
தவசிலன் வாழ்க - சைவத் - தணல் வீரன் வாழ்க !
கருணைத் தங்கமவன் - காரியச் சிங்கமவன்
அருணச் சுடர்போலே - அழகுச் சுடரவனே
சைவத் திருநெறியில் - வையம் உய்ந்திடவே
தெய்வப்பணி செய்தான் - ஐயன் அமராத்மா !

சிவசந்நிதி :

சிவகுரு நாட்டிய சைவசங்கக் கோயில் வழிபாடுகள் மிகக் கவர்ச்சியாயிருக்கும்; கருவறையில் இலிங்க சத்தி பெரிய பூமாலை சூடி விளங்கும். படிப்படியாக மகர விளக்குகள் காணும். நறுமணப் புகை பரவும். குருக்கள் தூய வெண் அங்கி பூண்டு அங்கே நின்று மணியடிப்பார். எல்லாரும் எழுந்து நின்று ஐந்தெழுத்துடன் ''உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்'' பாடுவர். பிறகு குருக்கள் விளக்கை ஒவ்வொன்றாக ஏற்றிக்கொண்டே பாடுவார்—எல்லாரும் அவருடன் பாடுவார்கள் :

அகர மணியே ஆனந்தச் சைவ நன்மணியே
உகர மணியே விஷ்ணு - விநாயக நித்தியமணியே
மகர மணியே மாணிக்கமலரில் அமர்ந்த மணியே
வகர மணியே அகரமுடன் ஆடும்.

ஓங்காரா நீயே துணையே

அன்பே, இன்பமே - துன்பந் துடைக்கும் துணையே
அன்பே அண்டமே பொன்னம்பல வாண சிவமே
அன்பே அருளே மருள்நீக்கு மதுரக் கனியே
அன்பே ஆனந்தமே, நிறைலிங்கா நீயே துணையே!

அனைவரும் அமர்ந்து ஐந்தெழுத்தைச் செபமாலையிற் செபிப்பர். பிறகு அருட்பாடல்கள் முழங்கும் "தோடுடையசெவியன் "பொன்னார் மேனியனே", "மெய்தான் அரும்பி," "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி" "சொற்றுணை வேதியன்" "மாசில் வீணையும்" "மற்றுப்பற் றெனக்கின்றி" முதலிய பதிப்பாடல்களுக்குப் பிறகு சமய விளக்கம் நடக்கும்—இறுதியில் "ஓம் நமச்சிவாய இந்தச் சகமெல்லாம் நின்மயமே—ஓம் நம: சிவாய நான் கண்டது நின்மயமே" என்ற பாடல் முழங்கும்—பிறகு அவரவர் பிழைக்கு வருந்துவர்—முடிவில்,

திருமொழி கல்லாத பேசாத பிழையும்
திருவடி நினையாத தொழாத பிழையும்
திருஐந்தெழுத்தை ஓதாத பிழையும்
திருநீறு உருத்திராக்கம் அணியாத பிழையும்
திருஆலயம் வலம் வராத பிழையும்
திருவடி யாரை வணங்காத பிழையும்
திருவுருவில் என்னுள் சேர்க்காத பிழையும்
திருஐயா, மற்றெல்லாப் பிழையும் பொறுத்தருளே
ஓம் திருச்சிற்றம்பலம்
தேவா நீயே துணை! நீயே துணை, நீயே துணை!

என்று அனைவரும் வழுத்தியதும் தீபாராதனை செய்து மணியடிப்பார் குருக்கள்.

தேவா காவாயே! தேவா காவாயே
தினம் தேவா காவாயே
பாவங்களை நீக்கித் தேவா காவாயே

என்ற பாட்டு முழங்கும்.

இத்துடன் வழிபாடு முடியும்.

திருமணச் சடங்குகளுக்கு வெவ்வேறு பாட்டுண்டு. இவ்வாறு டர்பானில் ஓர் ஒழுங்குமுறையான சைவ சங்கம் நடைபெற்று வருகிறது. இதற்குப் பணி செய்தல் என் இன்பமாகும். சைவம் பிறந்த தமிழகத்திலும் இவ்வாறு முறையாகக் கூட்ட வழிபாடு நடக்கவேண்டும். யோக சமாசத்தில் அவ்வாறே நடத்திவருகிறோம்.

———

அருளாட்சி

நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை. குறள்-242

தமிழில் எழுதுவோம்

[ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனுர், எம். ஏ.]

(முன் ௧௧௦ஆம் பக்கத் தொடர்ச்சி)

3. அன்றும் ஆண்ட தாய்

பன்னெடுங்காலமாகத் தமிழ், அரசாளும் மொழியாக இருந்து வந்திருக்கிறது என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள். ஆங்கிலேயரும் முன்பிருந்தபடியே தமிழையே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து வைத்துக் கொள்வதா ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்குவதா என்று முதலில் சிந்தித்து வந்தனர். திரு மெக்காலே செய்த முடிவே, ஆங்கிலத்தைப் புகுத்துவது என்பது. அதற்காக நம்மவர்களை ஆயத்தம் செய்வதற்கே, நம்முடைய பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலத்தை நுழைத்தார்கள். நம்மவர்கள் ஆங்கிலம் பயின்று, ஆட்சியின் எல்லாச் செயல்களுக்கும் அம்மொழியைப் பயன்படுத்த வல்லுந ராகும் வரையில், தமிழும் ஆட்சிமொழியாக இருந்து வந்திருக் கிறது. படிப்படியாகத் தமிழ் ஒடுக்கப்பெற்று, ஆங்கிலம் விரிவு படுத்தப்பட்டது.

ஆங்கிலேயர் நம்மை ஆளத்தொடங்குவதற்கு முன்பு நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் இசுலாமியர்கள் ஆவர். அவர்களுக்கு முன்பு, நாயக்க மன்னர்கள் ஓர் இரு நூறு ஆண்டுகளுக்கு மேல், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோவை, திருநெல்வேலி, இராமநாதபுரம் இவை யடங்கிய பகுதியை ஆண்டு வந்தனர். செஞ்சி, தஞ்சாவூர் இப் பகுதி களிலும் நாயக்க மரபினரில் வேறு பிரிவினர் ஆண்டனர். இவர்களுக்கு முன் மதுரையில் இருந்துகொண்டு பெரும் பரப் புள்ள நாட்டைத் தமிழ் மன்னர்களான பாண்டியர்களே ஆண்டு வந்தனர். இப் பகுதிக்கு வடக்கே ஐதராபாத்துக்கு அருகிலுள்ள வாரங்கல் நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்த 'காகதியர்' என்னும் மரபினர் திருச்சி வரை யிலும் வென்று அவர்களது ஆட்சிக்கு உட்படுத்தி யிருந்தனர். மைசூர்ப் பகுதியினராக ஒய்சாள நாட்டு மன்னரும், திருச்சிக்கு அருகிலுள்ள சமயபுரத்தில் தலைமையிடம் அமைத்துக்கொண்டு ஆண்டிருக்கின்றனர்.

இம் மூன்று மரபினரையும் இசுலாமிய மன்னர்கள் வென்று தமிழகத்தில் அவர்களது ஆட்சி சிலகாலம் நடத்தி வந்தனர். நாயக்க மன்னர்களின் ஆட்சி தோன்றுவதற்கு, இவ் இசு லாமியர் இடையீடே காரணம் என்பர்

இசுலாமிய ஆட்சிக்கு முன்பு பிற்காலச் சோழர் பேரரசு அவர்களுக்கு முன்பு பல்லவர்கள் ஆளுகை, பாண்டியர்களின் இரண்டாவது பேரரசு, இவை தமிழகத்தில் இருந்தன.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத மரபினரும் நாட்டை ஆண்டபோதிலும், தமிழே நாட்டில் ஆட்சிமொழியாக இருந்து வந்தது. இசுலாமியர் காலத்தில் உருதுச் சொற்கள் பல தமிழோடு கலந்து பயன்படுத்தப்பட்டன. திவான், பகதூர், தாசில்தார், சிரச்ததார், டபேதார், உசூர், கசானு முதலிய சொற்கள் இசுலாமிய ஆட்சியில் கலந்தவையே. அப்படியே, தெலுங்கையோ கன்னடத்தையோ பேசியவர்கள் காலத்து ஆட்சியில் அம்மொழிச் சொற்கள் சிலவும் அவர்கள் போற்றிவந்த அடிப்படையில் தமிழான அவர் மொழிகளிலே ஏற்றுக் கொண்ட சமற்கிருத மொழியின் சொற்கள் சிலவும் ஆட்சித் தமிழிலும் புகுந்தன. இவ்வளவேயன்றி, தமிழை இவர்கள் ஆட்சிக்குப் பயன்படுத்தாமல் புறக்கணித்து விடவில்லை. நாட்டின் ஆட்சி மொழி, தமிழாகவே இருந்து வந்தது.

இயேசுபிரான் பிறந்தபின்பு சில ஆண்டுகள் வரையில் இருந்த நிலை இது. அதற்கு முன்பு பல நூற்றாண்டுகள் சேர சோழ பாண்டியர்களின் பொற்கால ஆட்சி நடந்து வந்தது. இதனைச் சங்க காலம் என்பர். என்றென்றும் உலகம் போற்றற்குரிய இலக்கிய இலக்கணங்கள் உண்டான காலம். அக்காலத்தில் ஆட்சித் தமிழின் சிறப்பை யெடுத்துச் சொல்லவும் வேண்டுமா? வால்மீகி எழுதிய இராமாயண நூலிலேயே பிற மேன்மைகளோடு பாண்டிய நாட்டின் தமிழ் மொழியின் சிறப்பும் சொல்லப் பெற்றிருக்கிறது. இராமாயணமே, வடமொழியில் 'ஆதிகாவியம்' எனப்படும். அதற்கு முன்பு, சமற்கிருதத்தில் காவியம் இல்லை என்பது வெள்ளிடைமலை. வால்மீகி காலம் கி. மு. 500 என்பர்.

சேர சோழ பாண்டியர்களுக்கு முன்பும் நாட்டில் அரசாட்சி இருந்தது. இம் மூன்று மன்னப்பெருமரபுகள் உருவாவதற்கே மூலகாரணமாக இருந்த உள் ஆட்சி நிறுவனங்கள் பல விளங்கியிருக்கின்றன. அந் நிறுவனங்கள் ஆட்சி புரியப் பயன்படுத்திய மொழி தமிழ்மொழியே. வேறு மொழிக்கு அப்போது இடமில்லை. வடநாடு உள்பட, நம்நாடு முழுதும் தமிழே வழங்கி வந்த காலம் அது.

'சமற்கிருதம்' என்னும் சொல் செம்மையாகச் செய்யப் பெற்றது என்னும் பொருளைத் தருவது. செய்யப்பெற்ற காலம்

கி. மு. 1000 என்பர் ஆராய்ச்சியாளர். வங்காளப் பேரறிஞர் திரு சுனீத் குமார சாட்டர்சி என்பார் எப்படியும் இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பு 'சமற்கிருதம்' என்னும் மொழி ஒன்று உலகத்தில் இல்லை. தமிழ்மொழி உலகத்தில் தோன்ருது இருந்த காலம் எஃது என்று, எவரும் சொல்லி விடமுடியாது. அவற்றில் பழைய மொழி நம் அன்னை மொழி. அக் காலத்தைக் 'கல்தோன்றி, மண்தோன்ருக் காலம்' என்று வேண்டுமாயின், சொல்லிக் கொள்ளலாம்.

சமற்கிருதம் தோன்றுவதற்கு முன்பு வடநாட்டில் வழங்கி வந்த மொழி 'பிராகிருதம்' என்பதாகும். பிருகிருதி என்ருல் 'இயற்கை' என்று பொருள். இயல்பாக உருவான மொழியே பிராகிருதம். வடநாட்டில் ஆங்காங்கே பேசி வந்த தமிழ் மொழியுடன், மத்திய ஆசியாவிலிருந்து நம் நாட்டிற்குள் நுழைந்த ஆரியர் பேசிவந்த மொழியும் இயல்பாக ஒன்று கூடி அமைந்ததே 'பிராகிருதம்' என்பது. அம் மொழியில் இன்றும் நாம் வழங்கும் தமிழ்ச் சொற்கள் அப்படி அப்படியே இருக்கக் காணலாம். காட்டாகச் 'செட்டி' 'கட்டை' என்னும் தமிழ்ச் சொற்கள் பிராகிருதத்தில் 'செட்டி' 'கட்டை' என்றே இருக்க, சமற்கிருதத்தில் அவை 'சிரேஷ்டி' 'காஷ்ட' என்று உரு திரித்து அமையப்பட்டுள்ளன. பேச்சு வழக்கில் இருந்த சில சொற்களுடனேயே ஆரியர் நம் நாட்டிற்குப் புகுந்தன ராகலின், சமற்கிருதத்தை உருவாக்குவதற்குப் பெரும்பாலும் தமிழ்ச் சொற்களே அடிப்படையாக அமைந்தன என்பதில் ஐயமில்லை. இவ்வாருக அக் காலத்தில் ஆட்சி செய்த தமிழ் மொழியே சமற்கிருதத்தை உண்டாக்கி யிருக்கின்றது என்பது மிகையாகாது.

ஆரியர் வருகைக்கு முன்பே நாட்டின் வடபகுதியில் விளங்கி யிருந்த பெருநகரங்களான 'மொகஞ்சதரோ' 'ஆரப்பா' தமிழில் ஆட்சி புரிந்தன. அந் நகரங்களின் காலம் இன்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன்பு. அவை அழிந்து பட்டனவேனும், அவற்றில் காணப்பெறும் எழுத்துச் சான்று களைக் கொண்டு, அருள்திரு ஈராசுப் போன்று, பால் பற்றுமல், ஆராய்ந்து கூறும் அறிஞர்கள் அவ்விரு பெரு நகரங்களில் வழங்கியது தமிழ் மொழியேயென்று முடிவு கட்டுகின்றனர். இந்த நடுநிலை முடிவை எப்படியாவது மாற்றிவிட வேண்டும். 'தமிழ் அக் காலத்தில் ஆட்சியில் இல்லை' யென்றே கூற வைக்க வேண்டும் என்று இன்றும் சிலர் முயன்று வருவதைக் காணும்போது, அங்ஙனம் முயல்பவர்கள் 'தமிழர்' என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்களாகவே இருப்பதை யறியும்

போது, ''உள்ளம் பகீர் எனும், துயில் உருது இரு விழியும் இரவு பகலாய்''.

'மொகஞ்சதரோ', 'ஆரப்பா' நகரங்கள் செழித்து ஓங்கி விளங்கியிருந்த அன்றும், அஃதாவது 5,000 ஆண்டுகளுக்கு முன்பும், தமிழ் ஆட்சி மொழியாக இருந்தது என்பதை எவ்வளவு முயன்ருலும் மறைத்துவிட முடியாது.

அத் திரு நகரங்கள் தோன்றுவதற்கு முன்பே அன்னைத் தமிழ் அழகுடன் உலவி வந்தாள். எங்ஙனம் என்பதைக் காண்போம். விந்திய மலைக்கு வடக்கேயுள்ள பகுதி அக் காலத்தில் கடலாக இருந்தது. குமரிமுனைக்குத் தெற்கே காட்டாறுபோல இப்போதுள்ள இந்திய மாகடலுக்கு மாருக, பெரு நிலப்பரப்பு இருந்தது. தென்னகத்துக்கு மேற்கேயும் நிலமாக இருந்தது. இவ் வுண்மை நிலநூல் ஆராய்ச்சி யாளர்கள் பலர் அறிந்து கூறும் உண்மையாகும். தெற்கிலும் மேற்கிலுமுள்ள நிலப்பகுதிகள் கடலில் முழுகின. விந்திய மலைக்கு வடக்கேயிருந்த கடற்பகுதி நிலமாயிற்று. இதனை எண்பிக்க, இன்றும் இராசசுத்தான் பகுதி பாலைவனம்போல இருப்பதையும், இமயமலையை அகழ்ந்தால் அதில் திமிங்கிலம் முதலிய கடற்பொருள்கள் கிடைப்பதையும், ஆராய்ச்சி வல்லு நர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடபகுதிக் கடல் நிலமான பிறகு, தென்பகுதியிலிருந்த மக்கள் வடக்கேயும் சென்று குடியேறினர். அவர்கள் அமைத் தவையே 'மொகஞ்சதரோ', 'ஆரப்பா' போன்ற நகரங்கள். அங்ஙனம் குடியேறியவர் தமிழ் மக்களாவர். எனவே, இந் நகரங்கள் உண்டாவதற்கு முன்பே தென்னகத்தில் வழங்கி யிருந்த மொழி தமிழ்மொழி. அன்றும் தமிழ் அன்னையே ஆண்டு வந்தாள். தெற்கே இருந்த நிலம் கடலாகி, வடக்கே இருந்த கடல் நிலமாக மாறினும், தென்னகம் என்றும் அழியாத நிலப்பரப்பாக இருந்து வந்திருக்கிறது. மக்கள் இனம் முதன் முதலில் உலகில் தோன்றிய பகுதி இதுவே என்பர், மக்கள் தோற்ற இயல் அறிந்தவர்கள். அவர்கள் முதன் முதலில் பேசிய மொழியே தமிழ்.

சங்க காலத்திலேயே தமிழகம், கிரேக்க, இத்தாலிய நாடுகளுடனும், சீன, சப்பான் நாடுகளுடனும் கப்பல் வணிகம் செய்து வந்திருக்கிறது. தமிழ் நூல்களில் இவற்றிற்கான சான்றுகள் இருப்பதோடு, அந்தந்த நாட்டு வரலாற்றிலும் இவற்றிற்குரிய சான்றுகள் உள்ளன. பிற சான்றுகளும் இல்லாமல் இல்லை. அவ் வணிகத்திற்குரிய கப்பல்கள், இக்

காலத்தில் மேல் நாட்டினர் அமைக்கும் கப்பல்களைப் போன்று அத்துணை அறிவியல் நலங்கள் கொண்ட படைப்புகளாக இல்லாவிட்டாலும், வெறும் படகுகளாக இருந்திருக்க முடியாது.

இங்கிருந்து எத்தனையோ ஆயிரம் மைல்கள், எத்தனையோ மாதங்கள் கடலில் பயணம் செய்வதற்கு ஏற்றனவாக அவை இருந்திருக்க வேண்டும். ஓர் ஆண்டு காலமாவது அவற்றில் சில மக்கள் வாழ்வதற்கு வேண்டிய நன்னீர், உணவு வகைகள், உறங்கு வசதிகள், மருத்துவ உதவிகள் இவை போன்றவை அவற்றில் கிடைப்பதற்கு வழி செய்திருக்க வேண்டும். இக் கப்பல்களை இயக்குவதற்கு, 'கடலியல்', 'வானியல்', 'கோளியல்', 'காற்றியல்' முதலிய அறிவியல் அறிவு நிரம்பியிருக்க வேண்டும். கப்பலைச் செய்வதற்கான பொறியியலும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

இத்துணை அறிவியல் படிப்பும் தமிழ்மொழியில் இருந்திருக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். இன்று அவை கிடைக்கவில்லை யென்பதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. அவற்றை இங்கே விளக்குவதற்கு இடம் போதாது.

இங்ஙனமே, தமிழகத்தில் கப்பல் போர்கள் நடந்துள்ளன. சங்ககாலச் சேர சோழ பாண்டியர்கள் கப்பல்படை உடையவர்களாக இருந்தனர். பிற்காலச் சோழர்களின் அயல்நாட்டுக் கப்பல் போர்கள் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுகளிலே காணலாம். வணிகக் கப்பல்களைச் செய்தல் போலவே, போர்க் கப்பல்களையும் தமிழர்கள் செய்தனர். அவற்றை அமைப்பதற்குரிய 'கப்பலியல்' அறிவு, தமிழ் நூல்களில் பொதிந்திருக்க வேண்டும்.

தமிழிலுள்ள சில சொற்களே, தமிழில் அறிவியற் செய்திகள் இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்று பகரும். நிலத்திற்கு 'ஞாலம்' என்னும் சொல்லை இன்றும் பயன்படுத்துகிறோம். 'நாலுதல்', 'ஞாலுதல்' என்றால் தொங்குதல் என்று பொருள். தொங்குகின்ற அறிவுக் கருவியை 'நாக்கு' என்கிறோம். தெலுங்கில் அதற்கு 'நாலிக' என்று பெயர். தொங்கும் வாயையுடைய பானையை 'நால்வாய்' என்கிறோம். தூக்குப் போட்டுக் கொள்வதை 'நான்று கொள்ளுதல்' என்கிறோம். நில உருண்டை வானவெளியில், ஆதாரம் ஏதும் இன்றித் தொங்கிக் கொண்டிருக்கும் உண்மையை உணராமலா தமிழன் 'ஞாலம்' என்னும் சொல்லை ஆக்கியிருப்பான்? நிலம் தட்டையானது என்று உலகின் வேறு பகுதியிலிருந்த

'அறிஞர்கள்' கருதியிருந்தபோது, அஃது உருண்டையானது என்று சொன்ன அயல்நாட்டுப் பேரறிஞனுக்கு உயிர்த் தண்டனை கொடுப்பதற்கு முன்பே உலகம் உருண்டையானது என்று தமிழர் கண்டிருந்தனர்.

'ஞாயிறு' என்னும் சொல்லின் அறிவியற் சிறப்பைக் காண்போம். ஞா = நடு, இறு = இறுகப் பிடித்திருத்தல். ஞாயிறு = நடுவில் இருந்துகொண்டு தன்னைச் சுற்றும் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய உருண்டைகள் நிலை குலையாமல் இருக்குமாறு இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. ஞாயிறு மண்டலத்தைப் பற்றிய அறிவு தமிழருக்கு எத்துணை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உதித்திருக்க வேண்டும். ஞாயிற்றால் பற்றிப் பிடித்துக்கொள்ளப்பெறும் திங்கள் செவ்வாய் முதலியவை 'கோள்கள்' எனப் பெற்றன. சமற்கிருதத்தில் இவற்றைக் 'கிரகங்கள்' என்றனர். கிரகத்தில் = பற்றிக் கொள்ளுதல் கிரகிக்கப்படுவதால் கிரகங்கள் ஆயின. சமற்கிருத மொழி செய்யப்படுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே 'கோள்' என்னும் சொல் தமிழில் வழங்கி வந்திருக்க வேண்டும்.

நில உருண்டை தன்னைத்தானே சுற்றுகின்றது என்று தமிழருக்குத் தெரிந்திருந்தது. கிழக்கு நோக்கியே சுற்றுவதும் தெரிந்திருந்தது. இந் நில ஊர்தியில் ஏறிச் செல்லும் நாம், இயற்கையுடன் பொருந்திய வாழ்வு வாழ வேண்டுமாயின், இவ்வூர்தி இயங்கும் திக்கு நோக்கியே இதில் நாமும் இருப்பதே இன்றியமையாதது. வண்டி ஓடும் திசையைப் பார்த்தபடி அமர்வதுதானே நாம் விரும்புவது, மாறி அமர்ந்தால், மயக்கம் முதலிய நலக்கேடுகள் சிலருக்கு வருவதையும் காண்கிறோம். எனவே, மற்ற நேரங்களில் இயலாவிட்டாலும், இயற்கைப் பெரும்பொருளுடன் மனம் ஒன்றுவதற்குச் செய்யும் இறைவழிபாடுகளிலும், திருமணம் முதலிய வாழ்வின் சிறப்பான நிகழ்ச்சிகளிலும், நாம் கிழக்கு நோக்கி அமரவேண்டும் என்று நம் முன்னோர் நமக்குக் குறிவைத்துப் போயிருப்பது, உலகில் நாம் இயற்கையோடு ஒத்த நல் வாழ்வு வாழவேண்டும் என்பதற்காகவேயாகும்.

திருமணக் காலத்திலும், கோயில்களிலும் பிற சில நல்ல நிகழ்ச்சிகளிலும் வருவதும், நாம் இயற்கையுடன் ஒன்றி வாழ வேண்டும் என்பதற்காகவேயாம். நில உருண்டை, ஞாயிற்றைச் சுற்றி வருகிறது என்னும் உண்மையை நம் முன்னோர் அறிந்திருந்ததோடு, அது வலமாகவே சுற்றி வருகிறது என்னும் செய்தியையும் அறிந்திருந்தனர். அதன் பயனாகவே, நாம்

சுற்றும்போதும், வலமாகச் சுற்றவேண்டும் என்று வகுத்து வைத்தனர்.

இயற்கையை யெதிர்த்துச் செய்யும் செயல்களில் இடமாகச் சுற்றுவதே பொருத்தம் என்றும் தெரிந்திருந்தனர். எண்ணின் இயற்கை யமைப்பைச் சிதைத்து அதிலிருந்து எண்ணெயைப் பிழிந்தெடுப்பதற்கு அதனைச் செக்கில் ஆட்டும்போது, செக்கின் இயக்கம் இடமாக இருப்பதை யறிவோம். செக்கு மாடுகளை வலமிருந்து இடமாகவே ஓட்டுகிறார் செக்கோட்டி. சூடான நீரை ஆற்ற வேண்டியபோது, நீருள்ள ஏனத்தைச் சுழற்றுகிறோம். அதையும் இடமாகவே செய்வதே இயல்பான வழக்கமாய் அமைந்திருப்பதைக் கவனித்தார் அறிவர். வெந்நீர் வெப்பான இயற்கைத் தன்மையை மாற்றுவதற்குச் செய்யப் பெறும் செயல் இஃது ஆதலின் இடமாகச் சுழற்றுவது தேவையாகிறது. கல் ஏந்திரத்தில், உளுந்து முதலியவற்றை உடைக்கவோ மாவாக்கவோ இட்டுச் சுற்றும்போது இடமாகச் சுற்றுவதே மரபு. உளுந்தின் இயற்கைநிலையை மாற்றுவதற்கு ஆற்றும் செயல் இதுவாகலின், இடமாகச் சுழற்றுவது தேவையாகிறது.

இவ் அறிவியல் உண்மைகளைத் தமிழன் அறிந்திருந்த போது அவற்றைக் குறிக்கும் சொற்கள் அன்றே தமிழில் அமையாமல் வேறு எம்மொழியில் அமைந்திருக்கும்?

சிலப்பதிகாரத்தில் சொல்லப்பெறும் 'வெள்ளிடை மன்றம்' 'இலஞ்சி மன்றம்' 'ஒளிகால் மன்றம்', 'பூதச் சதுக்கம்', 'பாவை மன்றம்' முதலிய ஐந்து மன்றங்களை உன்னித்து எண்ணினால், அவை இக்காலத்து கணிப்பங்கள் (Computors) போல அல்லவா தோன்றுகின்றன? கணிப்பம் செய்யும் வியக்கத்தக்க செயல்களைக் காண்போர்க்கு, இம் மன்றங்களும் அக் கணிப்பங்கள் போன்றே அமைக்கப் பெற்றிருந்தன என்று எண்ணுவது தவறாகுமா?

'வான ஊர்தி' என்னும் பழந்தமிழ்ச் சொல், தமிழன் தடுக்கி விழுந்து பெற்ற சொல்லாகுமா? அத்தகைய கருவியைப் பற்றி அவன் அறிந்திருந்தான் என்று கருதுவது பொருத்தந்தானே? 'வலவலன் ஏவா வான ஊர்தி' என்று வழங்கிய தொடர் இக்காலத்து Pilotless Planes' போன்றவற்றைத் தெரிந்து மொழியில் தொடராக வன்றோ தோன்றுகின்றது. இச் சொற்கள் வழங்கிய காலத்திற்கு முன்பே, அவற்றால் குறிக்கப்பெறும் கருவிகள் தமிழகத்தில் இருந்தன என்று எண்ணுவதற்கும் இடமுள்ளதன்றோ?

இவ்வாறாக, தமிழ்மொழி எவ்வளவோ காலத்துக்கு முன்பிருந்தே, ஆளுந்திறம் பெற்று இயங்கிவந்தது என்பதற்கு, எத்தனை எத்தனையோ சான்றுகள் கிடைக்கின்றன. ஆங்கிலேயர் ஆட்சியில் ஒரு நூற்றாண்டு தமிழைத் தள்ளி வைத்து ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்துவிட்டது கொண்டே, தமிழ் இன்று ஆட்சிமொழியாக வருவதற்குரிய ஆற்றல் அற்றது என்று எவரேனும் எண்ணுவது அறிவுடைய செயலாகுமா? 'அன்றும் ஆண்ட தாய்' எண்ணும்போது, அந்த 'அன்றுக்கு' எத்துணை நிரம்பிய பொருளுண்டு என்பதை இங்குக் கண்டோம். வரலாறு காணாத காலத்தையும் அவ் 'அன்று' குறிப்பதையும் பார்த்தோம்.

'அன்றும் ஆண்டதாய்', இன்றேயன்றி, என்றும் ஆட்சி புரிந்து நிலவ ஆவன செய்வோமாக!

(தொடரும்)

ஆட்சிமொழியாகத் தெலுங்கு


ஆந்திர நாட்டில் 1956 இலிருந்து தெலுங்கே ஆட்சிமொழியாக வேண்டுமென்று திரு வாவிள்ள கோபால கிருட்டிணையா ஒன்பது முறை சட்டமன்றத்தில் முயன்று 1971 இல் தான் அது நிறைவேறியது. முதலில் 23 அரசுத் துறைகளில் மாவட்ட அளவில் மட்டும் அதைச் செயல்படுத்தினர். இந்த இரண்டு ஆண்டுகளில் அஃது எந்த அளவு பயன்படுத்தப்பட்டது என்பதை அண்மையில் கணக்கிட்டுப் பார்த்தார்கள். பெயரளவுக்குக் கூட அது பயன்படவில்லை யென்றே அறிந்துள்ளனர்.

அதற்குரிய காரணங்களை ஆயும்போது மாவட்ட நிலையில் உள்ள எழுத்தர்கள் தெலுங்கில் எழுதுவதில் ஆர்வம் காட்டவில்லை யென்றும் உயர் அதிகாரிகள் போதிய ஊக்கம் கொடுப்பதில்லை யென்றும் ஆட்சிமொழியைச் செயல்படுத்தும் பொறுப்பு பெரிய அதிகாரியிடம் கொடுக்காது மேல்நிலை எழுத்தரிடமே ஒப்புவிக்கப் பட்டுள்ள தென்றும் கண்டறிந்தார்கள்.

தெலுங்கு மொழியில் போதிய சொல்வளமில்லை என்று கூறப்பட்டபோது, மொழியியலறிஞர் ப. கிருட்டிணமூர்த்தி, 'பயன்படுத்தும் போதுதான் சொற்கள் உருவாகுமென்றும், செடிக்கு உண்டாகும் புதுப்புது நோய்களுக்குப் பயிரிடுவோர் புதிய புதிய பெயர்களை உருவாக்குகிறார்களென்றும், முதலில் கருத்து உருவானால்தான் பின்னர் சொற்கள் உருவாகுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் தமிழக ஆட்சியாளர் தமிழை ஆட்சிமொழி ஆக்குவதில் ஆர்வங் காட்டியதுபோல் ஆந்திர ஆட்சியாளர் போதிய ஊக்கமும் ஆர்வமும் கொள்ளாமையினால்தான் தெலுங்கு அங்கு ஆட்சி மொழியாகப் பரவவில்லை யென்பது தெளிவாகிறது.

இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளையவர்கட்கு ஆயிரம் பிறைக்குமேல் ஆயுள்வளர் விழா




திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்
மீனாட்சி திருமணம்பற்றி இசைச்சொற்பொழிவாற்றுதல்




கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை
பரிசுப்பொருள் வழங்குதல்

3-11-1973 இல் ஆயிரம் பிறைகண்ட விழாச் செல்வர் செல்வியர்க்கு,



திருமுருக கிருபானந்த வாரியார்
புனித நீராட்டுதல்



கழக ஆட்சியாளர்
புனித நீராட்டுதல்

ஆயிரம் பிறைகண்ட அருந்தமிழ்ப் புலவர்

இயற்றமிழ் அறிஞரும் இசைத்தமிழ்க் காவலருமான செம்மங்குடி இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கட்கு ஆயிரம் பிறைக்கு மேல் ஆயுள்வளர் விழா (முத்து விழா) 3—11—73 சனிக்கிழமை யன்று காலை 11 மணியளவில் அவர்தம் சொந்த ஊரான கும்பகோணத்துக்கு அருகிலுள்ள செம்மங்குடி என்னுமூரில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

விழா அவர்தம் இல்லத்துக் கருகிலுள்ள சிவபெருமான் திருக்கோயிலில் சுற்றமும் நண்பர் குழாமும் புடைசூழச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள் தலைமையில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு 'மீனாட்சி திருமணம்' என்ற தலைப்பில் இசைச் சொற்பொழிவைக் கேட்டார்ப் பிணிக்குந் தகையதாய் நிகழ்த்தினார்.

தம் இசைச் சொற்பொழிவின் இடையிடை அருட்டிரு வாரியார் அவர்கள் திரு. கோதண்டபாணி பிள்ளை யவர்களின் அரிய தமிழ்த் தொண்டைப் பாராட்டிப் பேசினார். தம் வாழ்நாளில் எண்ணற்ற மணி விழாக்களைத் தாம் கண்டுள்ளதாகவும் ஆனால் முத்து விழாவை மட்டும் நான்கைந்துதான் பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார். எண்பது வயது வரை கணவன் மனைவியும் பிரியாது வாழ்வது பெரும் பேறென்று வியந்து கூறி வாழ்த்தினர்.

'பிள்ளை யவர்கள் சிறந்த ஆராய்ச்சியாளரென்றும் முதற்குறள் ஒன்றை எடுத்துக் கொண்டு அதிலுள்ள உவமையை விளக்குவதற்கு ஒரு பெரிய நூலே எழுதியுள்ளார். அண்மையில் அவர் எழுதிய 'திருமுருகாற்றுப்படைத்திறன்' எனும் நூலில் நச்சினார்க்கினியர் போன்ற பலருடைய உரைகளை மறுத்து உண்மையான புத்துரைகளைக் கண்டுள்ளார். அவர்களை நாம் வாழ்நாள் முழுவதும் போற்ற வேண்டும்' என்றார் வாரியார் அவர்கள்.

விழாத் தலைவர் தலைவியர்க்கு நிகழ்த்த வேண்டிய 'முத்து விழா' நன்னீராட்டையும் அருட்டிரு வாரியார் அவர்களே தொடங்கி வைத்தார்கள்.

விழா சிறப்பாக நடைபெறுதற்குச் செட்டிநாட்டரசர் டாக்டர் ராசா சர் முத்தையா செட்டியார் அவர்கள் தோன்றாத் துணையாய் நின்று ஆயிரம் வெண்பொற் காசளித்தும் காசியினின்றும் கங்கையின் புனித நீரை வரவழைத்தும் உதவியது திரு. பிள்ளையவர்கள்மீது அவர் எத்துணை மதிப்பும் அன்பும் வைத்திருக்கின்றனர் என்பதைத் தெளிவுற விளக்குகின்றதன்றோ ?

விழாவில் பல்வேறு சங்கங்களின் சார்பில் பாராட்டிதழ்கள் படித்தளிக்கப் பெற்றன. மலர் மாலைகளும் அணிவிக்கப் பெற்றன.

திரு பிள்ளையவர்கள் 'முத்து விழா'வைப் பாராட்டும் வகையில் மற்றொரு பாராட்டு விழா சென்னையில் திசம்பர்த் திங்களில் நடைபெறும். அதனை நடத்துதற்குச் செட்டி நாட்டரசர் சர் முத்தையசெட்டியாரவர்களைத் தலைவராகக் கொண்ட 'பாராட்டு விழாக்குழு' வொன்று விரைவிலே அமைக்கப்பெறும். திரு. பிள்ளையவர்கட்கு வாரியார் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை பின்வருமாறு :

வாழ்த்துரை

மாற்றுப் பொருளுரைத்த மாமதியோர் நாணமுரு
காற்றுப் படைக்கரிய ஆன்றஉரை—தோற்றுவித்த
கோதண்ட பாணிக் குணக்கோமான் வாழியவே
பூதலத்தோர் போற்றப் புகழ்ந்து.

அம்மவென விம்மலுற ஆற்றுப் படைக்குரையைச்
செம்மங் குடிவாழும் சீராளன்—செம்மையுறச்
செய்ய தமிழாலே செம்பாக மாயளித்தான்
வையம் மகிழும் மதித்து.

ஆழியென ஆழ்ந்துணர்ந்தே ஆற்றுப் படைக்குரையை
ஊழிவரை போற்ற உதவினனுல்—ஏழிசைசேர்
கோழியுயர் கோனருளால் கோதண்ட பாணிமிகு
வாழியபல் லாண்டு மகிழ்ந்து.

—திருமுருக கிருபானந்த வாரியார்.

செய்திகளும் குறிப்புகளும்

‘சட்டச் சொற்பொழிவுகள்’ தொடக்க விழா

சென்னை ஓய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தின் சார்பில் சட்டத்துறைப் பேரறிஞர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல். அவர்கள் நிகழ்த்த விருக்கும் ‘சட்டச் சொற்பொழிவுகள்’ தொடரை 16—10—73 அன்று சென்னை உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை பு. ரா. கோகுலகிருட்டிணன் அவர்கள் தலைமையில் தமிழக சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

‘சட்டத்தைத் தமிழில் கூற முடியுமா என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கையில் அதைப்பற்றிப் பல நூல்கள் தமிழில் எழுதியுள்ள தோடு அதுபற்றிச் சொற்பொழிவுத் தொடரையும் நிகழ்த்த முன் வந்துள்ள திரு மா. சண்முக சுப்பிரமணியம் அவர்களின் பேராற்றலை அமைச்சர் மாதவன் அவர்கள் புகழ்ந்து பேசினுர்கள். வட்ட, மாவட்ட நீதி மன்றங்களிலிருந்து உயர்நீதி மன்றம்வரை தமிழிலேயே தீர்ப்பு வழங்கும் காலம் விரைவில் வரவேண்டுமென்று அவர் கூறினுர். அதைச் சட்டத்தின் வழி நிறைவேற்றுவதைவிட நீதிமன்ற நடுவர்கள் தாங்களே முன்வந்து நடைமுறைக்குக் கொண்டு வருதல் நல்லது என்றுர். அப்படி அவர்கள் முன்வந்தால் அரசு அவர்களுக்குத் துணைநின்று வேண்டிய விதி முறைகளை வகுக்குமென்றுர்.

தலைமையுரை நிகழ்த்திய மாண்பமை பு. ரா. கோகுலகிருட்டிணன் அவர்கள் ‘நீதிமன்றங்களில் தமிழைக் கொணருவதைப் படிப்படியாகச் செயல் படுத்துவதில் தமிழரசு தயங்கக் கூடாது’ என்றுர்.

சொற்பொழிவுத் தொடர் நிகழ்த்த விருக்கும் தமிழ்நாடு சட்ட மன்றத் துறைச் செயலர் திரு மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் ‘தமிழில் சட்டக் கருத்துக்களைக் கூறுவது கடினமான செயலில்லை’ என்றுர். ஆங்கிலேயர்கள்கூட நீதிமன்றங்களில் இலத்தீனில் தீர்ப்புகள் வழங்கக் கூடாதென்றும் மக்களுக்குப் புரியக் கூடிய வகையில் ஆங்கிலத் திலேயே வழங்கப் பெறுதல் வேண்டுமென்றும் சென்ற நூற்றுண்டில்

சட்டம் நிறைவேற்றினர்கள். அதுபோல நாமும் மக்களுக்குப் புரியக் கூடிய தமிழில்தான் நீதிமன்றங்கள் நடைபெற வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தால்தான் இத்திட்டம் நிறைவேறும் என்றார். நீதிமன்றங்களில் இருக்கும் நடுவர்களில் ஒரு சிலரே தமிழ்ப் பற்றுக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். இங்கிலைமாறி எல்லோருமே தமிழுள்ளம் பெறுவார்களேயானல் இத்திட்டம் விரைவில் நிறைவேறும் என்றும் அவர் கூறினர்.

விழாத் தொடக்கத்தில் செயலாளர் திரு கெ. பக்தவச்சலம் வரவேற்புரை நிகழ்த்தினர். செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு மணவை முஸ்தாபா அவர்கள் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

தொடக்க விழாவுக்குப் பின், முதற் சொற்பொழிவு 9—11—73இல் நடைபெற்றதென்பதும் சொற்பொழிவுகள் யாவும் முடிந்தபின் அவை நூல் வடிவில் வெளியிடப்பெறும் என்பதும் அறிந்து மகிழ்தற்குரியன.

இசைப் பேராசிரியர் சாம்பமூர்த்தி மறைவு

இசைப் பேரறிஞரும் சென்னை, வேங்கடவன் பல்கலைக் கழகங்களின் பேராசிரியருமான பி. சாம்பமூர்த்தி அவர்கள் தம் 73 ஆவது அகவையில் 1973 அக்டோபர் 22 ஆம் நாள் மறைவுற்றார்.

பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர் யாரும் இசைத்துறையில் புகாத நாளில் பொதுப் பட்டமும் சட்டத்துறைப் பட்டமும் பெற்ற இவர் தம் வாழ்நாள் முழுவதையும் இசைக்காகவே செலவிட்டது பாராட்டுதற்குரியதாகும். சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறையின் தலைவராக 25 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றபின் 3 ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றினர்.

இசைத்துறை பற்றிய பல அரிய ஆராய்ச்சி நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். இசைக்கருவிகள் பலவற்றையும் தாமே இசைத்துக் காட்டுவார். பல்வேறு இசைச் சங்கங்களிலும் இவர் பேருரைகள் நிகழ்த்தியுள்ளார். இவர்தம் அரும்பணியைப் பாராட்டி நடுவண் அரசு **தாமரையணி** (பத்மபூசண்) என்ற விருதை வழங்கிப் பாராட்டியுள்ளது. இத்தகைய பேரறிஞரின் மறைவு இசைத்துறைக்குப் பேரிழப்பாகும்.

இவர் 1927இல் இராயபுரம் நார்த்விக் மகளிர் பள்ளியில் இசையாசிரியராக இருந்தமையால் அப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக விருந்த திருவரங்க நீலாம்பிகையின் திருமண வரவேற்பில் சென்னை இலிங்கிச்செட்டித் தெரு 306ஆம் எண் இல்லத்தில், பிரபவ (1927) ஆவணித் திங்கள் 17ஆம் நாள் நடைபெற்ற தேவார இசைப் பேராசிரியர் சுந்தர ஓதுவார் நிகழ்த்திய இசையரங்கில் பிடில் வாசித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழிசைச் சங்கம் இவருக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டம் வழங்கியுள்ளது. பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் ஆண்டுதோறும் கலந்து கொண்டு தம் கருத்துக்களை வழங்கி வந்தனர்.

இந்தியில் எழுதுவோர்க்குப் பரிசு

இந்தி பயிலாத மாநிலங்களில் உள்ள இந்தி எழுத்தாளர்கள் பதின்மூவரைத் தேர்ந்தெடுத்து நடுவண் அரசுக் கல்வித்துறை பரிசு வழங்கியுள்ளது. தம்முடைய தாய்மொழி இந்தியாக இல்லாதிருந்தும் இந்தியில் நூல்கள் எழுதி வருவதைப் பாராட்டி நால்வர்க்கு ரூ. ஆயிரம் பரிசும்

ஒன்பதின்மர்க்கு ரூ. ஐந்நூறு பரிசும் கொடுத்து மேலும் இந்தியில் எழுத ஊக்குவித்துள்ளது.

தம் தாய்மொழி யல்லாத பிற இந்திய மொழிகளில் எழுதும் எழுத்தாளர்கள் அனைவருக்கும் இவ்வாறு பரிசளித்து ஊக்குவிக்க வேண்டியது நடுவண் அரசின் கடமையாகும். அதை விட்டு இந்தியில் எழுதுவோர்க்கு மட்டும் பரிசளிப்பது இந்தித் திணிப்பும் பிறமொழிப் புறக்கணிப்பும் ஆவதோடு இந்திய ஒருமைப்பாட்டுக்கு முரணான செயல் ஆகும்.

தொழிலதிபர் கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் மறைவு

மதுரைத் தொழிலதிபர் கருமுத்து தியாகராச செட்டியாரவர்களின் மூத்த திருமகனார் திரு கருமுத்து தி. சுந்தரம் செட்டியாரவர்கள் **23—10—73** இல் மதுரையில் 58 ஆம் அகவையில் மாரடைப்பினால் காலமானார்கள் என்ற செய்தி யறிந்து வருந்துகிறோம். திரு செட்டியாரவர்கள் திருசிவகாமி ஆலை, திரு மீனாட்சி ஆலை ஆகியவற்றின் இயக்குநராக இருந்து திறம்பட நடத்தி வந்தார். தியாகராசர் பொறியியல் கல்லூரியின் செயலாளராகவு மிருந்தார். அத்துடன் தமிழ்மொழியினிடத்துப் பற்றும், நல்ல தமிழ்ப் பயிற்சியும் உடையவர். கழகத்தோடு தொடர்பு கொண்டு கழகத்தின் நற்பணிகளுக்கு ஆதரவு காட்டி வந்தார். 1955 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நெல்லையில் நடைபெற்ற சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பரிபாடல் மாநாட்டினைத் தொடங்கி வைத்துத் தமிழின் சிறப்பினைக் குறித்து அரியதோர் உரை நிகழ்த்தியமையைத் தமிழ் அன்பர்கள் அறிவர். இத்தகைய அறிஞரின் மறைவு தொழில் உலகிற்கும், தமிழ் உலகிற்கும் பேரிழப்பாகும். அருமை மைந்தரை இழந்து வருந்தும் கருமுத்து தியாகராச செட்டியார் அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திரு. கிருஷ்ணசாமி நாயுடு மறைவு

தமிழ்நாடு காங்கிரசின் முன்னாள் செயற்குழுத் தலைவரும், சட்டமன்ற மேலவை உறுப்பினருமான திரு கிருட்டிணசாமி நாயுடு அவர்கள் தமது 72 ஆவது அகவையில் மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் காலமானார்கள் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம். திரு நாயுடு அவர்கள் பழம்பெரும் நாட்டுப் பற்றாளர். இவர்கள் செயற்குழுத் தலைவராயிருந்த காலையில் திரு குமாரசாமி ராஜா அவர்கள் தமிழக முதல்வராக இருந்தார். திரு ராஜா அவர்கள் கழகத்திடம் மிகுந்த பற்றுக் கொண்டவர். இப்போது கழகம் நடைபெற்றுவரும் பிராட்வே கட்டிடம் கழகத்திற்குக் கிடைக்கும் வண்ணம் பரிந்துரை செய்தவர் என்பதும், அவர்கள் ஒரிசா மாநில ஆளுநராக விருந்தபோது தமதூராகிய இராசபாளையத்தில் அமைத்துள்ள காந்தி மண்டபத்தில் நிறுவிய நூல் நிலையத்துக்குக் கழகத்திடம் நூல்களை வாங்கும்படி திரு நாயுடு அவர்கட்கு எழுதியதும் திரு. நாயுடு அவர்கள் அதற்குத் துணை நின்றதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கவை. மறைந்த திரு நாயுடு அவர்களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

இலக்கணச் சொற்பொருள் விளக்க அகரவரிசை பகுதி-க

—தொகுப்பாசிரியர் : புலவர் இரா. இளங்குமரன்

இதன்கண் எழுத்து, சொல் என்னும் இரு பகுதிகளும் அடங்கியுள்ளன. பள்ளி மாணவன் முதற்கொண்டு இலக்கண ஆராய்ச்சியாளர் ஈருக அனைவருக்கும் பயன்படும் வகையில் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் முறையே அகரவரிசைப் படுத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அகராதியைப் புரட்டி இலக்கியச் சொற்களுக்குப் பொருள் காண்பது போல் இதன் துணைகொண்டு சொல்லிலக்கண விளக்கங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். நூலகங்கள் தோறும் இருக்க வேண்டிய இலக்கண நூல். விலை 7-50

காட்டு வளம்—உ. அஞ்சன மழகிய பிள்ளை, பி.எசி. (ஏ.ஜி.)

நாட்டில் பயிர் வளர்த்தல் போலக் காட்டில் மரம் வளர்த்தலும் வேளாண்மையின் பாற்பட்டதே. காட்டு வளம் பெருகுவது எப்படி? காடுகளையும் காட்டு விலங்குகளையும் பாதுகாத்தலின் இன்றியமை யாமை, இன்ன பிற செய்திகள் இந் நூலின்கண் விளக்கப் பட்டுள்ளன. முன்னர்ப் 'பழவளம்' என்னும் நூலை எழுதிய ஆசிரியரே இக் காட்டு வளத்தையும் வளம்பட எழுதியுள்ளார். கல்லூரிகளிலும் பொது நூலகங்களிலும் இருக்க வேண்டிய பயனுள்ள நூல்.

விலை 8-75

பறவைகளின் கதை —என். கே. வேலன், பி.ஏ.

பேசாத பறவைகளையும் பேசவைத்துப் பறவைகளைப் பற்றிய ஒரு சிறு கதையினையே உருவாக்கியுள்ளார் இந் நூலாசிரியர். சிறுவர்கள் விரும்பிப் படிக்கும் வண்ணம் சிறந்த குழந்தை இலக்கியமாகப் படங்களுடன் வெளிவந்துள்ள அழகிய பதிப்பு

விலை 2-75

ஒரே ஒரு பிள்ளை —புலவர் சு. தமிழ்வேலன், க.து.

இஃது அரசினர் பரிசு பெற்ற நூல். தமிழ் இலக்கியச் சுவை, குடும்ப வாழ்க்கை, கடமை உணர்வு இன்னபிற செய்திகள் கதை வடிவில் விளக்கப்படுகின்றன. இளமையிற் கல்வி பயிலத் தவறியோர் முதுமையில் படித்துப் பயன்பெற உதவும் வகையில் எழுதப் பட்டுள்ளது.

விலை ரூ. 2 50

அம்புலிப் பயணம்

—டாக்டர் ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பி.எசி.பி.டி.

நிலவுலகினின்று நிலா உலகிற்குப் பயணம் செய்யும் முயற்சியில் பன்னெடுங் காலமாக ஈடுபட்டு வரும் மனிதனின் முயற்சி வெற்றிபெற்ற காலம் இது. இத் துறையில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் பெற்றுள்ள வெற்றிகளையும், உருசியா மேற் கொண்டுள்ள முயற்சிகளையும் பற்றி விளக்கமாகக் கூறுகிறது இந் நூல். சிறுவர்கட்குப் பயன்படும் வகையில் படங்களுடன் கூடிய அழகிய பதிப்பு.

விலை 3-50

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்—டாக்டர் ந. சஞ்சீவி

சங்க இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிகள் பல. அவ்வாராய்ச்சி பற்றிய அட்டவணைகள் அடங்கிய இந்நூல் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படத் தக்க நூலாகும். 25 00

சோவியத் மக்களோடு—கெ. து. சுந்தரவடிவேலு

இந்நூல்வழி சோவியத் நாட்டு மக்களின் இயல்புகளையும், அந்நாட்டு நிலையினையும் அறியலாம். 3 50

சமுதாய நோக்கு—சாலை இளந்திரையன்

இன்றைய சமுதாய நிலையினை ஆராய்ந்து கூறும் ஒரு புதிய இலக்கியம். 3 00

திருமலை நாயக்கர் வரலாறு—பேராசிரியர் அ. கி. பரந்தாமனார்

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் வரலாற்றினைச் சுவைபட கூறும் வரலாற்றுநூல். 5 00

ஒப்பிலக்கிய அறிமுகம்—தமிழண்ணல்

பிற நாட்டு இலக்கியங்களையும் தமிழ் நாட்டு இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ள ஆராய்ச்சி நூல். 4 00

பாரதிதாசன் பாடல்களில் இயற்கை—டாக்டர் நசிம்தீன்

பாவேந்தர் பராதிதாசனவர்கள் பாடல்களுள் இயற்கையைப்பற்றிய பாடல்களின் திறனாய்வு. 4 00

சேலம் மாவட்டக் கோயில்கள்—அ. இராசேந்திரன்

சேலம் மாவட்டத்திலுள்ள கோயில்கள் பற்றிய விளக்கங்களை அறிய விழைவார்க்குத் துணைபுரியும் நூல். 4 50

இலக்கிய நாடகங்கள்—ஏ. என். பெருமாள்

இந்நூல் வழி, இலக்கிய நாடகங்களின் சிறப்பினை அறிந்து இன்புறலாம். 3 00

காப்பியத்திறன்—சோம இளவரசு

ஒன்பது தலைப்புகளில் பல்வகைக் காப்பியங்கள் பற்றிய அரிய கட்டுரைகளின் தொகுப்பு. 3 50

மணிமண்டபம்—கோவி மணிசேகரன்

சோழர் கால வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்ட புதினம். 9 00

பெரியபுராண ஆய்வுரை—மறை திருநாவுக்கரசு

இதன்கண் சுந்தரர் வரலாற்று ஆய்வுரை முதற் பகுதியாக வெளிவந்துள்ளது. பெரியபுராண ஆய்வாளர்கட்குப் பெரிதும் துணைபுரிய வல்ல ஆராய்ச்சி நூல். 6 50

அப்பர் அச்சகம், சென்னை-1.